சாரதா ஓர் ஒப்பாய்வு

கவிஞர்
தி.முருகசுந்தரம்

பாரதிதாசன்
பரம்பரை
விலைமகன்
விரும்பிய
விருந்தை
விரோசன்

வினாக்களும்
விடைகளும்

சேகர் பதிப்பகம்

சுரதா

ஓர் ஒப்பாய்வு

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Suradha Oar Oppaayvu
Author	:	Murugu Sundaram
Language	:	Tamil
Edition	:	First
Date of Publication	:	23.11.1999
Paper Used	:	White Printing, D.Crown
	:	11.6 Kg.
Size of the book	:	18.5 X 12.5 cm
Type	:	13 Point
No. Pages	:	192
No. of Copies Printed	:	1000
Printer	:	Page Offset Printers Chennai -5
Publisher	:	SEKAR PATHIPPAGAM Chennia -78
Price	:	**Rs. 45.**
Subject	:	Criticism

சுரதா

ஓர் ஒப்பாய்வு

கவிஞர் முருகு சுந்தரம்

☎ 471 43 25

சேகர் பதிப்பகம்,

66/1 பெரியார் தெரு,

எம். ஜி. ஆர். நகர், சென்னை - 600 078

முதற் பதிப்பு : 23.11.1999

சுரதாவின் எழுபத்தொன்பதாம் ஆண்டு பிறந்தநாள் விழா வெளியீடு.

விலை : ரூ. 45.

ஒளி அச்சு:

அன்னை கணினி மையம்
சென்னை-33

அச்சிட்டோர்:

பேஜ் ஆப்செட் பிரிண்டர்ஸ்
சென்னை - 5

பொருளடக்கம்

பதிப்புரை 7

1. முன்தானை 17
2. சுரதா பதித்த சுவடுகள் 21
3. சுரதாவுடன் நேர்காணல் 23
4. சுரதா அரும்பிய நேரம் 33
5. மெய்விளக்கக் கோட்பாடும் சுரதாவும் 41
6. சுரதாவின் படிமங்கள் 73
7. உவமைக் கவிஞர் 81
8. சுரதாவின் நடை 95
9. சுரதாவின் புலமை நுட்பம் 107
10. சுரதாவின் கதைக் கவிதைகள் 119
11. சுரதாவின் புதுமை விருப்பம் 129
12. மனிதர் சுரதா 157
13. கவிஞர் சுரதா 165
14. அவரைப் பற்றி அவர் 171
15. அவரைப் பற்றிப் பிறர் 175
16. அவரைப் பற்றி நான். 177

கவிஞரைப் பற்றி...

பிறந்த ஊர், நாகப்பட்டினத்திற்கு அருகி லுள்ள பழையனூர். தந்தையார் நெசவாளர் திருவேங்கடம் அவர்கள். தாயார் சண்பகம் அம்மையார். கவிஞரின் இயற்பெயர் இராஜகோபால்.

மகாகவி பாரதியார் மறைந்த 1921-ஆம் ஆண்டில், நவம்பர் 23-ஆம் நாள் தோன்றிய இவர், ராஜாமடத்திலும், ஒரத்த நாட்டுப் பள்ளியிலும் படித்தார். அதன் பின் இலக்கணப் பெரும் புலவரான சீர்காழி. அருணாசல தேசிகர், மெய்யக் கோனார் முதலியவர்களிடம் முறையாகத் தமிழ் பயின்றார்.

பதிப்புரை

தனிப்புகழ் கொண்ட சாதனையாளர்!

தமிழகக் கவிஞர்களில் தனித்தன்மை மிக்கவர் உவமைக் கவிஞர் சுரதா.

இவர் புரட்சிக் கவிஞரின் சீடர்; சுப்புரத்தினதாசன் எனப் பெயர் சூட்டிக் கொண்டவர். அதன் சுருக்கமே சுரதா எனும் பெயர். இதை நாடறியும்.

எழுபத்தெட்டு வயதை முடித்து எழுபத்தொன்பதாம் வயதைத் தொட்டுள்ள நேரத்தில் அவரைப் பற்றிய இந்த நூல் வருகிறது.

1965ஆம் ஆண்டில் அவர் எழுதிய கவிதைத் தொகுப்பினை, சுரதாவின் தேன்மழையை எமது பதிப்பகம் வெளியிட்டது. தேன்மழைக்குத் தமிழக அரசின் முதற்பரிசை அப்போதைய முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் வழங்கினார்..முப்பதாண்டுகளுக்குப் பின் தேன்மழை நூலுக்காக உவமைக் கவிஞர் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் இராஜராஜன் விருதும் பரிசும் பெற்றார்.

முப்பதாண்டுகளாக உவமைக்கவிஞரிடமிருந்து குறிப்பிடும்படியான நூல் எதுவும் வெளிவரவில்லை. இப்பொழுது சுரதா அவர்களைப் பற்றி ஓர் ஒப்பாய்வு நூலை எழுதியுள்ளார் கவிஞர் முருகு சுந்தரம் அவர்கள்.

பாவேந்தரிடமிருந்து வேறுபட்டுத் தனித்து இயங்கிய சுரதாவின் கவிப்போக்கை இந்நூலாசிரியர் மேல் நாட்டுக் கவிஞரோடு ஒப்பிட்டுக் காட்டியுள்ளது புதியதாகும்.

கவிஞர் சுரதாவின் கவி அரசும் ஆட்சிப் பரப்பும் குறிப்பிடத் தக்க தனித்தன்மையானவை.

வெள்ளைப் பாட்டுகளும், சள்ளைப்பாட்டுகளும் பெருகியுள்ள காலம் இது. உள்ளுறை உவமங்கள் செறிந்த, உணர்ந்து மகிழத்தக்க, உள்ளம் அள்ளும்படியான உயர்ந்த கவிதைகள் தோன்றாதா எனும் ஏக்கம் உள்ளது. சுரதா அவர்களின் பழங் கவிதைகள் இப்பொழுதும் நெஞ்சில் ஊஞ்சலாடுவது ஓரளவு ஆறுதலாயுள்ளது.

ஒன்றன்மேல் ஒன்றாக அடுத்தடுத்துப் பல செய்திகளை அடுக்கிக் காட்டும் சுரதாவின் உத்தியும் உழைப்பும் இளங் கவிஞர்களிடையே பரவவேண்டும். பரந்த நூலறிவும், பக்குவப் பட்ட தொகுப்பறிவும், சிறந்த மொழியறிவும் சேர்ந்திருக்கும் கவிஞர்களே காலத்தை வென்று காட்சிதருவார்கள். அவர்களே சங்கச் சான்றோரின் சாரமாய், சந்ததியினராய்த் திகழ்வார்கள்.

கீரைகளைப்போல் சிலநாட்கள் மட்டுமே வாழும் கவிதைகள் கீர்த்தியைச் சேர்க்குமா? செய்திக் குறிப்பெல்லாம் கவிதை ஆகுமா? சிந்திக்கவும், எண்ணி எண்ணி எப்போதும் உணர்ந்து உள்ளம் மகிழச் செய்வதே கவிதையாகும். திட்பமும் செறிவும் மிக்க சொல்லாரமே கவிதையாகும். ஆழ்ந்த உணர்வின் வெளிப்பாடுகளே உயிர்ப்பான கவிதை ஆகும். அவசர வெளியீடுகள் அவ்வப்போதே மறைந்து விடும்.

உணர்ச்சி நிலையை ஓசையாலேயே உணர்த்தும் சங்கச் செய்யுள்களின் உயர்வை உன்னிப்போடு ஊன்றிக் கவனித்துக்

கவியுள்ளம் கனிந்திட வேண்டுமே. ஆழங்கால் படுதல் என்று தோய்ந்திருக்கும் நிலையைச் சுட்டுவதையும் கருதவேண்டும்.

எடுத்தேன், எழுதினேன்; இதோ கவிதை!- என்கிற நமது நிலை கவிதைக் கலையை நாம் அறியாமல் இருக்கிறோம் என்பதன் வெளிப்பாடு.

கவிஞனும் சுவைஞனும் நெருங்கிய நண்பர்களாகவே இருப்பர். இருவரது நிலையும் கலையும் பிரிக்க முடியாதவை.

பல்லாண்டுகளாகக் கவிதை எழுதுவதைக் கைவிட்ட கவிஞர் வேறு புதுமையான வரலாற்றைப் படைத்து வருகிறார். வரலாற்றுப் பார்வையுள்ள இவர் புதிய வரலாறுகளைத் தொடர்ந்து படைத்து வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

சிறந்த தமிழ் அறிஞர்களின் பிறந்த ஊர்களில் மண் எடுத்தார். பலதுறைகளில் கவிஞர்களைக் கொண்டு பல கவியரங்குகளை நடத்திச் சாதனை புரிகிறார். சிலைக் கவியரங்கமும் அதன் தொடர்ச்சியே. தெருவுக்குத் திருவிழா, இல்லந்தோறும் திருவள்ளுவர் படத்திறப்புவிழா, வீடுகளில் கல்வெட்டுப் பொன்மொழி பதிக்கச் செய்தல் போன்ற பல புதுமைகளைத் தொடர்ந்து செய்து வருகிறார்.

ஒருவர் பிறந்த தேதியில் பிறந்த புகழ்பெற்றவர்கள், ஒருவர் திருமணம் புரிந்த திங்களில் திருமணம் புரிந்து கொண்ட புகழாளர்கள், குறிப்பிட்ட திங்களில் வெளியான தமிழ்க் கவிதை நூல்கள் என்னும் பட்டியல்களைத் தொகுத்து நூல்களில் வெளிவரச் செய்து, புதிய வரலாற்றைப் படைத்து வருகிறார்.

இவரது அரிய செய்திக் குறிப்புகளின் தொகுப்பு நாட்டுக்கும் மொழிக்கும் தேவையானது. முறையாக அதை வெளிப்படுத்தினால்

பெரும் பயன்தரும். அதுபற்றி அவர் என்ன நினைத்திருக்கிறாரோ தெரியவில்லை. தகுந்த உதவியாளர்களை வைத்து அவர் தொகுத்துத் தந்தால் பிறர் வெளியிட வாய்ப்புண்டு. அவரும் வெளியிடலாம்.

நீண்ட இடைவெளிக்குப் பின் அவர் பற்றிய நூலை வெளியிடும் நேரத்தில் இத்தகைய விழைவை வெளியிடாமல் இருக்க முடியவில்லை. அன்பாலும் அணுகிப்பழகும் பண்பாலும் எண்ணற்ற பேரை எடுபிடிகளாக்கி, நினைக்கும் புதுமைகளை நிகழ்த்தி வரும் நிகரற்ற ஆற்றல் மிக்கவர் கவிஞர்! அவரது சொல்லும் செயலும் தனித்தன்மை உடையன என்பதை நிகழ்காலம் அறியும். வருங்காலம் நினைவு கொள்ள வேண்டுமல்லவா? அதற்கு இந்த ஒப்பாய்வு நூல் உதவும் என்று நம்புகிறேன்.

சிறந்த கவிஞரும் சிந்தனையாளருமான சேலம் முருகு சுந்தரம் அவர்கள் இந்த நூலை எழுதியதன் மூலம் புதியதொரு முத்திரையைப் பதித்துள்ளார். இந்நூல் எமது சேகர் பதிப்பகத்தின் வாயிலாக வெளிவரவேண்டுமென்று அவர் விரும்பினார். நானும் ஆர்வத்தோடு வெளியிடுகிறேன். ஆசிரியருக்கு நன்றி.

சுரதா எனும் கவிமலரில் மொய்த்துச் சுவைத்த பலநூறு தேன்சிட்டுகளில் நானும் ஒருவன். புரட்சிக் கவிஞரின் கவிதைகளில் மூழ்கியிருந்தாலும், பாவலரேறுவாணிதாசனாருடன் பழகியிருந்தாலும், நெஞ்சம் நீங்காக் கவியரசர் கண்ணதாசன் அவர்களுடன் பழகிப் பணியாற்றியிருந்தாலும், சுரதா அவர்களின் ஈர்ப்பும் என்னை ஆட்கொண்டது.

ஒப்பிட முடியாத, ஒருவரியில் மதிப்பிட்டுக் கூறி விட முடியாதவர், விந்தையான உணர்ச்சிக்குரியவர் சுரதா அவர்கள்.

பன்முகங்கொண்டவர்; பட்டைத்தீட்டப் பெற்ற வைரம் போன்றவர். பல நிறத் தோற்றம் தரும் பண்புடையவர். இவர் போன்றார் எவரும் இல்லை எனக் கூறிவிடலாம்.

எல்லாரும் எப்போதும் எப்படியும் சுவைக்கத்தக்க ஒரு மாமனிதர் சுரதா! தவிர்க்க முடியாத சிந்தனையாளர். தகர்க்க முடியாத கருத்தாளர். பார்த்தோர், பழகியோர், படித்தோர் மறக்க முடியாத கவிஞர் இவர்!

'என்னைப் பின்பற்றிப் பாடுதற்கோர் கூட்டமுண்டு' என்று தெரிந்து பாடிய உண்மைக் கவிஞர். நெஞ்சிருக்கும் வரை இவர் நினைவிருக்கும். இவர் ஆத்திகம் மறுத்த நாத்திகக் கவிஞர்! இவரது நாத் திறமும் பாத் திறமும் நாடறியும். நாளைய எதிர்காலமும் இவரைக் கைவிட முடியாது.

கவிதை ஆர்வலர் படித்தறிய வேண்டிய நூல் இது. கவிஞர்களுக்கும் வழிகாட்டும். மகிழ்வுடன் படைக்கிறோம். உவமைக் கவிஞரின் புகழ் வாழ்க! வளர்க!

அன்பன்

வெள்ளையாம்பட்டு சுந்தரம்


தேன் மலர்

மதிப்பீட்டுக்கலை வளர்க!

திறமையை நன்கு உணர்ந்து பாராட்டுதல் வரிசை எனப்படும்.

அன்றே, அந்தப் பொற்காலத்திலேயே கபிலன் 'வரிசை அறிதலோ அரிதே!' என்று மனம் வருந்திப் பாடினான்.

கவிதையின் வரிசை அறிந்து பாராட்டுதல் அன்றைவிட இன்று வெகுவாகக் குறைந்துவிட்டது. இந்தச் சூழ்நிலையில் உயர்ந்த கவிஞர்கள் தோன்றக் கூடுமோ?

வரிசையறிந்து மதிப்பீடு செய்யும் கலை தமிழகத்தில் பெரிதும் வளர வேண்டும். அதன் வளர்ச்சியிலே உயர்ந்து கவிதை தோன்றிப் பெருக வேண்டும்! தமிழகத்தில் மற்றொரு பொற்காலம் மலரவேண்டும்!

– அறிஞர் அ.வெ. சுப்பிரமணியன்

சுரதா படம்

தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக
இராஜராஜன் விருது பெறுகிறார்.

சுரதா படம்

கலைஞர் விருது பெறுகிறார்.

தோடாதவாலிபம்
...சுரதா...

1. முன்தானை

'கவிஞன் தேர்ந்தெடுக்கப்படாத சட்டப் பேராளன்' என்று ஆங்கிலப் புரட்சிக் கவிஞன் ஷெல்லி ஓரிடத்தில் குறிப்பிடுகிறான்.

ஒரு நாட்டுக்கு அரசியல் மேதைகளும் புரட்சிக் காரர்களும் எவ்வளவு முக்கியமானவர்களோ, அதைவிட முக்கியமானவர்கள் கவிஞர்கள். ஏனென்றால் மக்களின் கனவாகவும் கலங்கரை விளக்கமாகவும் இருப்பவன் கவிஞன்தான்.

கவிஞனின் கனவுகளும், தீர்க்க தரிசனங்களுமே எதிர்காலத்தின் வாயில்களைத் திறந்து விடுகின்றன. அவன் விருப்பங்களே சட்டங்கள் ஆகின்றன.

உள்ளத்தின் சிலிர்ப்பே மனிதாபிமானம்; அதைத் தூண்டிவிட, உணர்ச்சி வீணையின் நரம்புகளை மீட்டுபவன் கவிஞன்தானே?

தமிழகம் இலக்கியப் பறவைகளின் வேடந் தாங்கல். இங்குக் கவிக்குயில்களும், வானம்பாடிகளும் வெவ்வேறு இராகங்களில் ஓயாமல் கூவிக் கொண்டிருக்கின்றன. அவற்றுள் உச்சிக் கிளையிலிருந்து வாய்ப்பரத்தோடு கூவும்

சிலவே, மக்கள் கவனத்தைப் பெறுகின்றன; சில கீதங்கள் கேட்பாரின்றிக் காற்றோடு கரைந்து போகின்றன.

கவிஞர் சுரதா, தமிழர் நெஞ்சில் நின்றுவிட்டவர். இவரை ஒதுக்கிவிட்டு, இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை வரலாறு இல்லை.

இந்த நூற்றாண்டில், தமக்குப் பின் ஒரு கவிஞர் படையையே வாரிசாக விட்டுச் சென்றவர் பாவேந்தர் பாரதிதாசன். வாணிதாசன், முடியரசன், சுரதா மூவரும் அப்படையின் முன் வரிசைக் கவிஞர்கள்.

வாணிதாசன் கருப்பொருள், நடை,யாப்பு ஆகிய வற்றில் நூற்றுக்கு நூறு பாரதிதாசனை அப்படியே பின்பற்றியவர். முடியரசன் பாரதிதாசனைப் பின்பற்றி னாலும்,பழைய தமிழ் மரபுகளிலும் சிந்தனைகளிலும் ஆழமாகக் கால்பதித்துச் சென்றவர்.

சுரதா, 'சுப்புரத்தினதாசன்' என்று தம்மை விளம்பரப் படுத்திக் கொண்டாலும், பாரதிதாசனுக்கும் இவருக்கும் உள்ள பொதுத்தன்மை மிகக் குறைவு. எண்சீர் ஆசிரிய விருத்தமும் எளிய நடையுமே இருவருக்கும் உள்ள பொதுத் தன்மை.

கருப் பொருள், கொள்கைப் பிடிப்பு, சிந்தனைப் போக்கு, சொல்லாட்சி, அணி யாவற்றிலும் சுரதா பாரதி தாசனிடமிருந்து வேறுபடுகிறார்.

இந் நூற்றாண்டுக் கவிதை வரலாற்றில் பாரதிதாசன் கவிதைப் போக்கின், அடுத்த வளர்ச்சி என்று சுரதாவைக் குறிப்பிடலாம்.

இன்று உலகில் பரவலாகக் காணப்படும் கவிதைப் புதுமை (Modernism in poetry)பிரெஞ்சு நாட்டிலிருந்து தோன்றியது. பிரெஞ்சுப் புதுக்கவிதை வீரர்களான ரேம்போ (Arthur Rimbaud), மாலர்மி (Stephane Mallarme) போன்றவர்களுக்கு விடிவெள்ளியாக விளங்கியவன் மகாகவி போதலேர் (Charles Baudelaire).

சுரதா மரபுக் கவிதைதான் எழுதினார். ஆனால் புதுக்கவிதையின் சுருக்கமான சொல்லாட்சியும், புதிய சிந்தனை வீச்சும் சுரதாவிடம் காணப்படுவதால் இவரைத் **'தமிழ்நாட்டு போதலேர்'** என்று கூறிக் கொள்ளலாம்.

''சுரதாவிடம் நீண்டநாள் நெருங்கிப் பழகியவர்; சுரதாவை நன்கு புரிந்து கொண்டவர்; நீங்கள் அவரைப் பற்றி எழுதினால்தான் நன்றாக இருக்கும்; எழுதுங்கள்!'' என்று கவிஞர் மீரா போன்ற நண்பர்கள் பல ஆண்டுகள் வற்புறுத்தி என்னால் எழுதப்பட்டது இந்நூல்.

இந்நூல் பனித்துளி போலச் சிறியது; தெளிவானது. பனித்துளி தன்னைச்சுற்றியுள்ள அத்தனை பொருள் களையும் துல்லியமாகக் காட்டும் தன்மையது. நான் இதில் சுரதாவையும், சுரதாவின் படைப்பையும் துல்லியமாகக் காட்ட முயற்சி செய்திருக்கிறேன்.

சேலம்-16 **முருகு சுந்தரம்**

எச்சில்
இரவு
கவிஞர்
சுரதா

2. சுரதா பதித்த சுவடுகள்

1921 - சுரதா பிறப்பு (23.11.1921)

1935 - இராஜா மடம் நடுநிலைப் பள்ளியில் சேர்தல்

1941 - ஜனவரி - 14, **பாவேந்தரின் முதல் சந்திப்பு**

1944 - பாவேந்தர் நடத்திய **'இன்ப இரவு'** நாடகக் குழுவில் சேர்தல்

1945 - திரையுலகில் நுழைதல்

1946 - **சாவின் முத்தம்** (ஸ்டார் பிரசுர வெளியீடு.)

1947- பாரதிதாசன் பரம்பரையென்று **'பொன்னி'** ஏட்டில் அறிமுகம் ஆதல்.

1949 - இவர் கதை வசனம் எழுதிய 'மங்கையர்க் கரசி' திரைப்படம் வெளியாதல்.

1950 - திரைப்படத்திற்கு முதன் முதலாகப் பாட்டு எழுதுதல்.

1951 - 'அமர்கவி' திரைப்படத்திற்கு வசனம் எழுதுதல்

1952 - சுலோசனா அம்மையாரைத் திருமணம் செய்து கொள்ளுதல்

1953 - **தொடாத வாலிபம், உதட்டில் உதடு** நூல்கள் வெளியீடு.

1955 - **'காவியம்'** என்ற கவிதை வார இதழ் தொடங்குதல் *(17. 9. 1955)*

1956 - **பட்டத்தரசி** நூல்வெளியீடு

1960 - **அழுதும் தேனும்** நூல் வெளியீடு

1965 - **தேன்மழை** நூல் வெளியீடு.

1958- **'இலக்கியம்'** திங்கள் இருமுறை கவிதை இதழ்

1967- அந்நூலுக்குத் தமிழக அரசின் பரிசைப் பெறுதல்

1968- **'சுரதா'** திங்கள் இதழ் *(கவிதை) (1. 3. 1968)*

1971 - திரைப்பட நடிக நடிகையர் பற்றி ஆனந்த விகடனில் தொடர்ந்து எழுதுதல்

1973 - **கலைமாமணி** விருதுபெறல்

1976 - **துறைமுகம் நூல் வெளியீடு**

1980 - **எச்சில் இரவு** நூல்வெளியீடு

1982 - ஜூலை 24. **மணிவிழா**

1984 - **பாரதிதாசன் விருது** முதன் முதலாக இவருக்கு வழங்கப்பட்டது.

1993 - ஈரோட்டில் **'ராணா'** இலக்கிய விருதுபெறல்.

1995 - தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் இராசராசன் விருது', பரிசு: இலட்ச ரூபாய். *(18. 8. 1995)*

1999 - **கலைஞர் விருது,** பரிசு : இலட்ச ரூபாய் (13.1.99)

1999 - பாரதிதாசனின் பரம்பரை நூல் வெளியிடுதல்

✸

3. சுரதாவுடன் நேர்காணல்!

சுரதாவின் பேச்சும் எழுத்தும் சுவையானவை. ஏன்? சுரதாவே மிகச் சுவையானவர். அவரோடு பேசிக் கொண்டிருப்பது காதலியோடு பேசிக் கொண் டிருப்பது போலிருக்கும்; நேரம் போவதே தெரியாது.

ஒரு நாள் மாலை நானும் கவிஞர் அப்துல் ரகுமானும் சுரதாவை மெரினாக் கடற்கரைக்கு அழைத்துச் சென்று உட்காரவைத்து, அவரைப் பற்றியும் அவருடைய கவிதைக் கொள்கை பற்றியும் இரண்டு மணிநேரம் ஓயாமல் கேள்விகள் கேட்டோம். அவரும் சலிப்பில்லாமல் பதில் கூறினார்.

சுரதாவைப் பற்றி ஆய்வு செய்வதற்கு முன்னால், அவரோடு நாங்கள் மேற்கொண்ட உரையாடலை வெளியிட்டால், படிப்பவர்கள் அவரைப் புரிந்து கொண்டு அவர் பற்றிய ஆய்வினைப் படிக்க வசதி யாக இருக்கும் என்ற எண்ணத்தோடு கேள்வி-பதில் வடிவிலே அதை இங்கு வெளியிட் டிருக்கிறேன்.

கேள்வி: நீங்கள் பிறந்த ஊர் எது?

பதில்: தஞ்சை மாவட்டத் திருநாகேசுரம்,
ஞானியார் அடிகள் பிறந்தஊர்.

கேள்வி: கவிதை விருப்பம் இளமையில்
உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?

பதில்: ஒப்பாரி, வள்ளுவன் கூறும் ஜோதிடப் பாடல், குறி சொல்லும் குறத்திப் பாடல், ஏணி ஏற்றம் ஆகியவற்றைச் சிறுவயதில் விரும்பிக் கேட்கும் பழக்கம் உண்டு. பள்ளியில் படிக்கும்போதே பாட்டெழுதுவேன். நான் பாடிய கடவுள் வாழ்த்துப் பாடலை, எம் பள்ளி மாணவர்கள் பாடுவார்கள். அப்போது எனக்கு வயது பதினான்கு.

கேள்வி: நீங்கள் இளமையில் யாரிடமாவது
பாடம் கேட்டதுண்டா?

பதில்: ஒரத்தநாடு பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது, நந்திக் கலம்பக உரையாசிரியர் அருணாசல தேசிகரிடம் கொஞ்சநாள் இலக்கண இலக்கியப்பாடம்கேட்டதுண்டு. பேராசிரியர்இலக்குவனாரும் அப்போது அப்பள்ளியில் மாணவராக இருந்தார்; பத்தாம் வகுப்புவரை படித்தேன்.

கேள்வி: இளமையில் உங்களைக் கவர்ந்த
கவிஞர்கள் யார் யார்?

பதில்: நான் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் சுத்தானந்த பாரதியின் பாடல்கள் அடிக்கடி பத்திரிகைகளில் வரும். முதலில் அவரைப் பின்பற்றி எழுதினேன். பழையனூரில் டீக்கடை வைத்திருந்த அழகப்பன் என்பவர் பாரதிதாசன் கவிதைகளை எனக்கு அறிமுகப் படுத்தினார். அவர் பெரியார் தலைமையில் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டவர். ஒருநாள் பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதியை எனக்கு அவர் கொடுத்துப் படிக்கச் சொன்னார். அன்றிலிருந்து என் உள்ளத்தில் இடம் பிடித்திருந்த சுத்தானந்த பாரதி 'அவுட்.'

கேள்வி: பாவேந்தர் தொடர்பு எப்போது ஏற்பட்டது?

பதில்: 1941 ஜனவரி 14ஆம்நாள். அன்று தைப்பொங்கல்.

கேள்வி: பத்திரிகையில் நீங்கள் கவிஞராக அறிமுகமானது எப்போது?

பதில்: என்னை முதன் முதலில் கவிஞராக அறிமுகப் படுத்தியவர் கவிஞர் திருலோக சீதாராம். தாம் நடத்தி வந்த 'சிவாஜி' யில் என் கவிதைகளைத் தொடர்ந்து பத்து வாரங்கள் வெளியிட்டு என்னை விளம்பரப்படுத்தினார். புதுக்கோட்டையில் இருந்து வெளிவந்த 'தலைவன்' பத்திரிகையில் கொஞ்ச நாள் துணையாசிரியராகப் பணியாற்றினேன்.

கேள்வி: பாவேந்தருக்கும் உங்களுக்கும் உள்ள தொடர்பு பற்றி?

பதில்: பாவேந்தரின் ஆற்றல் பரந்துபட்டது. அவருடைய தொடர்பு என்னைக் கவிஞனாக உயர்த்தியது. பாவேந்தரோடு நான்காண்டுகள். நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. பாவேந்தருடைய கவிதை நூல்களைப் படியெடுக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்த காரணத்தால், அவருடைய உத்திகளைப் புரிந்துகொண்டேன். எனது கவிதைத் துறைக்குப் பாவேந்தரே வழிகாட்டி. ஆனால் நான் அவரைப் பின்பற்றி எழுதவில்லை. ஒரு பெருங் கவிஞரைப் பின்பற்றி எழுதினால், நம்முடைய சொந்த வளர்ச்சி பத்தாண்டுகள் பின் தங்கிவிடும்.

கேள்வி: யாரையும் பின்பற்றாமல் புதிய முறையில் எழுதவேண்டும் என்று நீங்கள் நினைக்கக் காரணம் என்ன?

பதில்: நான் ஒரு நாத்திகன். கவிதை ஒரு வரப்பிரசாதம் என்பதை நான் மறுக்கிறேன். கடுமை யாக உழைத்துப் பழைய புலவர்களை வென்று காட்ட வேண்டும் என்ற ஆர்வம் என்னை இளமையில் உந்தித் தள்ளியது. எனக்கு இத்தகைய நம்பிக்கையும், மன உறுதியும் ஏற்பட்டதற்குக் காரணம் பெரியாரின் கொள்கையில் எனக்கிருந்த ஈடுபாடுதான்.

கேள்வி: கவிதை ஆற்றல் பற்றி உங்கள் கருத்தென்ன?

பதில்: பிறவியிலேயே ஒருவன் கவிஞனாகப் பிறக்கிறான் என்பதெல்லாம் பித்தலாட்டம். ஒரு பொருளையோ, அல்லது நிகழ்ச்சியையோ பார்த்து உணர்ச்சிவசப்பட்டுப் பாடுதல் என்ற பழக்கமும் எனக்குக் கிடையாது. எந்தப் பொருளைப் பற்றியும் உட்கார்ந்து சிந்தித்துத்தான் எழுதுவேன். பிள்ளை பெறவேண்டும் என்பதற்காகப் புணர்வதில்லை. அது போலக் கவிதை ஆவேசத்துக்காக எப்பொருளையும் பார்ப்பதில்லை.

கேள்வி: கற்பனை ஆற்றல் பற்றி உங்கள் கருத்தென்ன?

பதில்: கவிதைக்குக் கற்பனை தேவையில்லை. கண்ணாடி, எதிரில் உள்ள உருவத்தைத் தான் காட்டும், வேறு உருவத்தைக் காட்டுவதில்லை. உலகத்தை அப்படியே காட்டுவது தான் கவிதை.

ஒன்றை ஒன்றோடு ஒப்பிட்டுச் சிந்திப்பது தான் கவிதைக் கொள்கை. நான் பச்சையப்பன் கல்லூரியில் பேசும்போது இக்கருத்தை வெளியிட்டேன். டாக்டர் மு.வ. இக்கருத்தைப் பாராட்டினார்.

கேள்வி: உங்கள் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் காரணம் என்ன?

பதில்: நுட்பமான சிந்தனை, ஒதுங்கிய சிந்தனை. ஒரு கவிஞன் சிறந்த சிந்தனையாளனாக இருக்க வேண்டும்.

நான் கவிதையில் எந்தக் கருத்தைச் சொன்னாலும் எனக்கு முன் வாழ்ந்த கவிஞர்கள் சொன்ன முறையிலிருந்து மாறிப் புதுமையாகச் சொல்ல வேண்டும் என்று நினைப்பேன். சற்று ஒதுங்கிச் சிந்திப்பேன்.

வெள்ளை முயலைப் பார்த்தவுடன், 'தும்பைப் பூப் போன்ற வெள்ளை முயல்' என்றும், 'பஞ்சுடல் பசுங்கண் பாய்முயல்' என்றும் பொதுவாகப் பிற கவிஞர்கள் குறிப்பிடுவர். ஆனால் நான் ஒதுங்கிச் சிந்தித்துச் 'சலவை முயல்' என்று வேறுவிதமாகச் சொன்னேன். இதுதான் என் வெற்றிக்குக் காரணம்.

கேள்வி: நீங்கள் விரும்பிப் படித்த நூல்கள் யாவை? ஏன்?

பதில்: கல்லாடம், திருக்குறள், நாலடியார், தல புராணங்கள், 17-18 ஆம் நூற்றாண்டுப் புலவர்கள் எழுதிய சிறு பிரபந்தங்கள் ஆகியவற்றை விரும்பிப் படிப்பதுண்டு. கொள்கை அளவில் புராண நூல்களை நான் வெறுத்தாலும், அவற்றை எழுதிய கவிஞர்களின் ஆற்றலை மிகவும் மதிக்கிறேன். பேராற்றல் மிக்க கவிஞர் பலர் ஊர் பேர் தெரியாமல் அழிந்து போனார்கள். அவர்களுக்காக வருத்தப்படுகிறேன்.

நான் படிக்கும்போது பாடலை அதிகமாகச் சுவைப்பதில்லை. அதில் பயன் படுத்தப்பட்டுள்ள கவிதை உத்திகளைத்தான் அதிகம் சுவைப்பேன்.

கேள்வி: கவிதை எப்படி இருக்க வேண்டும்?

பதில்: முத்தத்தைப் போல் சுவையாகவும் சுருக்கமாகவும் இருக்கவேண்டும். சிறிய கவிதைகள் எழுதி வெற்றி பெறப் பெரிய ஆற்றல் வேண்டும். சொற்சுருக்கம் எனக்குப் பிடிக்கும்.

தாழம்பூவை மடித்துத் தலையில் செருக வேண்டும். அது போலச் சொற்களை மடித்துக் கவிதையில் செருக வேண்டும்.

சங்க இலக்கியத்தின் வெற்றியே சொற் சுருக்கத்தில்தான்! நல்ல கவிதைகளை எழுதுவதற்கு மிகவும் கடினமான உழைப்புத் தேவை. கவிதை எழுதுவதைவிட ஆறு மாதம் கடுங்காவல் தண்டனையை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வேன்.

கேள்வி: நீங்கள் உங்கள் பாடல் வரிகளை பதிப்புக்குப் பதிப்பு மாற்றி விடுகிறீர்களே! ஏன்?

பதில்: அது என் வளர்ச்சியின் அடையாளம்; ஒரு பெண் பருவ முதிர்ச்சி அடைந்த பிறகு தாவணிக்கு மாறுவது போல.

கேள்வி: கதைக் கவிதைகளை நீங்கள் விரும்பி எழுதக் காரணம் என்ன?

பதில்: சொல்ல விரும்பும் கருத்தைக் கதைக் கவிதையாகச் சொன்னால்தான் படிப்பவர் உள்ளத்தில் நிலைக்கும்படி சொல்ல முடியும். எனவே என் சொல்விளக்கப் பாடல்களைக் கதைக் கவிதையில் தொடங்கிக் கருத்து விளக்கத்தோடு முடிக்கிறேன்.

கேள்வி: 'செக்ஸ்' உங்கள் பாட்டில் அதிகம். ஏன்?

பதில்: அது நிலை பேறு பெற்ற 'சப்ஜெக்ட்' சிறந்த உத்தி. மேலும் பாமரன் முதல் படித்தவன் வரை எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய பொருள் (theme).

இந்து, புராண இதிகாசங்களை மட்டும் புரிந்து கொள்வான்; கிறித்தவன், பைபிளை மட்டும் புரிந்து கொள்வான்; முகம்மதியன், குரானை மட்டும் புரிந்து கொள்வான். ஆண்டவனைப் புரிந்து கொள்வதிலும் இப்படிப் பாகுபாடு உண்டு. ஆனால் இவர்கள் எல்லாருமே காதலைப் புரிந்து கொள்கிறார்கள் இல்லையா? எனவே காதலுக்கு ஆண்டவனை விடப் பரப்பு அதிகம்.

மேலும் நம் நாட்டுப் பக்தர்களுக்கு, ஆண்டவனையே படுக்கை அறைக்குள் அனுப்பி வைத்து, நாயக நாயகி பாவத்தில் பாடினால்தான் புரியும். காதல் ஆண்டவனுக்கும் அறிமுகமாக அமைகிறது.

கேள்வி: உங்கள் தகுதிக்குச் சுவரும் சுண்ணாம்பும் தேவைதானா?

பதில்: அதை ஒரு காரணத்துக்காக எழுதினேன். கவிதை ஒரு வீரவழிபாடு ஆகிவிட்டது. காதல், வீரம், பக்தி என்ற இம்மூன்று பொருளைப் பற்றி எழுதுவது தான் கவிதை மரபாகத் தொன்று தொட்டு இருந்து வந்திருக்கிறது. அம்மரபை மட்டந் தட்ட எழுதப் பட்டதுதான் சுவரும் சுண்ணாம்பும்.

கவிதையைப் பற்றி நீங்கள் கடைசியாகக் கூற விரும்புவது என்ன?

பதில்: ஒரு கவிஞன். எழுதுவதெல்லாமே கவிதையாகி விடுவதில்லை. சிலவே கவிதை அந்தஸ்து பெறுகின்றன; தன் படைப்புக்குக் கவிதை அந்தஸ்தைத் தேடித் தரக் கவிஞன் கடினமாக உழைக்க வேண்டும். மூக்கில் நுழைவதுதான் மூச்சு; முதுகைத் தடவிச் சென்றால் அது காற்றுத்தான்.

மாங்கையர்க்கரசி
வசனம்
சுஜாதா

4. சுரதா அரும்பிய நேரம்

தமிழ்க் கவிதையின் உள்ளடக்கத்திலும், உருவத்திலும், உத்தியிலும் பெரிய மாறுதல்களைக் கொண்டு வந்தவன் பாரதி. பாரதி இருபதாம் நூற்றாண்டுக் கவிதையின் முதற்பாகம், பாரதிதாசன் இரண்டாம் பாகம், சுரதா மூன்றாம் பாகம்.

கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை பாரதியின் நிழல்; தேசிய விநாயகம் பிள்ளை, ச.து.சு. யோகி, சுத்தானந்த பாரதி மூவரும் பாரதியின் அங்கங்கள்.

சுரதா எழுதத் தொடங்கிய நேரம் தமிழக அரசியலிலும் இலக்கியத்திலும், முக்கியமான காலகட்டம். அரசியலில் திராவிட இயக்கமும், இலக்கியத்தில் திராவிடப் பண்பாடும் காலூன்றத் தொடங்கிய நேரம். திராவிடப் பண்பாட்டு எழுச்சி, இளைஞர் உள்ளத்தில் கொழுந்துவிடத் தொடங்கியது.

திராவிட இயக்கம் தனது வளர்ச்சிக்குச் சில அரசியல் சமுதாயக் காரணங்களை அடிப்படையாகக்

கொண்டிருந்தாலும், தமிழ்மொழியின் மறு மலர்ச்சி யையும், பண்டைத் தமிழ்ப் பண்பாட்டு மறு மலர்ச்சிப் யையும் வலுவான காரணங்களாகவும் கொண்டி ருந்தது. எனவே தமிழ்ப் புலவர்களும் அறிஞர்களும் இயல்பாகவே இவ்வியக்கத்தின்பால் ஈர்க்கப்பட்டனர்.

தமிழ்ப்புலவர்கள் எதற்கெடுத்தாலும் சங்க இலக்கியங்களை மேற்கோள் காட்டிப் பேசினர். சங்ககாலம் ஒரு மந்திரச் சொல்லாயிற்று. பள்ளியிலும் கல்லூரியிலும் படித்துக்கொண்டிருந்த இளைய தலைமுறையினர் 'சங்க கால உடோபியா'பற்றிய கனவுகளில் வளர்ந்தனர். சங்கஇலக்கியங்கள் புரியா விட்டாலும், அதில் என்னதான் மாய மந்திரம் புதைந்திருக்கிறது என்பதை அறிந்துகொள்ளும் குடைச்சல் அவர்களுக்கு மிகுதியாக இருந்தது. அந்த நேரத்தில்தான் டாக்டர் மு.வ. போன்ற 'வியாக்கியான கர்த்தாக்கள்' தோன்றிச் சங்கஇலக்கியச் சாரத்தைக் காட்சி காட்சியாக வரிசை வரிசையாகப் புற்றீசல் போல வெளியிட்டனர்.

நாவலர் பாரதியார், மறைமலையடிகள், திரு வி.க. போன்ற தமிழறிஞர்கள் திராவிட இயக்கத்துக்குத் தம் பேச்சாலும் எழுத்தாலும் பச்சைக் கொடி காட்டிவிட்டனர்.

பன்மொழிப்புலவர் அப்பாத்துரையார், பாரதி தாசன் இருவரும் திராவிடப் பண்பாட்டியக்கத்தின்

ஈட்டி முனைகளாக விளங்கினர்.

பேரறிஞர் அண்ணா தளபதியாக விளங்கினார்.

அண்ணாவின் பேச்சும் எழுத்தும் தென்றலாக, தேனருவியாக, புயலாக, பூகம்பமாகத் தமிழகத்தை வளைத்துக் கொண்ட நேரம். இதற்குமுன் கேட்டிராத ஒரு புதிய நாதம் அவர் பேச்சில்! இதற்குமுன் கண்டிராத கிழக்கும் மேற்கும் பின்னிப் பிணைந்த சிந்தனைச் சிதறல் அவர் எழுத்தில்! அவர்நடையோ, பூக்கள் பரப்பிய மெத்தென்ற சிங்கார நடை. திராவிட நாடு' என்ற வார இதழ் அவரது போர்வாள்!

விடுதலை, குடியரசு, திராவிடன், மன்றம், புதுவாழ்வு, தனியரசு என்று திரும்பிய பக்கமெல்லாம் திராவிட இயக்க ஏடுகள்.

கலைஞரும் கண்ணதாசனும் போட்டி போட்டுக்கொண்டு முரசொலியையும் தென்றலையும் நடத்தினர். புதுக்கோட்டையிலிருந்து 'பொன்னி' என்ற இலக்கிய ஏடு பாரதிதாசன் பரம்பரை யொன்றைக் கவிதைத் துறையில் உருவாக்கிக் கொண்டிருந்தது.

எல்லா ஏடுகளிலும் வெண்பாப் போட்டிகள்! அண்ணா, கவிதைக்கு முதலிடங் கொடுத்து திராவிட நாட்டின் முதல் பக்கத்தில், வாரந்தோறும் வெளி யிட்டார். அவரைத் தொடர்ந்து இயக்கத்தின் எல்லா ஏடுகளும் முன்பக்கத்தில் கவிதை வெளியிடுவதை

மரபாகக் கொண்டன. பாரதிதாசன், 'குயில்' என்ற பெயரில் தரமான கவிதை ஏடு ஒன்றைத் தொடங்கித் தொடர்ந்து நடத்தி வந்தார்.

நாவலர் பாரதியும், தமிழறிஞர் இரா.பி. சேதுப்பிள்ளையும் அண்ணாவோடு கம்பராமாயணச் சொற்போர் நிகழ்த்தித் தோற்றனர்.

'தென்றல்', ஏட்டில், 'தாலி அணிவது தமிழர் மரபா?' என்ற பரபரப்பான தலைப்பில் தமிழறிஞர்கள் சூடாக விவாதித்தனர்.

'பொங்கல் விழா' தமிழர் விழாவாகப் புதுப்பொலிவும் புது மரியாதையும் பெற்றுச் சிறந்தது. பொங்கல் வாழ்த்து அனுப்பும் பழக்கம் விளம்பரப் படுத்தப்பட்டது.

பாரதிதாசன் என்னும் புதிய சகாப்தம் தோன்றியது. புதிய தமது தசாங்கத்தோடு, தமது ஆளுகைக்குட்பட்ட கவிதை இராச்சியத்தில் உலா வரத் தொடங்கிவிட்டார் பாரதிதாசன். அவருக்கென்று தனிப்பரிவாரம் தோன்றிவிட்டது. அவருடைய கொடி உயரப் பறக்கத் தொடங்கியது. பாரதிதாசன் கடந்த நாற்பதாம், ஐம்பதாம் ஆண்டுக் காலக் கட்டத்தில் இடிமுழக்கமாக, புயலாக, கொடி மின்னலாகக் கவிதை வானில் ஆற்றலோடு வெளிப்பட்டார். அவருடைய பாட்டு வரிகள் மோசஸின் பத்துக்

கட்டளைகளாகத் திராவிட இயக்க இளைஞர்களின் இதயத்தில் இறங்கின.

இத்தகைய பரபரப்பான எழுச்சி மிக்க சூழ்நிலையில் இருபது வயது இளைஞரான சிக்கல் இராஜகோபாலன் பாரதிதாசனைத் தேடிப் புதுச் சேரிக்கு வந்தார். அவரே பின்னர் சுரதா என்னும் சுப்புரத்தினதாசன் ஆனார்.

சுரதா, பாரதிதாசனை வந்தடைந்தபொழுது அவருக்கென்று தனிப்பட்ட கவிதைக் கொள்கை எதுவும் உருவாகியிருக்க நியாயமில்லை. அவர் அப்பொழுது கைபடாத பச்சைக் களிமண். அப்போது பாரதிதாசன் சுரதாவுக்குக் கொடுத்த வேலை, தாம் எழுதும் கவிதைகளைப் படி எடுப்பதுதான்.

தமிழ்க் கவிஞர்களுள் சுரதாவின் கையெழுத்து மிகவும் அழகானது என்பது குறிப்பிடத்தக்கது.

தெளிவான அழகிய சுரதாவின் கையெழுத்து, பாரதிதாசனுக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது. பாண்டியன் பரிசை மூன்று தடவை படியெடுக்கச் சொல்லி இருக்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

எப்போதும்ஒரு பாடலைப் படிப்பதைவிட, எழுதும்போது அதில் ஒரு லயிப்பு ஏற்படும். பாரதி தாசன் பாடல்களை ஓயாமல் நகலெடுத்து, அவற்றில்

ஆழமான, மெய்மறந்த லயிப்பும், ஈடுபாடும் சுரதாவுக்கு ஏற்பட்டுவிட்டன. படியெடுக்கும் போதெல்லாம் பாரதிதாசன் பாணியும் அவர் கையாளும் புதிய உத்திகளும் அவரைச் சிந்திக்க வைத்தன. பிறர் பாடல்களோடு, பாரதிதாசன் பாடல்களை ஒப்பிட்டு வியந்தார். ஆனால் பாரதி தாசனைப் போல் எழுத வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்படவில்லை.

பாரதிதாசனைப் போல் அல்லாமல், அவரிட மிருந்து வேறுபட்டும், அவரைவிடச் சிறப்பாகவும் எழுத முயற்சித்தால் என்ன என்று சிந்திக்கலானார். ஓரிரு பாடல்களை எழுதித், தம்முடையது என்று சொல்லாமல், தம்முடைய நண்பனுடையது என்று சொல்லிப் பாரதிதாசனிடம் காட்டியிருக்கிறார். தம்முடையது என்று சொல்லிக் கொள்ள அச்சம்.

பாரதிதாசன் உள்ளத்து உணர்ச்சிகளைப் பச்சை யாக வெளிப்படுத்துபவர். அவரிடம் பாராட்டுப் பெறுவது அவ்வளவு எளிதன்று. 'ஊம், நல்லாத்தான் இருக்குது!' என்று சொல்லிவிட்டாலே அது பெரிய பாராட்டு! பிழையிருந்தால் கசக்கி முகத்தில் அடித்து விடுவார். உன்னையெல்லாம் எவன் கவிதை எழுதச் சொன்னான்?' என்று சொல்லினாலேயே சுட்டு விடுவார்.

சுரதா நீட்டிய கவிதையைப் பார்த்துவிட்டு, 'ஊம்; நல்லாருக்கு... பக்குவப்பட்டவன் எழுதற மாதிரி இருக்கு!' என்று சொல்லியிருக்கிறார் பாரதிதாசன். அது சுரதா வளர்ச்சியின் முதற்படி.

சுரதா - பாரதிதாசன் தொடர்பு இப்படி நான் காண்டுகள் நீடித்தது. சுரதா தம்மையறியாமலே தமக்குள் ஒரு புதிய வளர்ச்சியைத் தோற்றுவித்துக் கொண்டிருந்தார்.

கீழ்வானம்
சாகுமா
ரிவாஸ்

5. மெய்விளக்கக் கோட்பாடும் சுரதாவும்

இந்தக் கோட்பாட்டிற்கும் சுரதாவின் படைப்பிற்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாலும், இக்கோட்பாட்டின் அடிப்படையில் சுரதாவின் வளர்ச்சி அமைந்திருப்பதாலும் இதை முதல் தலைப்பாக எடுத்துக் கொண்டேன்.

ஐரோப்பிய இலக்கிய வரலாற்றில் பதினாறாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தை இடைக்காலம் (Medieval Age) என்பர். 'இங்கிலாந்தின் பொற்காலம்' என்று முதலாம் எலிசபெத்தின் ஆட்சிக்காலம் கருதப்பட்டது. அவளுடைய ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த இராலே, மார்லோ, ஷேக்ஸ்பியர், பென்ஜான்சன், ஆகியோர்இடைக்காலக் கவிஞர்களே.

இதற்கு அடுத்தாற் போல் ஏற்பட்ட காலக் கட்டங்களை மறுமலர்ச்சிக் காலம் (Renaissance Period) என்றும், சீர்திருத்தக் காலம் (Reformation Period) என்றும் குறிப்பிடுவர்.

மறுமலர்ச்சிக் காலக் கவிதைகள் மென்மையும், அழகும், இனிமையும் கொண்ட காதற் கவிதைகள்; வீர வழிபாட்டுக் கவிதைகள்; கிரேக்க ரோமானிய மரபுகளின் அடிப்படையில் நகலெடுக்கப்பட்ட கவிதைகள்.

சீர்திருத்தக் கவிதைகளோ, பதினாறாம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமயப்புரட்சியின் அடிப் படையில் தோன்றியவை. இவ்விரு காலக் கட்டத்திலும் தோன்றிய கவிதைகள் ஒரே அச்சில் வார்க்கப்பட்டாற் போல் புதுமை ஏதுமின்றிச் செக்குமாட்டுத் தன்மை யோடு சுற்றிச் சுற்றி வந்தன.

ஒரு கனி எவ்வளவு சுவையானது என்றாலும் அதிகம் பழுத்தால் அழுகிப் போவதில்லையா? கவிதை மரபும் அப்படித்தான். கவிதை மரபில் காணப்படும் 'செக்கு சுற்றுத்தனம்' படிப்பவர் உள்ளத்தில் சலிப்பையும் வெறுப்பையும் ஏற்படுத்தி விடும். இத்தகைய வெறுப்பு புதிய கவிதை இயக்கங்களாக ஐரோப்பாவின் பல பகுதிகளிலும் தலைதூக்கின. அவற்றுள் இத்தாலியில் தோன்றிய மாரினியமும் (Marinism), ஸ்பெயினில் தோன்றிய கங்கோரியமும் (Gongorism), இங்கிலாந்தில் தோன்றிய மெய்விளக்க வியமும் (Metaphyscism) குறிப்பிடத் தக்கவை.

மறுமலர்ச்சிக் கால, சீர்திருத்தக் காலக் கவிதைகளின் மீது வெறுப்பும் சலிப்பும் கொண்ட இத்தாலிய மாரினினியும், ஸ்பானிய கங்கோராவும், புதிய சிந்தனைகளைப் புதுமையாகவும், புலமை நுட்பத்தோடும், நாடகப் பாங்கிலும் வெளிப்படுத்த விரும்பினர். இவர்களைப் பின் பற்றி ஆங்கில நாட்டைச் சேர்ந்த ஜான்டன்னும் தமது கவிதைகளை எழுதினார்.

'உள்ளமும் ஆன்மாவும், சிந்தனையும் உணர்ச்சிப் பெருக்கும் ஒன்றாகக் கலக்கும் திருமண மஞ்சம் மெய்விளக்கக் கவிதை' என்று ஓரறிஞர் குறிப்பிடுகின்றார்.

இடைக்காலத்திலும் மறுமலர்ச்சிக் காலத்திலும் Metaphysics என்னும் சொல், இயல் கடந்த நிலையை (Beyond the physical)க் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டு வந்தது. அதாவது இயற்கை மீறிய, ஆன்மீகத் தொடர் புடைய செய்திகள் பற்றியது என்று பொருள் படும். மெய்விளக்கவியல் பற்றி அறிஞர் பலரும் பல விதமான கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்.

ஆங்கிலக் கவிஞரான ட்ரைடன், ஜான் டன்னைப் பற்றி மேற்போக்காக ஓரிடத்தில் குறிப்பிடும்போது, ''**கவிஞர் டன்** தமது படைப்புக்களால் மெய்விளக்கக் கோட்பாட்டில் பாதிப்பை உண்டாக்கியதோடு, காதலின் மென்மையான அதிர்வுகளால் அழகினத்தின் உள்ளங்களைக் கலக்கிவிட்டார்''[1] என்று கூறுகிறார்.

Metaphysics என்ற சொல்' 'உணர்ச்சி வசப்படுத்தல்' என்னும் கருத்தில் இங்குக் கையாளப்படுகிறது.

மற்றோர் ஆங்கிலக் கவிஞரான ஸ்விஃப்ட் இளமைப் பருவத்தில் ஒரு பெண்ணோடு கொண்டிருந்த தொடர்பைப் பற்றிக் குறிப்பிடும்போது, ''இந்த வேண்டாத தொடர்பில், என்னைப்பற்றிப் பலரும் பலவிதமாகப் பேசும்படி விவேகமில்லாமல் நடந்து கொண்டேன்'' என்று குறிப்பிடுகிறார். இவ்விடத்தில் Metaphysical என்னும் சொல் விவேக மின்மை என்னும் கருத்தில் கையாளப்படுகிறது.

ஆங்கில அறிஞரான சௌதே, ''நல்ல வாய்ப்பும், நல்ல தோற்றமும், நல்ல பேச்சும் சாதுரியமும் இல்லாதவர்கள் நுண்ணிதும், இயல்பு மீறியதுமான காதலை விரும்புவர்'' என்று ஓரிடத்தில் குறிப்பிடுகிறார். இவ்விடத்தில் Metaphysical என்னும் சொல் 'இயல்கடந்த' என்னும் கருத்தில் கையாளப்படுகிறது.

மேலே குறிப்பிட்ட ஆங்கில அறிஞர்கள் Metaphysics என்ற சொல்லைப் புதுமையான, நம்ப முடியாத என்னும் பொருள்களில் பயன்படுத்தியிருந்தாலும், அப்பொருள்களை மெய்விளக்கக் கவிதை (Metaphysical Poetry) களுக்கு ஏற்றிக் கூறுவது பொருந்தாக் கூற்றாகும்.

மெய்விளக்கக் கவிஞர்களைப் பற்றியும், கவிதைகளைப் பற்றியும் சர் ஹெர்பர்ட் கிரியர்சனும்,

ஜான்சனும், நோபல் பரிசு பெற்ற புதுக்கவிஞர் எலியட்டும் கூறிய கருத்துக்கள் சிந்தனைக் குரியவை.

சர் ஹெர்பர்ட் கிரியர்சன் மெய்விளக்கக் கவிதைகளைப் பற்றிக் கூறும்போது, ''மெய்விளக்கக் கவிதை என்பது தாந்தேயின் Divina Comedia போலவும் கெதேயின் Faust போலவும் ஒரு தத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் தூண்டப்பட்டதாகவும், வாழ்க்கையென்னும் நாடகத்தில் மனிதனின் பங்கு என்ன என்பதை விளக்கக் கூடியதாகவும் அமையும்''[2] என்று குறிப்பிடுகிறார்.

இந்தக் கருத்து அவ்வளவு பொருத்தமானதாகப் படவில்லை. கவிஞர் டன்னும் அவருக்குப் பின்வந்த மெய்விளக்கக் கவிஞர்களும் எந்த நிலையான தத்துவக் கோட்பாட்டையும் அடியொற்றிக் கவிதைகள் எழுதவில்லை. மேலும் கவிதை என்பதே பொதுவாக இயல்கடந்த கற்பனையும் தத்துவங்களும் அடங்கியது தானே?

மரபிலக்கியங்களில் அதிக ஈடுபாடு கொண்ட வரான டாக்டர் **ஜான்சன்** மெய்விளக்கக் கவிஞர்கள் பற்றிக் கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகிறார்.

''பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றிய ஒருவகைக் கவிஞர் கூட்டத்தார் மெய் விளக்கக் கவிஞர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள் மிகுந்த படிப்பாளிகள். தங்கள் கல்விச்

செறிவைக் கவிதையில் புலப்படுத்த வேண்டும் என்பதே இவர்கள் அடிப்படை நோக்கம். ஆனால் அவர்கள் அதை யாப்பில் கொண்டுவரும் போது அது கவிதையாக அமையாமல் செய்யுளாக அமைந்து விடுகிறது. அச் செய்யுள், வேலைப்பாடு மிக்கது என்றாலும், காதுகளுக்குப் பெரும் சோதனையாக அமைந்து விடுகிறது. அது வெறும் அசைகளின் கூட்டமாக அமைந்து விடுகிறதே அல்லாமல் சந்த நயம் பெறுவதில்லை.

''மெய்விளக்கக் கவிஞர்கள் இயற்கையிலோ, வாழ்க்கைத் தத்துவத்திலோ ஈடுபாடில்லாதவர்கள். ஆனால் புலமை நுணுக்கம் மிகுந்தவர்கள். அப் புலமை நுணுக்கமும், பொருத்தமற்ற படிமங்களை ஒன்றிணைப்பதிலும், ஒருபுடை ஒப்பான செய்தி களை ஒப்பிட்டுக் காட்டுவதிலும் செலவிடப் படுகிறது.

அவர்கள் புதுமையான சிந்தனைகளை அடிக்கடி வெளிப்படுத்தினாலும், அவை இயல்பாகவும், தெளிவாகவும், பொருத்தமாகவும் அமைவதில்லை. கதம்பமான கருத்துக்களை வலுக்கட்டாயமாகக் கவிதையில் பூட்டுகிறார்கள். இவ்வாறு செய்வதன் மூலம், உவமை என்ற பேராலும் மேற்கோள்கள் என்ற பேராலும், இயற்கையையும் கலையையும் சிதைத்து விடுகின்றனர்; என்றாலும் அவர்கள் கருத்து நயம் படிப்போரை வியப்பில் ஆழ்த்தாமல் இல்லை.

தங்கள் துணிச்சலாலும், புதுமையான படிம உத்தியாலும், உழைத்து வெளிப்படுத்தும் உருவகங் களாலும், தொலைவு உவமைகளாலும், விரிவான இல்பொருள் அணிகளாலும் படிப்பவரை இவர்கள் மலைக்க வைக்கின்றனர். வியக்கத்தக்க புதுப் புனைவுகளில் ஈடுபடுகிறார்கள் என்றாலும் இவர்களுடைய கோணல் தத்துவமும், மயிர்க் கூச்செறியும் தர்க்கமும் நம்மைச் சோர்வடையச் செய்கின்றன. பொதுவாக மெய்விளக்கக் கவிஞர்கள் கோபக்காரர்கள், கடுமையானவர்கள், புரிந்துகொள்ள முடியாத மூடுசுளைகள்.

''இவர்கள் எதையும் கிழித்துக் கூறுபோட்டுப் பார்க்க விரும்புவர். ஒவ்வொரு படிமத்தையும் சுக்கு நூறாக உடைத்துவிடுவர். எதையும் இயல்பாக, முழுமையாகக் காண்பதில் இவர்களுக்குத் திருப்தி கிடையாது. சூரியனை முழுமையாகத் தரிசிக்க விரும்பாமல், அதன் ஒளிக்கற்றையை முப்பட்டைக் கண்ணாடிக்குள் செலுத்தி, அதிலிருந்து வெளிப்படும் வண்ண வண்ண ஒளிச் சிதறல்களைக் கண்டு மகிழும் ஆய்வுக்கூட விஞ்ஞானிகளைப் போன்றவர்கள் இவர்கள்'[3] என்று குறிப்பிடுகிறார்.

மெய்விளக்கக் கவிதைகள், உணர்வுகளைக் காரண காரிய அடிப்படையில் தர்க்கரீதியாக வெளிப்படுத்துவதால், சந்த இனிமையும் பொருள் புலப்பாடும் அவற்றில் அடிபட்டுப் போகின்றன''[4]

என்று திருமதி பென்னட் என்னும் திறனாய்வாளர் குறிப்பிடுகின்றார்.

ஆங்கில அறிஞர் டாக்டர் ஜான்சன் மெய் விளக்கக் கவிதைகள் பற்றிக் கூறிய கருத்துக்கள் எல்லாவற்றையும் அப்படியே ஏற்றுக் கொள்ள முடியாது. ஆங்கில இலக்கிய மரபில் ஆழ்ந்த பற்றும் ஈடுபாடும் கொண்ட அவர், மரபை மீறுவதைக் குற்றமாகக் கருதும் இயல்புடையவர். எனவே அவர் கூற்றில் ஒருதலைப்பட்சமான கருத்துக்களும் உண்டு. என்றாலும் மெய்விளக்கக் கவிதை பற்றி அன்று அவர் என்ன நினைத்தார் என்ற விளக்கமாக இக் கருத்துக்களைக் கொள்ளலாம்.

இருபதாம் நூற்றாண்டுப் புதுக் கவிஞரான டி.எஸ். எலியட் மெய்விளக்கக் கவிதை பற்றி மிகவும் உயர்வாகக் குறிப்பிடுகிறார். 'மெய்விளக்கக் கவிதைகளே தற்காலப் புதுக் கவிதைகளின் மூலம்' என்பது அவர் கருத்து. மேலும், ''எண்ணங்கள் தாமே நேரடியான சுவையுணர்வுகளாக உருவெடுப்பதை மெய்விளக்கக் கவிதையில் காணலாம்'' [5] என்று குறிப்பிடுகிறார்.

மெய்விளக்கக் கவிதை தனக்கு முற்பட்ட இடைக்காலச் சீர்திருத்தக் கவிதைகளிலிருந்து மாறுபட்டதற்குப் பல காரணங்கள் உண்டு.

1. 16ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கருத்துப் புரட்சியும் சமயப்புரட்சியும்.

2. கோபர்நிகஸின் புரட்சிகரமான கண்டு பிடிப்புகள்.

3. கெப்ளர், கலீலியோ ஆகியோரின் வானியல் ஆய்வுகளும் கண்டுபிடிப்புகளும்.

4. உலகை வலம் வந்த மாலுமிகள் வெளிப் படுத்திய புதிய செய்திகள்.

5. கருத்துப் புரட்சியின் காரணமாகத் தோன்றிய உளவியல், தர்க்கவியல் கலைகள்.

6. தந்தக் கோபுரத்தின் மேல் கைக்கெட்டாத உயரத்தில் உட்கார்ந்திருந்த கவிதையை நடுத் தெருவுக்குக் கொண்டுவரும் முயற்சி.

மேலே குறிப்பிட்ட காரணங்களால் **மெய் விளக்கக் கவிதை** எல்லாருக்கும் புரியும் வகையில் அன்றாடப் பேச்சு மொழிக்கு மாற்றப்பட்டது.

கவிஞர்கள் தமது உணர்வுகளை அனுபவத் தோடு கலந்து உள்ளத்தை நெகிழ்விக்கும் விரிவான படிமங்களை வெவ்வேறு பாவங்களில் வெளிப் படுத்தினர். புலமை நுட்பம், கற்பனை நயம், அணிகள் செறிந்த யாப்பு, மெய்ம்மை, நாடகப் பாங்கு, புதிய மொழிநடை, அறிவியல் தத்துவ

விளக்கங்கள் யாவும் இடம் பெற்றுப் புதுப்பொலி வோடு இக்கவிதை விளங்கியது.

மெய்விளக்கக் கவிதையில் காணப்படும் மேதைமை, கருத்து வெளிப்பாடு, இருண்மை, புதுமைப் போக்கு, கலைநுட்பம், தொகுத்தளிப்பு, அறிவு சார்ந்த ஆய்வு முறை, மரபு மீறல், உளவியல் மெய்ம்மை, ஊடுருவும் நகைச்சுவை, எள்ளல், ஐயம், அவலம், துணிச்சலான கருத்துச் சுதந்திரம், கடுங்குரல், ஆற்றல் மிக்க படைப்பாற்றல், விட்டுக் கொடுக்காத காரணகாரியம், தொலைவுப் படிமம், தொலைவு உவமை யாவுமே புதுக் கவிதைக்குத் திறந்து விடப்பட்ட வாயில்கள்.

அளவுக்கு மீறிய மரபுச் செல்வத்தில் திளைத்துச் சோம்பலாக உறங்கிக் கொண்டிருந்த பண்டைக் கவிதைக்கு விழிப்புணர்ச்சியூட்டித் தட்டி எழுப்பிய புதிய பூபாளம் மெய்விளக்கக் கவிதை உத்தி.

இது

கருத்தையும் கலையையும்
கலந்து இணைத்த
புதிய உத்தி.

அனுபவத்தையும் சிந்தனையையும்
அளவோடு இணைத்த
நேர்த்தியான கலவை.

காதல், கடவுள
என்னும் கரைகளுக்குள் ஓடிய
கவிதை வெள்ளம்.

17ஆம் நூற்றாண்டில் ஆங்கில நாட்டில் மெய்விளக்கக் கவிதைத் துறையைத் தோற்றுவித்த பிதாமகன் **ஜான் டன்** (John Donne). அவனைத் தொடர்ந்து அத்துறைக்குப் புகழ் சேர்த்த கவிஞர்கள் **ஜியார்ஜ் ஹெர்பர்ட், ஹென்றி வாகன், ரிச்சர்ட் க்ராஷா, தாமஸ் கேரூ, ஆண்ட்ரூ மார்வெல், அப்ரஹாம் கௌலீ,** ராபெர்ட் ஹெரிக் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

மெய்விளக்கக் கவிதையின் பொதுப் பண்புகள்:

புதுமையான படிம உத்தி (Novelty of Images), கடின உருவகங்கள் (Strained Metaphors), தொலைவு உவமைகள்(For fetched Similes), மிகையான உயர்வு நவிற்சி (Extravagant Hyper bole) தர்க்கம் (Logic) ஆன்மதரிசனம் (Mysticism), புலமை (Scholasticism).

மெய்விளக்கக் கவிஞர்களிடம் காணப்படும் பொதுவான குறைபாடுகள்:

1. புதுமை விருப்பத்துக்காக இவர்கள் பழைய மரபுகளை மீறத் தயங்கவில்லை.
2. தெளிவற்ற படிமங்களையும், நம்ப முடியாத க்ற்பனைகளையும் புதுமை கருதிக் கையாண்டனர்.
3. சொல்லும் கருத்துக்களை விரசமாகவும் கொச்சையாகவும் இவர்கள் சொல்லத் தயங்கிய தில்லை.

4. சுதந்தரமாகவும் காரண காரியத்தோடும் சிந்தித்த இவர்கள் பிறரைச் சாடும் அங்கதப் பாடல்களில் (Satire) மிகவும் வன்மையான சொற்களைக் கையாளத் தயங்கியதில்லை.

இந்த மெய்விளக்கச் சட்டையைச் சுரதாவுக்கு மாட்டுவது எனது நோக்கமன்று. புதுமை காரணமாகச் சுரதாவின் பாட்டில், மாணவப் பருவத்திலிருந்தே எனக்கு ஓர் ஈடுபாடு இருந்தது. புதிது புதிதாக அவர் படைத்த உவமைகளும், அவரது புதிய கவிதைப் பாணியும் என்னை வியப்பில் ஆழ்த்தின. அவருடைய கவிதை உத்திகளைப் பின்பற்ற முயற்சி செய்தபோது மிகவும் உழைக்க வேண்டியிருந்தது. ஆழமாகச் சிந்திக்க வேண்டியிருந்தது.

ஆங்கில இலக்கியக் கவிதைகள்பால் ஆர்வம் ஏற்பட்டு நான் அவற்றைப் படித்துக் கொண்டிருந்த காலத்தில், கவிஞர் அப்துல் ரகுமான் ஒருநாள் பேச்சு வாக்கில், இந்த மெய்விளக்கக் கவிஞர்களைப் பற்றிப் பாராட்டிக் கூறினார். ரிச்சர்ட் க்ராஷா என்ற மெய் விளக்கக் கவிஞர், மேரி மக்தலேனாவைப்பற்றி எழுதியுள்ள 'The Weeper' என்னும் கவிதையிலிருந்து சில வியக்கத் தக்க வரிகளை எடுத்துச் சொன்னார். உடனே என் கவனம் ஆங்கில மெய்விளக்கக் கவிஞர்கள் பக்கம் திரும்பியது. அவற்றைப் படிக்கத் தொடங்கியதும் சட்டென்று சுரதா என் உள்ளத்தில் வந்து நின்றார்.

கவிதை உத்தியிலும், சிந்தனைப் போக்கிலும் சுரதாவுக்கும் மெய்விளக்கக் கவிஞர்களுக்கும் சில ஒற்றுமைகள் இருப்பதைப் படிக்கப் படிக்கப் புரிந்துகொண்டேன்.

மெய்விளக்கக் கவிதைகளில் எனக்கு ஈடுபாடு ஏற்பட்டதும் அக்கவிதைப் பண்புகளைப் பற்றியும் விரிவாக அறிந்துகொள்ள வேண்டும் என்னும் ஆர்வம் ஏற்பட்டது. மெய்விளக்கக் கவிதை பற்றிய திறனாய்வு நூல்களைப் படிக்கத் தொடங்கினேன். சுரதாவின் கவிதைப் பாணி தோன்றுவதற்குரிய காரணங்கள் பற்றியும், மாறுபட்ட அவர் கவிதை உத்திகள் பற்றியும் சிந்தித்தபோது, என் உள்ளத்தில் சில பொருத்தமான கருத்துகள் தோன்றின.

சுரதாவின் கவிதைப் பண்புகள் பற்றி எழுது வதற்கு முன் இருபதாம் நூற்றாண்டில் அவருக்கு முற்பட்ட கவிதை இலக்கியப் பாரம்பரியம் எப்படி இருந்தது என்பதை ஆராய்வோம்.

பாரதி பாஞ்சாலிசபதம், குயில்பாட்டு போன்ற சிறு காப்பியங்களை எழுதினார், பாரதிதாசனும் அவரைப் பின்பற்றிச் சஞ்சீவி பர்வதத்தின் சாரல், புரட்சிக்கவி, பாண்டியன் பரிசு, எதிர்பாராத முத்தம், தமிழச்சியின் கத்தி போன்ற சிறுகாப்பியங்களை எழுதிக் குவித்தார். அவர்களைப் பின்பற்றி எழுதிய கவிஞர்களுக்கும் இக்காப்பிய வெறி பற்றிக் கொண்டது.

தனித்தன்மையோடு புதுமையான சிறு காப்பியங்களைப் படைக்க முயற்சி செய்யாமல் பாரதி, பாரதிதாசன் காப்பியங்களை நகல் எடுக்கத் தொடங்கினர். அவற்றைப் படிக்கும்போது, பாரதி, பாரதிதாசன் படைப்புகளே நினைவுக்கு வந்தன. தலைப்பு மாற்றம் தவிர, உள்ளடக்கமும் உணர்ச்சி களும் ஒன்றாகவே இருந்தன. சிலகவிஞர்கள் பாரதி, பாரதிதாசன் பாத்திரப் படைப்புகளை அப்படியே எடுத்துத் தங்கள் காப்பியத்தில் பெயர் மாற்றிச் செருகிக் கொண்டனர்.

பெண்ணுரிமை, விதவைமணம், மடமை ஒழிப்பு ஆகிய கருத்துக்களை மையமாக வைத்துக் காலத்தின் தேவைக்கேற்பச் சீர்திருத்த நோக்கோடு, கதைக்கவிதை (Story Poem)களைத் தமிழில் முதலில் படைத்தவர் பாரதிதாசன். அவரைப் பின்பற்றி இளங் கவிஞர்கள் பலர் அதே கருத்துக்களை மையமாக வைத்து நிறையக் கதைக் கவிதைகளை எழுதத் தொடங்கினர். ஆனால் அவரை விட்டு விலகிச் சென்று கதைக் கவிதைத் துறையில் புதிய சாதனை களை யாரும் செய்யவில்லை.

பாரதிதாசன் இயற்கையைப் பற்றி எழுதிய அழகின் சிரிப்பு' ஒரு வெற்றிப் படைப்பு. இளங்கவிஞர்கள் அதையும் விட்டுவைக்கவில்லை. அதன் மறு பதிப்பாகப் பல நூல்கள் தோன்றத்

தொடங்கின. அவை அழகின் சிரிப்பின் எதிரொலி களாகவே இருந்தன.

பாரதிதாசன் குடும்பவிளக்கு மட்டும் அதற்கு விதிவிலக்கு. அதையாரும் நெருங்க முடியவில்லை. பிறர் பாடுவதற்குப் பாரதிதாசன் எதுவும் அதில் மிச்சம் வைக்கவில்லை.

மேலே குறிப்பிட்ட காரணங்களால் பாரதி, பாரதிதாசன் கவிதை இயக்கம் அதிகமாகப் பழுத்து, கனிந்து, தோல் சுருங்கி அழுகும் நிலை ஏற்பட்டது. அந்தச் சமயத்தில் சுரதா தமது புதிய கவிதைப் பாணியைத் தொடங்கினார்.

பாரதி-பாரதிதாசன் கவிதை இயக்கம் (School of Bharathi and Bharathi Dasan Poetry) சோர்வுகண்ட நேரத்தில் தோன்றிய சுரதாவின் பாணி ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

மில்டன் போன்ற காப்பியக் கவிஞர்களும் (Epic Poets), வொர்ட்ஸ் வொர்த், பைரன் போன்ற கற்பனை நெறிக் கவிஞர்களும்(Romantic Poets), ஷெல்லி போன்ற புரட்சிக் கவிஞர்களும் (Revolutionary Poets) தங்களுக் கென்று வரையறுத்துக்கொண்ட அரசியல், சமுதாயக் கொள்கைகளைக் கொண்டிருந்தனர். மெய்விளக்கக் கவிஞர்களுக்கு வரையறுக்கப்பட்ட கொள்கை எதுவும் கிடையாது. கருத்துப் புரட்சியைவிடக் கவிதை உத்திகளில் இவர்கள் புரட்சி செய்தனர்.

இவர்கள் காதலையும் பக்தியையுமே தமது முக்கியமான கருப்பொருள்களாகக் கொண்டனர்.

கவிஞர் சுரதா, நாத்திகக் கவிஞரான பாரதிதாசன் வழியில் வந்தவர் ஆகையால், பக்தித் துறையை அவர் தீண்டவில்லை; காதலையே தமது கருப்பொருளாகக் கொண்டார். காதலைப் பாடுவதில் சுரதாவுக்கு விருப்பமதிகம்; அதை நுட்பமாகப் பாடுவதில் சுரதாவுக்கு இணை சுரதாவேதான்.

காதலையும் பக்தியையும் தமது கவிதைக்குரிய கருப்பொருளாக மெய்விளக்கக் கவிஞர்கள் கொண்டாலும், அன்றாட அரசியல், சமூக நிலை, நடைமுறை வாழ்க்கையில் தட்டுப்படும் சின்னஞ்சிறு நிகழ்ச்சிகள் ஆகியவற்றையும், சுவையான கவிதைகளாக மாற்றினர். சுரதாவும் அவ்வாறு செய்தார்.

கல்விப் பரப்பு

இங்கிலாந்து நாட்டில் வாழ்ந்த மெய்விளக்கக் கவிஞர்கள் பலதுறைக் கல்வியறிவு பெற்றவர்கள். அவர்கள் தமது காலத்தில் மக்களிடத்தில் வரவேற்புப் பெற்றிருந்த சமயதத்துவம், வானவியல், தர்க்கம், ரசவாதம் (Alchemy) வரலாறு ஆகிய பல கலைகளையும் பயின்று தமது அறிவை விசாலப்படுத்திக் கொண்டிருந்தனர். இவ்வாறு தாம் கற்ற பல்கலை அறிவையும் தாம் படைக்கும் கவிதையில் காட்டிக்கொள்ள விரும்பினர்.

சுரதாவும் கண்டது கற்கும் பண்டிதர். அவர் பொழுது போக்கே திருவல்லிக்கேணிக் கடற்கரைச் சாலையில் பழைய நூல்கள் வாங்குவதுதான். மஸ்தான் சாகிபு பாடல் முதல், மார்கரட் தாட்சர் வரை, பதார்த்த குணசிந்தாமணி முதல் பல்லி சொல்லும் சகுணப் பலன் வரை எந்த நூல் கிடைத்தாலும் வாங்காமல் விடமாட்டார். வாங்கிப் படித்தும் விடுவார்.

பலதரப்பட்ட செய்திகளும், வெளியே விட்டால் போதுமென்று அவர் மூளையைக் குடைந்து கொண்டிருக்கும்; அடிக்கடி கவிதை எழுதும் போதெல்லாம் அவைகளுக்கு விடுதலை கிடைக்கும்; அவற்றின் அணிவகுப்பைக் கீழே காணலாம்.

வரலாறு

பாலிலே குளித்திட்டானாம்
பனிமங்கை கிளியோ பாத்ரா

-தேன்மழை, பக். 44

தென்கோடித் திருடன்யான் ஆல யத்தில்
திருடியுள்ளேன் திருமங்கை ஆழ்வார் போலே
அன்றாடம் கன்னியரைக் கற்பழித்தே
ஆனந்தம் கண்டேன் யான் கோபாட் போல,
முன்கோபம் கொண்டவன்யான் பாண்டி நாட்டு
முடிவேந்த னாம்தந்து மாறன் போல!

-தேன்மழை, பக். 80

பேர்வாய்ந்த போர்வேந்தன் சந்த்ர குப்தன்
பிறராலே தீங்குவரும் என்றே அஞ்சி
ஓர்நாளைக் கோரிடத்தில் உறங்கு வானாம்

- தேன்மழை, பக். 196

ஆயிரத்தைந் நூற்றுநாற் பத்தி ரண்டாம்
ஆண்டுதனில் அவதரித்த அக்ப ரோடு

-அமுதும் தேனும், பக். 21

அன்றாடம் ஆராய்ந்தான்; நோன்பு நோற்றான்
அக்பரைப்போல் குறைவாக உறங்கி வந்தான்

-அமுதும் தேனும், பக். 34

மீன்கறியைத் தின்றதனால் துக்ளக் செத்தான்
மிதமிஞ்சினா லெதுவும் தீமை செய்யும்

- துறைமுகம், பக்.32

சம்பங்கிப் பூவே பௌத்த
சங்கிகள் என்போர், மாட்டுக்
கொம்புக்குள் உப்பு வைத்துக்
கொள்வதுண் டென்று சொன்னான்

- துறைமுகம், பக்.49

இலக்கணம்

வேற்றுமையை வினைச்சொற்கள் ஏற்ப தில்லை
வெறும்பாட்டைத் தமிழ்ச்சங்கம் சேர்ப்ப தில்லை.

-தேன்மழை, பக்.85

தகுதி மிக்கோர் தருகின்ற பட்டம்
பகுதி போல நிலைத்து நிற்கும்

-தேன்மழை, பக்.170

வினையுவமை பயனுவமை, உடல்அ மைப்பு
விளக்குகின்ற மெய்யுவமை, மின்னும் வண்ணம்
தனைக்குறிக்கும் உருவுவமை எனவ குத்த
தமிழ்த் தொல்காப் பியச்சட்டப் படியிம் மங்கை
வினைபயன்மெய் உருஇவற்றின் கூட்டோ?- பற்கள்
விதைக்காத விளைவுக்கோர் எடுத்துக் காட்டோ?

-அமுதும் தேனும், பக். 17

சற்று நீ பிரிந்திட் டாலும்
தளருவேன்! தனிமை நோயால்
குற்றிய லுகர மாவேன்!
கொதித்திடும் வெந்நீ ராவேன்!

-'அனந்தநாயகி'

-சுரதா இதழ், (15.4.68)

சாமுத்திரிகா லட்சணம்

சிலேட்டும தேகம் அமைந்தவள் ஆகலின்
கூந்தல் நீண்ட கோதையாய் விளங்கினாள்

-தேன்மழை, பக். 136

பத்தினியே இதனைக்கேள்! நாகப் பாம்பின்
படம்போன்று விரிந்தமைந்த கழுத்தும் மார்பும்
சித்திரம்போல் ஒழுங்கான உடலும், நன்கு
சிவந்திருக்கும் மாந்தளிர்போல் நீண்ட நாக்கும்

கத்துகடல் சங்கைப்போல் நிறமும், நல்ல
கருநெய்தல் பூப்போன்ற கண்களோடே
ஒத்தபல சுழிகொண்ட குதிரை தன்னை
உலகத்தார் பாடலமென் றுரைப்பர் கண்டாய்.

பல்லி சகுணப் பலன்

தலையில் நீ வந்து வீழ்ந்தால்
சண்டையாம்; தோளில் வீழ்ந்தால்
நலம்பல பெருகு மென்பர்
நானிதை நம்ப வில்லை.

- தேன்மழை, பக். 43

மருத்துவம்

கனிந்தும் பயன்படாத பழம் எட்டிப்பழம்
நீயோ-
காய்த்தும் பயன்படுகிறாய்
என் கரங்களுக்கு!
கனிந்தும் பயன்படுகின்றாய்
என் இதழ்களுக்கு.

பித்த தேகம்
உடையவர்களுக்குத் தான்
கடைக் கண்
சிவப்பாக இருக்கும்;
உடல் எப்போதும்
வெப்பமாக இருக்கும்.

உன் கடைக் கண்
சிவப்பாகவும்

உன்னுடல் எப்போதும்
வெப்பமாகவும் இருக்கிறதே!
உன்னுடைய தேகமும்
பித்த தேகந்தானா?-என்றான்
உடனே அவள்
அவனைப் பார்த்து-
ஒரு மருத்துவரிடம்
கேட்க வேண்டிய கேள்வியை
இந்த-
மங்கையிடம் கேட்கிறீர்களே-
என்றாள் அவள்.

-எச்சில் இரவு,பக். 70

சனியன்றும், புதனன்றும் எண்ணெய் தேய்த்துத்
தலைமுழுகி வருவோர்க்கு, மேலும் மேலும்
நினைவாற்றல் அதிகரிக்கும்; இதனை நாங்கள்
நெடுங்காலம் ஆராய்ந்தே சொல்லு கின்றோம்.

-சுறைமுகம், பக்.62

தாவரவியல்

வாட்டும் முன்பனி வருகை தருகையில்
தின்னும் இலந்தை திரண்டு பழுக்கும்.

- சுரதா இதழ், 1.3.68

பூகோளம்

ஆஸ்திரேலியா-
தீவுகளுக்குள் ஒரு தீவாகவும்

கண்டங்களுக்குள்
ஒரு கண்டமாகவும்
இருப்பது போல்
காமராஜர்-
தொண்டர்களுக்குத் தொண்டராகவும்
தலைவர்களுக்குத் தலைவராகவும்
விளங்குகின்றார்.

சித்தாந்தம்

சத்தென்றால் உள்ளதென்று பொருளாம்; உன்னைத்
தழுவிய பின் நானதனைப் புரிந்து கொண்டேன்
சித்தென்றால் தன்னைத்தான் அறிவ தென்பர்;
தினையளவே நானென்னை அறிவேன்

-சுரதா இதழ் 15.3.68

விநோதமான கற்பனைகள்

சில சமயங்களில் மெய்விளக்கக் கவிஞர்கள் பலவித உணர்ச்சிகளால் பின்னப்பட்டு, தாங்கள் கூறுபவை காரணகாரியங்களுக்கு ஒத்துவருகின்றனவா என்பதைப் பற்றிக் கவலைப்படாமல், புதிர் போலப் பூடகமாகக் கூறுவதும் உண்டு. சுரதாவின் படைப்பு களிலும் இத்தகைய கற்பனைகளைப் பலவிடங்களில் காணலாம்.

பிறர் சொல்லாத மாதிரி புதுமையாகச் சொல்ல வேண்டும் என்ற காரணத்திற்காகச் சிலவிடங்களில் குழப்பமாகவும், சிலவிடங்களில் புதிர்போலவும்,

சிலவிடங்களில் நம்ப முடியாதபடியும் சுரதா பாடுகிறார்.

தன் கணவன் ரகுநாத சொக்கலிங்க நாயக்கன் இறந்த பிறகு விதவை மீனாட்சி, அரியணை ஏறித் திருச்சியை ஆட்சி செய்கிறாள். தாயுமானவர் மீனாட்சியின் அரண்மனையில், பெரிய சம்பிரதி' (தலைமைக் கணக்கர்) யாகப் பணி புரிகிறார். இளமையும் அழகும் மிக்க தாயுமானவர் மீது மீனாட்சிக்குக் காதல் ஏற்படுகிறது. அவள் தனது காதலை வெளிப்படுத்தியபோது, தாயுமானவர் மறுக்கிறார். அவளைக் கண்டிக்கவும் செய்கிறார். காதல் வயப்பட்ட மீனாட்சி,

பளிங்குதனைக் கரைத்ததுபோல் இருக்கும் நீரின்
பாசியென்றே ஏசியெனைப் பேசினாலும்
அளவுக்கே அடங்காத ஆசை யென்னை
அங்குமிங்கும் இழுக்கிறதே என்ன செய்வேன்!
வளைவுதனை முடிப்பதில்லை புருவம்; எல்லாம்
வாழ்நாளில் நிறைவேறி விடுவ தில்லை.
பிளவுபடும் இயல்புடைய உளுந்தின் கூட்டம்
போன்றவர் அன்றோபுவியில் வாழும் பெண்கள்!

என்று கூறி மன்றாடுகிறாள். 'பெண்களைப் பிளவுபடும் உளுந்தின் கூட்டம்' என்று சுரதா ஏன் குறிப்பிடுகின்றார் என்னும் காரணம் தெளிவாகப் புரியவில்லை.

வினை, பயன், மெய், உரு என்னும் உவமை வகையில் எதைச் சேர்ந்தது இது என்றும் புரியவில்லை.

உளுந்து மட்டுமா பிளவுபடுகிறது? எல்லாப் பருப்பு வகைகளுந்தான் பிளவுபடுகின்றன. உளுந்தை மட்டும் இங்கு அவர் ஏன் குறிப்பிடுகிறார்? படிப்பவர்கள் குழப்பமடைகிறார்கள்.

வன்னிய வீரன் காப்பியத்தில் பஞ்சணைப் பறவை வேசிகுப்பாச்சியை அறிமுகம் செய்யும் கவிஞர்,

வேசி குப்பாச்சியோர் விளம்பர விளக்கு
பாவின் இனத்தைச் சேர்ந்த பரத்தை

என்று குறிப்பிடுகிறார். 'பரத்தையைப் பாவின் இனத்தைச் சேர்ந்தவள்' என்று குறிப்பிடக் காரணம் என்னவென்று நம்மால் புரிந்து கொள்ள முடிய வில்லை; குழம்புகிறோம். 'வேற்றுத் தளைவிரவ நடக்கும் பா' என்று சொன்னால் கூட ஓரளவு பொருத்தமாக இருக்கலாம்.

'கொய்யாக்கனி' என்னும் பாடலில் ஒரு பெண்ணைப் பற்றிப் பாடவந்த சுரதா,

வெள்ளிக் கிழமை பிறந்தவளாம் - அவள்
வேலிப் பருத்தியைப் போன்றவளாம்

பள்ளக் கடலவள் பார்வைகளாம் - புதுப்
பங்கயப் பூக்களே செங்கைகளாம்

என்று குறிப்பிடுகிறார். வெள்ளிக்கிழமை பிறந்த தனால் சோதிட சாத்திரப்படி அவள் சிறப்புப் பெற்றவளாக இருக்கலாம். 'ஆனால் வேலிப் பருத்தியைப் போன்றவளாம்' என்ற உவமையை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. வேலிப் பருத்தி எந்தவிதத்தில் சிறந்தது? இந்த உவமையின் ஆழத்தைப் புரிந்து கொள்ளாமல் விடக்கூடாது என்று நான் பதார்த்த குணசிந்தாமணியை எடுத்துப் புரட்டிப் பார்த்தேன். வேலிப் பருத்திக்கு 'உத்தாமணி' என்ற வேறு பெயரும் உண்டு.

'உணவில் மணத்தைத் தருகின்ற உத்தாமணி யிலையால் வாதநோய், விஷம், ஜன்னி, திரிதோஷம், வாதகுன்மம், சரீரக் குடைச்சல், குத்தல், நடுக்கல், தநுர்வாதம், சுவாசநோய், பலவிதத் தடிப்புகள், அக்கினி மாந்தம் இவை நீங்கும்; தீபனமுண்டாம்' என்று வேலிப் பருத்தியின் குணம் கூறப்பட்டிருக் கிறது. இவற்றுள் எந்தப் பண்பை அப்பெண்ணுக்குப் பொருத்துவது? 'தீபனம் என்றால் பசி. வேலிப் பருத்தியிலையைத் துவையல் செய்து சாப்பிட்டால் நல்ல பசியெடுக்கும் என்பர்.

ஒருகால் இப்பெண் காதற் பசியைக் கிளப்பி விடுவதால், கவிஞர் இவளை வேலிப் பருத்திக்கு ஒப்பிடுகிறாரோ என்று நானே குழம்புகிறேன்.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் இறப்புக்கு இரங்கிச் சுரதா பாடிய பாடல் அவருடைய தேன்மழையில் இடம் பெற்றுள்ளது. அதில் ஒரு விருத்தப்பா:

> பானையது வீழ்ந்துடைந்தால் அப்பா னைக்குள்
> பரவிநின்ற பழங்காற்றவ் விடத்தை விட்டு
> வானவெளி செல்வதில்லை; அதனைப் போன்று
> வைகுண்டம் எவர்மூச்சும் செல்வதில்லை.

என்று பாடுகிறார். இதில் 'வைகுண்டம் எவர்மூச்சும் செல்வதில்லை' என்னும் கருத்தை ஒத்துக் கொள் கிறோம். ஆனால் 'பானையுடைந்ததும், அதில் பரவி யிருந்த காற்று வானவெளியை அடைவதில்லை' என்று சொல்லுகிறாரே, அது எப்படி? ஏன் காற்று வானவெளியை அடையாது? பூமிக்குமேல் இருப்ப தெல்லாம் வானவெளிதானே! மேலும் காற்று வெப்பத்தால் லேசாகி வானவெளிக்குச் செல்வது இயல்பான நிகழ்ச்சிதானே! பானைக்குள் பரவியிருந்த காற்றுக்குமட்டும் விதிவிலக்கு உண்டா? மீண்டும் குழம்புகிறோம்.

இவை எல்லாவற்றையும் விட விநோதமான ஒரு குழப்பத்தைக் கவிஞர் மங்கை மாசா என்ற பாடலில் மிகச் சுவையாகச் சித்திரிக்கிறார். அப் பாடல், வெவ்வேறு பெயரில் பல பிறவிகளை எடுத்துள்ளது.

கான் சாகிப் என்ற வீரன் தக்கோலம் என்னும் ஊரை வெற்றி கண்டு, கொக்கூரைக் குருகூரைச் சூறையாடி, எக்காளமிட்டபடி தன் வீரர்களோடு வந்து கொண்டி ருக்கிறான். அப்போது ஒரு நாட்டுப்புறப் பெண்ணொருத்தி புற்கட்டைத் தலையில் ஏந்திய வண்ணம் எதிரில் வருகிறாள். அவள் கட்டான மேனி யில், கான் சாகிபின் உள்ளம் ஒட்டிக் கொள்கிறது. அவள் சம்மதத்தைப் பெற்று அவளைக் குதிரையின் மீது ஏற்றி வைத்துக்கொண்டு புறப்படுகிறான் கான் சாகிப்.

செல்லும் வழியிலேயே கான் சாகிப்புக்குக் காதல் பசி அதிகமாகிவிட்டது. அவளை உடனே அனுபவித்துவிட வேண்டும் என்ற அவா அவனை உந்தித் தள்ளுகிறது. குதிரையை விட்டுக் கீழே குதித்தான் கான் சாகிப்; அவளையும் கீழே இறக்கினான். காதலர் ஒதுங்க அவ்விடத்தில் அடர்ந்த காடோ, புதர்களோ எதுவுமில்லை. வெட்டவெளி! கான் சாகிப் மூளையில் ஒரு நூதனமான யோசனை தோன்றியது. குதிரையின் சேணத்தில் ஒரு சிறிய வெடி மருந்துப் பை இருந்தது. அந்த வெடிமருந்தைக் கையாலே வாரி வாயாலே ஊதினான். வெடிமருந்து காற்றில் பரவி, அவ்விடம் இருட்டாகிவிட்டது. அந்த இருட்டில் அவளைப் புணர்ந்தான் கான் சாகிப். எப்படி கற்பனை? பாட்டைப் படியுங்கள்.

குருவிகளும் தாமரையும் அயர்ந்து தூங்கும்
குளிர் இரவில் உயிர்கொல்லும் புதுப் பீரங்கி
மருந்தெடுத்து வாயாலே அதனை ஊதி
மாவீரன் ஓரிடத்தில் இருட்டு செய்தான்.
'இருங்க'ளென்று முந்தானை தனைய விழ்த்து
ஏந்திழையாள் திரைபோட ஆரம் பித்தாள்.
கரம்பிடித்தான் கட்டழகன்; கன்னி அந்தக்
கட்டழகன் தொட்டவுடன் குளிர்ந்து போனாள்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சுரதாவின் கற்பனைகள் நம்பமுடியாதனவாகவும், இயற்கைக்கு மாறுபட்டும், பொருத்தமில்லாமல் இருந்தாலும், புதுமை கருதியும், சுவை கருதியும் ஏற்றுக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

சாடல்

மெய்விளக்கக் கவிஞர்கள் பிறரைச் சாடும்போது கடுமையான சொற்களைக் கையாளத் தயங்குவ தில்லை. சுரதாவும் தயங்கியதில்லை.

எட்டயபுரத்தில் பாரதிக்கு மணிமண்டபம் எழுப்பப்பட்டுத் திறப்பு விழாவும் சிறப்பாக நடத்தப் பட்டது. 'பாரதி உலகக் கவியல்ல!' என்று மறுத்து முன்னொரு காலத்தில் அறிக்கைவிட்ட கல்கி, விழாவை முன்னின்று நடத்தினார். புகழ்பெற்ற திரைப்பட நடசத்திரங்களும் அரசியல் வாதிகளும் விழாவில் கலந்துகொண்டனர். ஆனால் பாரதியோடு

நெருக்கமாகப் பழகிய அன்பர்கள் யாரும் அழைக்கப் படவில்லை. இதைக்கண்ட கவிஞர் சுரதா குமுறுகிறார். அக்குமுறல் கொந்தளிக்கும் விருத்தப் பாடல்களாக வெளிவருகின்றது.

மானுக்குப் பின்மான்கள் செல்ல வேண்டும்
வால்குழைக்கும் நாய்சென்றால் சிறப்பு இல்லை
தேனுக்கு வேண்டுவது பாலா? வண்ணான்
துணிபிழிந்த தண்ணீரா? நிலவை ஏந்தும்
வானத்தில் பறந்தென்ன கொசுவின் கூட்டம்
வல்லூறு இருக்கையிலே? பலபேர் கூடிச்
சேனையைப்போல் சென்றார்கள்; ஆனால் வாளைத்
திருப்புகின்ற வீரர்மட்டும் விழாவில் இல்லை.

மலையிருக்க வேண்டாமா குறிஞ்சி என்றால்?
வயலிருக்க வேண்டாமா மருதம் என்றால்?
தலையிருக்க வேண்டாமா உயிர் இருக்க?
தமிழ்க்கவியின் உயிர்நண்பர், நெல்லை யப்பர்
நிலையென்ன? ஏன்அந்த விழாவில் இல்லை?
நீண்டகடல் புதுச்சேரிக் கவிஞர் எங்கே?
தலையாட்டிப் பொம்மைகளே, கனக லிங்கத்
தமிழ்ப்பறையன் ஏன்வந்து சேரவில்லை?

கவிஞர் கண்ணதாசனுக்கும் இவருக்கும் ஒருமுறை மோதல் ஏற்பட்டபோது,

கண்ணதாசா! நீயோர் சாயும் சீசா!
காற்றடித்த சேலையைப் போல் ஒதுங்கும் ராசா!

பண்பாடே அற்றவன்நீ! பழைய காலப்
பாட்டாலே பிழைப்பவன் நீ! ஒருகா லத்தில்
தின்டாடிக் கொண்டிருந்த தீயோ, இன்று
தென்றலிலே மிதக்கின்றாய்!

என்று 'ஏகதேச' எழுத்தில் விளாசுகிறார்.

சுரதாவிடம் 'சின்ன விஷயங்கள்' எவ்வளவு அழகாகக் கவிதைஉருவம் பெறுகின்றன என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு:

சீயன்னா தேனா வீனா
சீதேவி என்பேர். என்னை
நயன்னா தேவி என்பாள்
என்தோழி கமல வேணி.
தேயன்னா மானா என்னும்
தேமாவை விரும்பித் தின்பேன்.
பேயன்னா ஜானா மீது (பேனா)
பிரியாத பிரியம் உண்டு.

என்கொண்டை கூடைக் கொண்டை!
என்தொண்டை குயிலின் தொண்டை!
பொன்வண்டு குழலில் மொய்க்கும்;
பொய்த்தேமல் உடம்பில் மொய்க்கும்;
என்கெண்டைக் கண்கள் இன்னும்
யார்மீதும் மொய்த்த தில்லை!
தின்பண்டச் செவ்வாய் தன்னைச்
சிவப்பேற விட்ட தில்லை.

கூந்தலை அவிழ்த்து விட்டால்
குதிகாலில் வந்து வீழும்!
பாய்ந்துநான் நீந்தும் போது
பாவாடை கட்டிக் கொள்வேன்!
காந்தளைக் காணா தார்என்
கைவிரல் பார்த்தால் போதும்!
மாந்தளிர் போன்ற என்னை
மணப்பவர் எங்குள் ளாரோ?

குறிப்பு விளக்கம்

1.Dryden, A Discource Concerning the Original and Progress of Satire, 1693.

2. Sir Herbert Grierson, The Back ground of English Literature: Classical and Romantic P.115

3. Samuel Johnson, Life of cowley 1778.

4. Mrs. J. Bennet: Four Meta physical Poets.

5. T.S. Eliot, The Metaphysical Poets. 1921.

6. *சுரதா - கவிதை இதழ் 1.6.68.*

சுரதா
பதிப்பகம்

6. சுரதாவின் படிமங்கள்

ஒரு கவிதையைப் படிக்கும்போது, படிப்பவர் உள்ளத்தில் கவிஞன் புலப்படுத்தும் கற்பனைக் காட்சியே படிமம் (Image) எனப்படுகிறது. ஒரு கவிதையின் வெற்றிக்கு அதில் கையாளப்படும் படிமங்களே காரணம் என்று சொல்லலாம்.

இப் படிமங்கள் ஏற்கனவே கவிஞன் உள்ளத்தில் குவிந்திருக்கும் பழைய கருத்துக்களில் இருந்தும் தோன்றலாம்; அவனுடைய சொந்த அனுபவங் களிலிருந்தும் தோன்றலாம்; அவ்வப்போது வெளிப் படும் புதிய செய்திகளிலிருந்தும் தோன்றலாம்.

மரபுக் கவிஞர்கள் முன்னரே தாங்கள் படித்து ஊறிய புராண இதிகாசங்களிலிருந்தும், பண்டை இலக்கியங்களிலிருந்தும் படித்தறிந்த செய்திகளையே படிமங்களாக அடிக்கடி பயன்படுத்துவது வழக்கம்.

மெய் விளக்கக் கவிஞர்கள் எப்போதுமே மற்ற வர்கள் கையாளாத புதிய செய்திகளைக் கவிதையில் கையாள வேண்டும் என்பதிலே ஆர்வம் உள்ளவர்கள். எனவே அவர்கள் படிமங்களும் புதுமையாக இருக்கும்.

சுரதா எழுதியுள்ள கதைக் கவிதைகளுள் **'விதவையும் வேதாந்தியும்'** குறிப்பிடத்தக்கது. விதவையான திருச்சி அரசி, வேதாந்தியான தாயுமான வரைக் காதலிக்கிறாள்; ஒரு தலைக் காதல்! வேதாந்தி மறுக்கிறார்; அரசிக்கு அறிவுரையும் வழங்குகிறார். ஆனால் அரசியோ தன் சாதுரியப் பேச்சால் அவரைச் சாய்க்க முயற்சி செய்கிறாள். அப்போது சுரதா கையாளும் படிமங்கள் அந்த இடத்துக்கு மிகவும் பொருத்தமாக அமைந்திருக்கின்றன.

வெற்றிலை காய்ந்திருந்தால்கூட மக்கள் அதை நீரில் நனைத்துப் பதப்படுத்திப் பயன்படுத்துவர்; எறிந்துவிட மாட்டார்கள். தான் விதவையாக இருந்தாலும் பசுமை மாறாத தளிர் வெற்றிலை என்பதை அவள் தாயுமானவர்க்கு உணர்த்தும்போது சுரதா பயன்படுத்தும் வெற்றிலைப் படிமம் பொருத்தமாக இருக்கிறது.

காய்ந்திருக்கும் வெற்றிலையைக்கூட, மக்கள்
காவிரியின் நீர்நனைத்து உபயோ கிப்பர்;
பாய்ந்தோடும் கலைமானின் காது போன்ற
பச்சைநிற வெற்றிலையா யிற்றே நான்தான்!
வாய்சிவந்தே இருந்தாலும், தாம்பூ லத்தால்
வாய்சிவக்கக் கூடாது என்ப தில்லை.[1]

மேலும், தானே விரும்பி, வலிய வந்தணைக்கும் ஒரு பெண்ணின் இன்பம் கிடைத்தற்கரியது; மிகச் சுவையானது. அத்தகைய வாய்ப்பு எல்லாருக்கும்

எப்போதும் கிடைப்பதில்லை. அத்தகைய வாய்ப்பை ஓர் ஆண்மகன் விரும்பிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமே தவிர, தயக்கமோ தடுமாற்றமோ கொள்ளக் கூடாது என்று அறிவுறுத்துகிறாள் அரசி. இதற்குச் சுரதா பயன்படுத்தும் படிமம் வியக்கத்தக்கது.

சாய்ந்திருக்கும் மரத்தின்மேல் ஏறி ஓடத்
தயக்கமேன்? தாமதமேன்? தடுமாற்றம் ஏன்?

இதற்குத் தாயுமானவரின் மறுப்பைப் புலப்படுத்த வந்த சுரதா, சிறப்பான ஒரு படிமத்தின் மூலம் புலப்படுத்துகின்றார்.

வலைவீச முயல்கின்றாய் பாவம்! வீணில்
மலைமீதேன் அடிக்கின்றாய் ஆணி? [2]

'முடியாத ஒன்றிற்கு முயற்சிக்கக் கூடாது' என்பதை, இதைவிட ஆற்றலோடு புலப்படுத்த வேறு எந்தப் படிமத்தால் முடியும்?

கப்பல்கள் மேயாத கடலைக் கணவனை இழந்த பெண்ணுக்கு ஒப்பிடும் சுரதா, மக்கள் ஆரவாரத்தோடும், பண்டக சாலைகளோடும், கப்பல்கள் புடைசூழ இருக்கும் துறைமுகத்தை, மாதரும் மங்கலப் பொருளும் சுற்றமும் சூழ மணவறையில் தோன்றும் மணப்பெண்ணாகக் கூறும் படிமம் மிகச் சுவையானது.

துணையொடு கப்பல் நிற்கும்
துறைமுகம் சுற்றம் சூழ
மணவறை மீது தோன்றும்
மங்கையைப் போன்ற தாகும்.
கணவனை இழந்த பெண்ணும்
கலமற்ற கடலும் ஒன்றே [3]

சிறு பிரபந்தங்களில் சுரதாவுக்கு ஈடுபாடு அதிகம். அவர் படிக்காத பிரபந்தமே இல்லை என்று சொல்லலாம். அவற்றுள்ளும் தூதுப் பிரபந்தம் என்றால் அவருக்குப் பலாச்சுளை மாதிரி. பிரபந்த உத்திகளை நிறையத் தம் கவிதைகளில் கையாள்வதோடு, அவைகளில் வரும் உவமைகளையும் கையாள்கிறார்.

தூதுப் பிரபந்தங்களில் அடிக்கடி காட்சிதரும் விலைமாதர்களை இவர் எப்போதும் விட்டு வைப்பதில்லை. தம் படைப்புகளில் அவர்களுக்கு அடிக்கடி இடங்கொடுத்து வாழவைப்பது அவர் வழக்கம். ஓரிடத்தில் விலை மாதரை மிகப் பொருத்தமான ஒரு படிமமாக அவர் கையாள்கிறார்.

திருத்தக்க தேவரின் சீவக சிந்தாமணியைப் பாராட்டப் புகுந்த சுரதா, அதன் எளிமையையும் கருத்துப் புலப்பாட்டின் அருமையையும் குறிப்பிடும் போது,

கலைதேர்ந்த விலைமாதர் தொடுதோள் போன்று
கற்போர்க்கெல் லாம்மிக்க எளிதாய், அந்த
விலைமாதர் உள்ளம்போல், திட்ப நுட்ப
விளக்கமெலாம் அறிதற்கே அரிதாய்...[4]

என்று பாடும் அழகு சுவைத்து மகிழ்தற்குரியது.

பெரிய கருங்கல் ஒன்றைத் தூக்க முயன்று தோல்விகண்டவன், தன் இயலாமையைக் குறிப்பிட அதை முத்தமிட்டுச் செல்வது வழக்கம். உடன் கட்டை ஏறும் கொடிய பழக்கத்தைத் தம் ஆட்சிக்காலத்தில் தடுக்க முயன்று அக்பர் தோல்வி கண்டபோது, அத்தோல்வியைக் குறிப்பிடக் கவிஞர் இப்படிமத்தைப் பயன்படுத்துகிறார்.

கொடிதான இவ்வழக்கம் ஒழிய வேண்டிக்
கோவேந்தர் அக்பரவர் முயன்ற போது
'தடைபோட முயலாதே மன்னா!' என்றே
சத்தமிட்டார் வைதீக வெறியர்; தூக்க
முடியாத மிகப்பெரிய பாராங் கல்லை
முத்தமிட்டுப் பேசாமல் போதல் போலப்
பிடிவாதக் காரரெல்லாம் எதிர்த்த தாலே
பேரரசர் திட்டத்தை விட்டு விட்டார்.[5]

நிலவில் ஈர்ப்புச் சக்தி குறைவு. பூமியில் நடப்பதுபோல் வேகமாகக் கால் ஊன்றி அதில் நடக்க முடியாது. கால்களை மெதுவாக எடுத்து வைத்து நடக்கும்போது, மிதப்பதுபோல் தெரியும். வான் வெளி வீரர் ஆம்ஸ்ட்ராங் தன் வான்வெளிக்

கூண்டிலிருந்து நிலவில் அடியெடுத்து வைக்கும் நிகழ்ச்சியைத் தொலைக்காட்சியில் கண்டுகளித்த சுரதா, அதை விளக்க நம் உள்ளத்தில் மிகப் பொருத்த மான ஒரு படிமக் காட்சியை உருவாக்குகிறார்.

செங்கல்லின் மீதினிலே மெதுவாய் ஏறும்
சிலந்தியைப்போல் வானவெளி வீரர்
ஆர்ம்ஸ்ட்ராங்,
திங்களன்று நிலவின்மேல் காலை ஊன்றிச்
செயற்கரிய செயல்செய்தார்.[6]

காதலர்களின் உள்ளத்தில் விநோதமான ஆசைகள் ஏற்படுவது வழக்கம். அத்தகைய ஆசைகளை விளக்க இயற்கை மீறிய அதிதப் படிமக் காட்சிகளையும் சுரதா கையாள்கிறார்.

செங்கதிர்ச் சுடர்போல
என்கரம் நீண்டிருந்தால்
சிங்காரச் சிலையே உன்னை
இங்கிருந்தே தொடுவேன்.[7]

சில இடங்களில் சுரதா படிமங்களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கிச் செல்லும் அழகு படிப்போரை வியக்க வைக்கும்.

பட்டாடை கட்டிக்கொண் டிருக்கும் வெள்ளைப்
பால்நிலவோ! பளிச்சென்று மின்னும் மீனோ!
கட்டிலுக்கே விட்டுவைத்த சிலையோ! இல்லை
கண்ணாடி மண்டிலமோ! கரும்போ! பூவின்

பட்டியலோ! பொன்அந்தி வெயிலோ! கோவைப்
பழக்கொத்தின் அதிமுகமோ! படமோ! நீல
வட்டாரம் விட்டுவந்த வான மின்னோ!
வாய்பேசும் தாமரையோ! காவிக் கல்லோ![8]

குறிப்பு விளக்கம்

1. பக்.42. விதவையும் வேதாந்தியும், அமுதும் தேனும்
2. பக்.46 " "
3. பக்.21. நெய்தல் நீர், தேன்மழை
4. பக்.65. சமணன் சாதித்தான், தேன்மழை
5. பக் 200. வாழைப்பூ வேதாந்தம், தேன்மழை
6. பக்.13. என்கணவர் நிலவில் நடக்கிறார், துறைமுகம்
7. பக்.125. திரைப்படப் பாடல், துறைமுகம்
8. பக்.16. அமுதும் தேனும்..


வார்த்தை
வாசல்
சுந்தர

7. உவமைக் கவிஞர்

ஒரு பெண்ணுக்குச் சுருக்கமில்லாத ரவிக்கை பொருந்துவது போல, உவமைக்கவிஞர் என்ற பெயர் சுரதாவோடு ஒட்டிக் கொண்டிருக்கிறது.

ஒரு பொருளோடு மற்றொரு பொருளை ஒப்பிட்டுக் கூறுவது உவமை. இதனை 'உள்ளுறை உவமம்' என்றும் 'ஏனை உவமம்' என்றும் இரண்டு வகையாகப் பிரித்தனர் இலக்கண நூலார். இவற்றுள் ஏனை உவமம் பற்றியே இங்குப் பேசப்படுகிறது.

அகமும் புறமும் பற்றிப் பாடிய பண்டைப் புலவர்கள் உவமைகளைக் கையாண்டனர். இந்த உவமை **வினை, பயன், வடிவம், நிறம்** என்ற நான்கில் ஏதேனும் ஒன்றையோ, பலவற்றையோ அடிப்படையாகக் கொண்டு பிறக்கும். இவற்றை,

வினைபயன் மெய்யுரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமைத் தோற்றம் [1]

எனவும்

விரவியும் வரூஉம் மரபின [2]

எனவும் வரும் தொல்காப்பியச் சூத்திரங்களால் அறியலாம்.

பண்டைக் காலத்தில் புலமை நுட்பத்தை அளக்கும் அளவுகோலாக உவமை இருந்து வந்திருக் கிறது. குறுந்தொகை என்னும் சங்க இலக்கியத்தில் கடவுள் வாழ்த்து உட்பட நானூற்றொரு பாடல்கள் உள்ளன. பெருந்தேவனார் முதல் அம்மூவனார் இறுதியாக இருநூற்றாறு புலவர்கள் அதில் பாடி யுள்ளனர். அவர்களுள் பதின்மூவரின் பெயர்கள், அவர்கள் தமது பாடலில் எடுத்தாண்ட உவமை களாலேயே வழங்கப் பெறுகின்றன என்பதை அறியும் போது உவமையின் சிறப்புப் புலனாகும்.

உவமைகளின் உறுப்புக்கள் நான்கு. அவை உவமானம், உவமேயம் (பொருள்), உவம உருபு, உவமைக்கும் பொருளுக்கும் உள்ள பொதுத்தன்மை என்பன.

தொல்காப்பியர் காலத்தில் உவமையே அணியாகக் கருதப்பட்டது. அதனால்தான் செய்யுள் அலங்காரம் பற்றிக் கூறவந்த இயலுக்கு 'உவமவியல்' என்று அவர் பெயரிட்டார். இந்த உவமை அணியே பிற்காலத்தில் தோன்றிய அணிகளுக்குத் தாயாக விளங்கியது.

உவமை கவிதையில் தானாக வந்து குதித்து விடாது என்றும், ஒரு கவிஞன் நன்கு சிந்தித்தால்தான்

பொருத்தமான உவமைகளைக் கூற முடியும் என்றும் அத்திறமை எல்லாருக்கும் வாய்த்தல் அரிது என்றும் சுரதா ஓரிடத்தில் குறிப்பிடுகிறார்.

அப்பத்தைச் சுடும்போது பொத்தல் வந்தே
அதன்நடுவில் தானாக அமைதல் போலே
ஒப்பற்ற காவியத்தில் எங்கி ருந்தோ
ஓடிவந்து கருத்துக்கள் குதிப்ப தில்லை
ஒப்பிட்டுச் சொல்லுதற்குத் திறமை வேண்டும்
உழைத்தார்க்கே அத்திறமை வந்து வாய்க்கும்
உப்பற்ற உணவுக்கும் தாய்ப்பால் போன்ற
உவமையில்லாப் பாடலுக்கும் பெருமையில்லை.[3]

பிறமொழிக் கவிஞரும் உவமைக்குக் கவிதையில் சிறப்பிடம் தந்து போற்றியிருக்கின்றனர். மெய் விளக்கக் கவிஞர்கள் தமக்குமுன் இருந்த கவிஞர்கள் கூறாத புதிய உவமைகளைத் தேடிப் பிடித்துக் கூறுவதில் அதிக ஆர்வம் காட்டினர். அதுவும் சிந்தனையைத் தொலைவில் ஓடவிட்டு மிகவும் நுட்பமான உவமைகளைக் கூறுதல் அவர்கள் இயல்பு.

மேலை நாட்டுக் கவிதைத் திறனாய்வாளர்கள் இவ்வித உவமைகளைத் 'தொலைவு உவமைகள்' என்றே பெயரிட்டு அழைத்தனர்.

ஆங்கில மெய்விளக்கக் கவிஞர்களின் பிதாமகன் என்று கருதப்படும் **ஜான் டன்** (John Donne) தொலைவு உவமைகள் கூறுவதில் ஆற்றல் மிக்கவன். அவன்

கூறிய தொலைவு உவமைகளுள், காதலர்களுக்கு உவமையாகச் சொன்ன ஈயும் (Flea), கவராயமும் (Compass) பாராட்டுப் பெற்றவை. வேறு ஓர் உவமையை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

ஜான் டன் எழுதிய பாடல்களுள் 'காலை வணக்கம்' (The Good-Morrow) என்னும் பாடலும் குறிப்பிடத்தக்க ஒன்று. இதில் ஒரு பெண்ணிடத்தில் தான் கொண்டிருக்கும் தெய்வீகக் காதலைப் பற்றிக் (Spiritual love) குறிப்பிடுகிறான். ''மெய்விளக்கத் தத்துவப்படி, எந்த ஒரு பொருளும் அதன் மூலப் பொருட்களுள் முரண்பாடு தோன்றும்போது அழிகிறது. ஆனால் இவர்கள் காதலோ ஒரே மூலப் பொருளால் ஆக்கப்பட்டு ஒரே மாதிரியாக இருப்ப தால் அதற்கு அழிவில்லை'' என்று குறிப்பிடுகிறான்.

என் முகம் உன் கண்ணிலும்
உன் முகம் என் கண்ணிலும்
தெரிகின்றன.

நம் தூய உள்ளங்கள்
நம் முகத்தில் தென்படுகின்றன.
வடக்கில் குவியாத
மேற்கில் சரியாத-
நம்மிலும் சிறந்த-
அர்த்த கோளங்களை
எங்குக் காணமுடியும்?

இப்பாடலில் தன்னையும், தன் காதலியையும், பூமியின் இரண்டு அர்த்த கோளங்களுக்கு (Hemispheares) ஒப்பிடுகிறான். இரண்டு அர்த்த கோளங்கள் சேர்ந்ததுதான் பூமி உருண்டை. பூமியின் வடதுருவம் குவிந்தது; குளிர்ந்த பனி படர்ந்தது. பூமியின் மேற்குப் பகுதி சரிவானது.

இவர்கள் இருவரின் சேர்க்கையால் உருவாகியிருக்கும் காதல் உலகின் வடக்குப் பகுதி, குவிவதும் இல்லை; குளிர்வதும் இல்லை; மேற்குப் பகுதி சரிவதும் இல்லை. இவ்விடத்தில் குவிதல் குறைவதற்கும், குளிர்ச்சி செயலற்ற தன்மைக்கும் (Inaction), சரிவு காதற்சரிவுக்கும் (decline) குறியீடுகளாகக் கொள்ளவேண்டும்.

ஜான் டன் காலத்தில் புதிதாக வெளியிடப்பட்ட வானவியல் வல்லுநர் கெப்ளரின் கருத்துக்களே இக்கவிதையில் உவமையாக்கப் பட்டுள்ளன.

நாம் தமிழ்க் கவிதையில் காதலரின் நெருக்கத்தை 'மலரும் மணமும் போல் நகமும் சதையும்போல்' என்று மிகச் சுலபமாகச் சொல்லி விடுகிறோம். ஆனால் ஜான் டன் இந்த 'நெருக்கத்துக்கு' உவமை கூற பூகோள சாத்திரத்தில் நுழைகிறார்; வடதுருவத்துக்குத் தொலைவான பயணத்தையும் மேற்கொள்கிறார். அவர் உழைப்பை நம்மால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

சுரதாவின் கவிதைகளில் அவர் கையாளும் உவமைகளே ஆட்சி புரிகின்றன. 'உவமைக் கவிஞர்' என்னும் பட்டம் அவரோடு இயல்பாக ஒட்டிக் கொள்கிறது.

சுரதாவுக்குச் சிறு பிரபந்தங்களில் ஈடுபாடு அதிகம். அவற்றின் மூலைமுடுக்கில் கூறப்பட்டுள்ள விநோதமான உவமைகளையெல்லாம் சுரதா விழுங்கிச் செரிக்க வைத்திருக்கிறார். உவமை அழகில் உள்ளத்தைப் பறிகொடுத்த சுரதா, பிறர் கூறாத புதிய உவமைகளைக் கூறுவதில் ஆர்வம் காட்டத் தொடங்கினார். அம்முயற்சியில் வெற்றியும் பெற்றார்.

சுரதாவின் தேன்மழையில் 'குமணன்' என்னும் பாடல். நாடிழந்து காட்டில் தலைமறைவாகத் திரிந்த குமண வள்ளலைத் தேடிப் பெருந்தலைச் சாத்தனார் வருகிறார். குமணனிடம் தமது வறுமையை உருக்கமாகப் பாடுகிறார். இரக்கத்தால் உள்ளம் கரைந்த குமணன்,

ஏட்டடுக்கு மாளிகையும் நகரும் நாடும்
என்வசத்தில் இருக்கையில்நீ வந்திருந்தால்
ஒட்டகத்தின் காலடியை ஒத்த முத்தும்
ஒளிசிறந்த செம்பொன்னும் தந்தி ருப்பேன்-

என்று பெருந்தலைச் சாத்தனாரிடம் கூறுகின்றான்.

முத்து, முல்லை, கோவைப்பழம் போன்ற பொருள்கள் கவிதையில் உவமை சொல்வதற் கென்றே பிறப்பெடுத்தவை. இவை பிற பொருள் களுக்கு உவமைகள் ஆகின்றனவே தவிர, இவை களுக்கு உவமை கூறுதல் வழக்கில் இல்லை. அப்படிக் கூறினாலும் மிகவும் அரிதாகக் கூறுவர். சிலப்பதி காரத்தில் முத்துக்கு உவமை கூற வந்த இளங்கோவடிகள்,

சந்திர குருவே அங்கா ரகனென
வந்த நீர்மைய வட்டத் தொகுதியும் -

என்று குறிப்பிடுகிறார். இதில் வெண்ணீர்மை கொண்ட முத்திற்கு வெள்ளி என்னும் கோளையும், செந்நீர்மை கொண்ட முத்துக்குச் செவ்வாய்க் கோளையும் உவமை கூறுகின்றார்.

ஆங்கிலக் கவிஞனும் நாடகாசிரியருமான ஆஸ்கார் வைல்டு தான் எழுதியுள்ள சலோமி என்ற நாடகத்தில் சரிகைப் பையிலிட்ட முத்துக்களைப் பற்றிக் குறிப்பிடும்போது 'தங்க வலைக்குள் பிடித்து வைத்த ஐம்பது நிலவுகள்' (They are like fifty moons caught in a golden net) என்று குறிப்பிடுகிறான். இங்கே முத்துக்களுக்கு நிலவு உவமையாகிறது.

ஒட்டகம் தமிழ்நாட்டு விலங்கு அன்று. ஊருக்குள் வட்டக் காட்சிகள் (Circus) வரும்போது மட்டுமே அவற்றைக் காணமுடியும். குதிரையின்

காலடிச் சுவடு நீண்ட வட்டமாக (Oval) இருக்கும். ஒட்டகத்தின் காலடிச் சுவடு கவராயத்தால் போட்ட வட்டம் போல் இருக்கும். இதைச் சுரதா கூர்ந்து கவனித்து நினைவில் பதித்து, முத்துக்களுக்கு உவமை கூறியிருப்பது வியப்பாக உள்ளது.

'தரைமீன்' என்றொரு பாடல். அதில் ஆட்டன் அத்திகழாஅர்த் துறையில் நீந்தி விளையாடுகிறான். கரையில் அவன் மனைவி ஆதிமந்தி நின்று, அவன் நீந்தும் அழகைக் கண்ணால் பருகிக் கொண்டிருக் கிறாள். அவன் நீரில் பாய்ந்து மூழ்கி, பின் நீர் மட்டத்திற்கு வருவதை, யானைத் தந்தம் கீழே சரிந்து நுனியில் மேல்நோக்கி வளைந்து வருவதற்கு ஒப்பிடுகிறார் சுரதா. மிகவும் நுட்பமான உவமை!

பந்தெனவே காவிரியில் மிதந்தான்; நீரில்
பாராங்கல் போலமிழ்ந்தான்; சேனை யானைத்
தந்தமென மேல்நோக்கி எழுந்தான் அத்தி.

சில சமயங்களில் சில உவமைகளுக்காக இவர் நெடுந்தொலைவு பயணம் செய்வதுண்டு. உடன் கட்டை ஏறும் கொடிய பழக்கத்தை ஒழிக்க ஒரு சட்டம் கொண்டு வரவேண்டுமென்று லார்டு பெண்டிங் துரைக்கு ராஜாராம் மோகன்ராய் எழுதிய கடிதத்தைச் சுரதா கவிதையாக்கியிருக்கிறார். வரலாற்றுச் சிறப்பு மிக்க அக்கடிதம் சுரதாவின் கைபட்டு, ஒரு வானவில்லாக மாறியிருக்கிறது. சுரதாவின் ஆற்றலுக்கு அப்பாடல் ஓர் உரைகல்.

சமுதாய சீர்திருத்தச் சிந்தனைகளைத் துணிச்ச லோடு பரப்பி வந்த ராஜாராம் மோகன்ராய்க்கு எதிர்ப்பும் அதிகமாக இருந்தது. பழமை விரும்பிகள் அவரை ஒழித்துக்கட்ட ஒரு கொலையாளியை ஏவினர். அக்கொலையாளி மிகவும் உயரமானவன். அவனுக்கு உவமை சொல்ல அவனைப் போல் உயரமான ஓர் ஆளைத் தேடினார் சுரதா. சீன வரலாறு அவருக்குக் கை கொடுத்தது. சீன ஞானி கன்பூஷி யஸின் தந்தை **ஹூலி யாங்ஹை** என்பவர் பத்தடி உயரம் இருந்தார் என்று எங்கோ படித்திருக்கிறார். உடனே அச் செய்தியைத் தமது கவிதை வாகனத்தில் ஏற்றிவிட்டார்.

கன்பூஷ்யஸ் என்பவனோ சீன ஞானி
கற்றறிந்த மாமேதை உலகம் போற்றும்
அன்பாளன்; அவன்தந்தை ஹூலி யாங்ஹை!
அவனுயரம் பத்தடியாம்; சென்ற திங்கள்
முன்கோபத் தோடென்னை வெட்ட வந்த
முட்டாளும் அவனுயரம் இருப்பான்!

என்று பாடுகிறார். இவைபோன்று நுட்பமாகச் சிந்தித்து எழுதும் தொலைவு உவமைகள் (far fetched Similes) சுரதாவின் பாட்டிலே மலிந்திருக்கின்றன.

முக்கோணத் தமிழகத்தைத் தலைகீழான ஆய்த எழுத்துக்கு ஒப்பிட்டுக் கூறுகிறார்:

தாய்நாட்டுப் பற்றுடைய தெலுங்கன், அந்தச்
சகந்நாதக் கவியென்போன், தலைகீ ழான
ஆய்தஎழுத் தைப்போன்று நிலப்ப ரப்பு
அமைந்துள்ள தமிழ்நாட்டில் தங்க லானான்.[4]

அக்பரின் ஆசைமகள் லவங்கியின் நெற்றிக்கு உவமைக் கூறவந்த கவிஞர்,

வட்டமிட்ட வெண்ணிலவைப் பாதியாக
மடித்ததுபோல் முற்றாத நெற்றி [5]

என்று குறிப்பிடுகிறார். நெற்றியைப் பிறைநிலவுக்கு எல்லாரும் ஒப்பிட்டுக் கூறுவர். ஆனால் சுரதா அப்படிச் சொல்ல விரும்பாமல் வட்ட நிலவை இரண்டாக மடித்துவிடுகிறார்.

தோகை விரித்த மயிலைப்பார்த்து

வண்ணத் தோகையை வட்டமாய் விரித்தே
'ஓ' வெனும் எழுத்தை உண்டாக்கிக் காட்டினை! [6]

என்று வியந்து பாராட்டுகிறார். இந்த உவமை வேறு யாரும் சிந்திக்காத புதுமை. பாண்டி நாட்டின் மீது படையெடுத்து வந்த மைசூர் மன்னன் அமைத்த பாசறைக் கூடாரத்தின் அமைப்பை விளக்கவந்த கவிஞர்,

இரும்புதந்த நெஞ்சுடையான், பாம்பின் பல்லில்
இடம்பெற்ற நஞ்சுடையான் எருமை நாட்டான்
கரும்புதந்த மாதர்கருங் குழல விழ்ந்து
கவிழ்ந்தாற்போல் கூடாரம் அமைத்து விட்டான்

என்று கூறும் உவமை புதுமையானது. அவிழ்ந்து தொங்கும் மாதரின் கவிந்த கருங்குழலை வீட்டில் நாம் நாள்தோறும் பார்க்கிறோம். கூடாரம் நம் உள்ளத்தில் தோன்றியதுண்டா? மேலே குறிப்பிட்டவை யாவும் வடிவத்தை அடிப்படையாகக் கொண்ட உவமைகள்.

ஆட்சி அன்பின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். அதிகாரத்தின் அடிப்படையில் அமையும் கடுங்கோல் ஆட்சி அழியும் என்ற கருத்தை வற்புறுத்த வந்த கவிஞர்,

கட்டாயப் படுத்துகின்ற ஆட்சி, ஓர்நாள்
கட்டாயம் கருகிவிடும்; தொட்டி நீரில்
விட்டெறிந்த உப்பைப்போல் கரைந்தே தீரும்.[8]

என்று பாடுகிறார். உப்பு கரைக்கத் தேவையில்லாமல் தானே கரைவதைப்போல், கொடுங்கோல் ஆட்சி தானாக அழியும் என்ற நயம் இந்த உவமையால் இயல்பாகப் பெறப்படுகிறது.

காதலர்களின் முதல் சந்திப்பு எல்லாக் கவிஞர் களாலும் பாராட்டிப் பேசப்படுகிறது. ஷேக்ஸ்பியர் கூட 'கண்டதும் காதலை(Love at first sight)ப் பாராட்டி எழுதுகிறார்.

ஒத்த அழகும், அறிவும், திருவும் அமைந் திருக்கும் இருவர் முதலில் சந்திக்கும்போது அவர்கள் கண்கள் 'ஆயிரம்' பேசுகின்றன. அவர்கள் உள்ளத் திலும், உயிரிலும் இதற்குமுன் அனுபவித்திராத ஓர்

உணர்ச்சி ஓட்டம் திடீரென்று தோன்றி விரைவதை உணர்வர். இதற்கு உவமை கூற வந்த சுரதா,

தளர்ந்தோடும் நதியின்நீர் மழைக்கா லத்தில்
தனிவேகம் பெறுவதுபோல் உணர்ச்சி பெற்றாள் [9]

என்று பாடுகிறார்.

ஆற்றில் திரியும் தெப்பம் நனைந்து எப்போதும் ஈரமாக இருக்கும். எப்போதும் ஈரமாக இருக்கும் விலைமாதைத் 'தெப்பம்போல் எப்போதும் நனையும் நங்கை' என்று குறிப்பிடுவதும், அவள் கச்சுக் கடங்காத கொங்கையை,

அசோகன் ஆட்சிக்(கு)
அடங்காத தமிழாட்சி போன்று கச்சுக்(கு)
அடங்காத பொன்கொங்கைக் குடங்கள் [10]

என்று குறிப்பிடுவதும், கவிஞரின் குறும்புக்கார உவமைகள்.

காதலன் முன் காதலி வெட்கித் தலை குனிவது சங்க இலக்கியம் முதலாக எல்லா இலக்கியங்களிலும் பேசப்படும் பொதுவான நிகழ்ச்சி. ஆட்டனத்தியின் பாராட்டைக் கேட்டு, ஆதிமந்தி நாணத்தால் குனிந்தாள். எப்படி?

'பிழிந்ததொரு புடவையெனக் குனிந்து கொண்டாள்'. இந்த உவமையின் அழகிலும் மெய் மறந்து நம்மை இழந்து நிற்கிறோம். சலவைத்

தொழிலாளி ஈரத் துணியை லாவகமாகக் கையிலெடுத்துப் பிழியும் அழகையும், அதை அவன் கரையில் வீசும் அழகையும் நேரில் பார்த்தால்தான் இந்த உவமையின் நுட்பம் புரியும்.

நடந்து செல்லும்போது கணவன் கம்பீரமாக முன்னே செல்வதும், அவனைத் தொடர்ந்து அடக்கமாக மனைவி வருவதும் இயல்பாக எங்கும் காணும் நிகழ்ச்சி. இதை,

மதிமதுரப் புலவரெ லாம் புகழ்ந்து பாட
வரலாற்றுப் பேரழகி ஆதி மந்தி
எதுகைவரல் போலடுத்து வந்தாள்; அத்தி
என்பானோ, மோனையைப் போல் முன்னே
வந்தான்.[11]

மோனையைத் தொடர்ந்து வருவதுதானே எதுகை!

மூங்கிலில் எழும் இன்னிசைக்குக் குட்டி யானையின் கொட்டாவியையும், பழச்சாற்றில் கலந்து கொடுத்த நஞ்சைத் தோன்றா எழுவாய்க்கும் குறிப்பிட்டுச் சொன்ன உவமைகள் சுவைக்கத் தக்கன. இவை யாவும் வினை உவமைகள்.

ஈரோட்டுப் பெரியாரின் சட்டை போல
இருண்ட கடல்...[12]

என்பது நிறத்தின் அடிப்படையில் தோன்றும் உருஉவமை.

குறிப்பு விளக்கம்

1,2- சூத்திரங்கள் 272,273 உவமையியல், பொருள், தொல்காப்பியம்

3. பக்.65. சமணன் சாதித்தான். தேன்மழை.
4. பக்.10. அமுதும் தேனும்
5. பக்.11 அமுதும் தேனும்
6. பக்31, மயில், தேன்மழை
7. பக்.188, படைவேண்டும், தேன்மழை
8. பக்.14, அமுதும் தேனும்
9. பக்.16, அமுதும் தேனும்
10.
11. பக்.49, தரைமீன், தேன்மழை
12. பக். 14. என்கணவர் நிலவில் நடக்கிறார், துறைமுகம்

8. சுரதாவின் நடை

மொழிநடையை ஆங்கிலத்தில் Style and diction என்று குறிப்பிடுவர். இருபதாம் நூற்றாண்டு மரபுக் கவிஞர்களுள் சுரதாவின் கவிதைநடையை மிஞ்சும் ஆற்றல் பெற்ற கவிஞர்கள் வேறு யாருமில்லை. 'இஃதுண்மை'. வெறும் புகழ்ச்சியில்லை!'

சுரதாவின் நடையில் எளிமை, இனிமை, அழகு மூன்றையும் காணலாம். சென்ற நூற்றாண்டுக் கவிஞர்கள் எளிமையை இகழ்ந்தனர்; 'வெள்ளைப் பாட்டு' என்று கேலி செய்தனர். ஆனால் எளிய சொற்களில் அரிய கருத்துக்களை எடுத்துச்சொல்லத் தெளிந்த சிந்தனையும், அரிய ஆற்றலும் வேண்டும். அதை முதலில் சாதித்துக் காட்டியவர் இராமலிங்க அடிகள்.

சுரதா கவிதையில் பயன்படுத்தும் சொற்கள் எளிமையானவை; ஆனால் அவர் கவிதையில் கையாளும் கருத்துக்கள் அரியவை. அவற்றை எல்லாரும் புரிந்துகொண்டு சுவைக்க முடியாது. அதற்கு இலக்கண இலக்கியப் புலமையும், பல்துறை அறிவும் வேண்டும்.

தோல்சீவிய கரும்புத் துண்டுகளைப் போலவும், இனிக்கும் கனிச்சுளை போலவும், சிறிய சிறிய தொடர்களோடு கூடிய வினை முடிவுகள் படிப்ப வரைப் பரவசப்படுத்தும். அருவியாகவும், தவழும் ஓடையாகவும், மணித்தேராகவும், நாட்டிய நங்கை யாகவும், துள்ளும் மானாகவும், தென்றலாகவும் இவர் கவிதை விளங்கும். ஆனால் புயலை இவர் பாட்டில் சந்திக்க முடியாது.

இருபதாம் நூற்றாண்டில் ஆசிரிய விருத்தம் அதிக விளம்பரம் பெற்றது. எளிமை காரணமாக எல்லாரும் அதையே கையாண்டனர். எண்சீர் ஆசிரிய விருத்தத்தில் எத்தனை விதமான சந்த வேறுபாடுகள் உண்டோ அத்தனை வேறுபாடுகளையும், புதுப் புதுப் பாணிகளையும் பாவேந்தர் படைத்துக் காட்டினார். சுரதா தம் ஆசிரியரைப் பின்பற்றி எண்சீர் விருத்தங்களையே விரும்பி எழுதினார். அரிதாகவே அகவலும், அறுசீர் விருத்தமும் எழுதினார்.

பாவேந்தர் விருத்தம் ஆண் விருத்தம், சுரதாவின் விருத்தம் பெண் விருத்தம்.

பொதிகைமலை வீட்டெழுந்து சந்த னத்தின்
புதுமணத்தில் தோய்ந்து,பூந் தாது வாரி,
நதிதழுவி அருவியின்தோள் உந்தித், தெற்கு
நன்முத்துக் கடல்அலையின் உச்சி தோறும்
சதிராடி, மூங்கிலிலே பண்ஏ ழும்பித்
தாழையெலாம் மடற்கத்தி சுழற்ற வைத்து,

முதிர்தெங்கின் இளம்பாளை முகம்சு வைத்து
முத்துதிர்த்துத் தமிழகத்தின் வீதி நோக்கி
அந்தியிலே இளமுல்லை சிலிர்க்கச், செந்நெல்
அடிதொடரும் மடைப்புனலும் சிலிர்க்க என்றன்
சிந்தை அணு ஒவ்வொன் றும்சி லிர்க்கச்
செல்வம்ஒன்று வரும்: அதன்பேர் தென்றல்காற்று

இவ்விருத்தத்தின் ஓசையை உற்று நோக்குங்கள்.

தென்றல் நடப்பதைக் கூடப் பாவேந்தர் போர் வீரன் அடியெடுத்து நடப்பதுபோல் எழுதி யிருக்கிறார்; சுரதாவின் விருத்த நடையைப் பாருங்கள்:

தலையழகி; தாமரைப்பூ அழகி, தேமாந்
தளிரழகி: தத்துநடை யழகி: தங்கச்
சிலையழகி; செங்கனிபோல் அழகி; வண்ணச்
சித்திரவி சித்திரவாய் அழகி: காம
விலையழகி; வெள்ளிநிலா அழகி; வான
வில்லழகி: விண்மின்னல் அழகி; ஆணி
மலையழகி; மாதவிபோல் அழகி; அந்தி
மாலைவெயில் நிறத்தழகி; அந்த அன்னம் [2]

மணித்தேரின் குலுங்கலோசையை இப்பாட்டில் கேட்கலாம்.

பாரதிதாசனைப் பாராட்ட வந்த சுரதா ஓரிடத்தில் அவருடைய விருத்தப்பாவின் வெற்றியையும் கீழ்க்கண்டவாறு பாராட்டுகிறார்.

திருத்தத்தில் வெற்றிபெற்றான் ஒட்டக் கூத்தன்
தீர்ப்பளித்து வெற்றிபெற்றான் கரிகாற் சோழன்
நிருத்தத்தில் வெற்றிபெற்றான் ஆட்ட னத்தி
நிதியளித்து வெற்றிபெற்றான் பாரி வள்ளல்
வருத்தத்தில் வெற்றி பெற்றார் வடலூர் வள்ளல்
வாளேந்தி வெற்றிபெற்றான் சேரலாதன்
விருத்தத்தில் வெற்றிபெற்றான் கம்பன்; அந்த
வெற்றியினை இவர்பெற்றார் என்னைப் போல! [3]

விருத்தத்தில் கம்பனும் பாரதிதாசனும் பெற்ற வெற்றியைத் தாமும் பெற்றுவிட்டதாகச் சுரதா கூறுவது, அவரது ஆற்றலின் மீது அவர் கொண்டிருந்த நம்பிக்கையைக் காட்டுகிறது.

சுரதாவின் பாடலில் அடுக்கடுக்காகத் தோன்றும் உவமை உருவகங்களும், கருத்துக்களின் சுமையும் நம்மைச் சுண்டியிழுக்கின்றன.

பாரதிதாசனுடைய விருத்தத்தைப் படித்து விட்டுச் சில நேரங்களில் சுரதாவின் விருத்தத்தைப் படிக்கும்போது அழகான குடும்பப் பெண்ணைப் பார்த்து விட்டு அலங்காரத்தோடு வரும் திரைப்பட நடிகையைப் பார்ப்பது போன்ற உணர்ச்சியும் ஏற்படத்தான் செய்கிறது.

தம்முடைய விருத்தம் எப்படிச் சுவையாகப் பிறப்பெடுக்கிறது என்பதைத் தாய்மையுணர்ச்சி யோடு ஓரிடத்தில் சுரதா வெளிப்படுத்தியுள்ளார்:

முதலடியைத் தேனாக்கி, அடுத்த டுத்து
முளைக்கின்ற தொடரடியை அமுத மாக்கி
விதவிதமாய்ச் சந்தநய நட்புண் டாக்கி
வியப்புமிகு உவமைகளால் புதுமை தேக்கிப்
பதமுடைய பாவினமாம் விருத்த மாக்கிப்...
..... இயற்ற லானான்.[4]

'போலி உடும்பு' என்னும் தலைப்பில் இருபது ஆண்டுகளுக்குமுன் பல்லியைப்பற்றிப் பத்திரிகையில் சுரதா ஒரு கவிதை எழுதியிருந்தார். வழக்கத்துக்கு மாறாக, அக்கவிதை அறுசீர் ஆசிரிய விருத்தத்தில் எழுதப்பட்டிருந்தது. ஓசையினிமையோடு அமைந்திருந்த அக் கவிதையைப் பாராட்டி அவருக்கு ஓர் கடிதம் எழுதினேன். அதோடு அக்கவிதையின் ஒரு சீரை மாற்றியமைத்தால், கருத்துச் சுவை மிகும் என்று எழுதினேன். ஆனால் சுரதா அதற்கு இணங்கவில்லை.

'அறுசீர் விருத்தத்தில் கருத்துச் சுவை கெட்டாலும் பரவாயில்லை; ஓசையினிமை கெடக் கூடாது' என்பதில் அவர் பிடிவாதமாக இருந்தார்.

ஒரு விருத்தத்தில் முதற்சீர் எத்தகைய அசை யமைப்போடும், ஓசையமைப்போடும் அமைந்திருக்கிறதோ, அதே அசை அமைப்போடும், ஓசையமைப் போடும் எல்லா அடிகளின் முதற்சீரிலும் மாறாது வரவேண்டும் என்பது அவர் கொள்கை.

செய்யுளில் இன எழுத்துக்கள் எதுகையாய் வரலாம் என்பது அனுமதிக்கப்பட்ட விதி. அதற்கு

இன எதுகை என்றே பெயர். ஆனால் சுரதா எப்பாடு பட்டேனும் அதே எதுகையைத்தான் பயன்படுத்து வாரே தவிர இன எதுகையைப் பயன்படுத்த மாட்டார். அதே எதுகை வரும்படி அவரே புதிதாகச் சொற்களைப் படைத்துவிடுவார்:

'பதிபக்திப் பாட்டெழுதல் எளிது; காதற்
பாட்டெழுதிக் காட்டுவதே கடினம்' என்றே
அதவத்தூர் புதுமதியன் கூற, ஆங்கே
அமர்ந்திருந்த திருத்தக்கன் அவனை நோக்கி,
'மதிமிக்கோன் சாதிப்பான் எதையும்; அன்னோன்
மாற்றாரின் புத்தகத்தாற் பிழைக்க மாட்டான்;
எதிர்நிற்பான்; வென்றாரை வெல்வான்' என்றான்.
'எழுதுவீரோ நீர்?'என்றான்;'இயலும்'என்றான்.[5]

பூவெல்லாம் பொன்னேநின் உடலின்மீது
பூத்திருக்க நீயவற்றைப் பார்த்தி ருந்தும்
காவெல்லாம் சென்றுசென்று நின்று நின்று
கால்நோவப் பூப்பறித்துச் சூடும் பெண்ணே
நாவில்நீ நெஞ்சில்நீ அஞ்ச னாட்சி
நல்லதமிழ்ப் பாடல்நீ அன்றோ!' என்றான்
ஓவம்மான் ஈன்றமகன் சிரிப்பை ஈன்றாள்;
உடம்படுமெய் இலக்கணத்தை இரவில் கண்டார்.[6]

தங்காமல் தயங்காமல் வாய்க்கால் வெள்ளம்
தழும்பிவழிந் தோடிவரக் கண்ட குப்பன்
'வங்காளக் கடல்நோக்கி ஓடும் நீரே
வயலுக்குப் போ' வென்று பாயச்ச லானான்.

சங்கீதக் குரலுடையோன் எட்டி என்பான்
தனித்தமிழில் மருதப்பண் பாட, வேலூர்
வெங்கோடன் வெண்காந்தள் அரும்பு போன்று
விளங்கிய கூர்க் கொழுமுனையால் சேறு செய்தான்.[7]

மேற்கண்ட விருத்தங்களில் 'அதவத்தூர், ஓவம்மாள், வெங்கோடன்' என்னும் மூன்று சொற்களும் எதுகைக்காகச் சுரதாவால் படைத்துக் கொள்ளப்பட்ட புதுச்சொற்கள்.

'காதல் மேகம்' என்னும் கதைக்கவிதையில் தலைவன் தன் காதற்கிழத் தியை,

முப்பாலே! கரிக்காத கடலே! செம்பொன்
முத்திரையே! முழுமதியே! என்றன்
வாய்க்குத்
தப்பாத மூவசைச் சீர்க் கனியே! [8]

என்று ஓரிடத்தில் விளிக்கிறான். தம் வாய்க்கு மூவசைச்சீர் தப்பாது என்பதில் சுரதாவுக்கு அளவற்ற நம்பிக்கை.

எண்சீர் விருத்தத்தில் அவர் வியக்கத் தக்க பாணிகளைக் கையாண்டிருக்கிறார். படிக்கும்போது அவற்றின் சுவையில் நாம் நம்மை மறந்துவிடுவோம்.

இனிமேலோர் மயிலில்லை; சாயல் இல்லை;
இனிமேலோர் மணியில்லை; ஒளியும் இல்லை.
இனிமேலே நிறத்தாலே கிளர்ச்சி செய்ய
இந்நாட்டில் குங்குமத்தின் குவியல் இல்லை

எனப்புகழும் எழிலுடையாள்; இயற்கை ஈந்த
இருகும்ப சம்பத்தும் உடையாள்; வெல்லும்
தனித்தமிழை அணைத்தசுவைப் பாடல் போன்றாள்;
தமிழ்வேந்தன் தேர்போன்றாள்; தென்றல்
போன்றாள்.[9]

அரும்புகொப் புளித்ததுபோல் சிரிப்பும், நாடே
அதிசயித்த பேரழகும் வாய்ந்த பெண்ணை
கரும்புகொப் புளித்ததுபோல் கவிகள் தந்த
கம்பர் மகன் காதலித்தான்; ஆனால் நல்ல
இரும்புகொப் புளித்திட்ட யானை யின்மேல்
ஏறுகின்ற குலோத்துங்கன் மறுத்திட் டானாம்
நரம்புகொப் புளிக்கின்ற பருவ வேகம்
நானறிவேன்; சோழன்தான் அறிந்தா னில்லை.[10]

இருபந்து எடுத்தாடும் இடையாள்! கூந்தல்
இருட்டுடையாள்! ஒய்யார நடையாள்! ஒட்டும்
பருவத்தாள்! பசுநெய்யின் நிறத்தாள்! நான்கு
பழம்சுமந்த பனிமுல்லைக் கொடியாள்; கத்தும்
கருங்கடல்போல் கண்ணுடையாள்! பருவப் பார்வைக்
கடல்களுக்கு இட்டஇரு கரைகள் போன்ற
புருவத்தாள்! பிறைஒத்தாள்! சிறிது நேரம்
புரட்டியதோர் புதியபுத் தகத்தைப் போன்றாள்![11]

விதவை வீணை மீனாட்சி தன் காதல் ஆவேசத்தை மிக நுட்பமாக வெளிப்படுத்துகிறாள். அவள் இழுத்த இழுப்பிற்கெல்லாம் சுரதாவின்

விருத்தம் நெகிழ்ந்து கொடுக்கும் அழகைப் பாருங்கள்:

ஈயாத மாந்தர்பொருள் தேய்தல் போல
இடையுடை யாள் அன்னவனை இடைமறித்து
'ஓயாமல் மின்னும்இக் கன்னிக் கன்னம்
உடையாத கண்ணாடி; முகம்பா ருங்கள்!
வாயீரம் தாருங்கள்; வண்டா குங்கள்!
வளைந்தநிலா பாருங்கள்; வானா குங்கள்!
சாயாத சவ்வாது மலையை என்றன்
சரீரத்தில் பாருங்கள்; சுகந்தா ருங்கள்![12]

விருத்தம் மட்டுமா? அகவலும் அவர் கையில் நிருத்தமிடுகிறது.

வதன வட்டமும் மைவிழி வாசலும்
தூண்டில் புருவமும் துடிக்கும் பருவமும்
நெய்கனிந் திருண்ட நீள்கருங் கூந்தலும்
சேர்ந்து பிறந்த செவ்வாய் இதழ்களும்
கையும் காலும் மெய்யும் மேனியும்
எவ்வாறு நன்கமைந் திருத்தல் வேண்டுமோ
அவ்வாறு நங்கைக் கமைந்திருந் தனவாம்.
நங்கையின் நடைகண்டு நாணிற்றாம் அன்னம்;
கட்டழகு மங்கையின் கன்னத்தைக் கண்டு
தேமாங் கனிகள் திரும்பிக் கொண் டனவாம்.
எந்தக் குறையும் இல்லாத பொருளை
ஆரிய மொழியில் அகல்யம் என்பர்

மந்திர முனிவரின் மையல் மனைவி
அழகில் குறையே அற்றவள் ஆதலின்
நகைமுகம் கொண்ட நங்கையை
அகல்யா தேவியென் றழைக்க லாயினரே![13]

சந்தப் பாடலும் அவர்கையில் சிந்தும் அருவியாகச் சிரித்துக்கொண்டு ஓடிவருகிறது:

கரும்பொடு நான்பிறந்தேன் - இளங்
காற்றொடு நானசைந்தேன்!
அரும்பொடு நான்வளர்ந்தேன் - மலர்
ஆனபின் தேன்திறந் தேன்.

நதிமணல் மீதிருந்தேன் - அவர்
நட்டகல் மீதிருந்தார்!
புதுமழை பெய்கையிலே - ஒரு
புடவைக் குடைபிடித்தேன்.

என்பெயர் அன்னமென்றேன் - பசிக்
கில்லையோ அன்னமென்றார்!
பொன்மணி மண்டபத்தில் - இதழ்ப்
புன்னகை அன்னமிட்டேன்.

காவிரி ஆழமென்றேன் - அவர்
காதலே ஆழமென்றார்!
சேவலேன் கூவுதென்றேன் - விழிச்
சேனையேன் தாக்குதென்றார்!

வன்பால் குறிஞ்சிநிலம் - அது
வாழ்க்கைப் புணர்ச்சிநிலம்!
மென்பால் மருதநிலம் - அதை
வெல்வதுன் மேனிநலம்!

என்றார் குளக்கரையில் - இதழ்
இட்டார் இதழ்க் கரையில்
வென்றேன் பிணக்கினிலே - எனை
வென்றார் அணைக்கையிலே! [14]

குறிப்பு விளக்கம்

1. பக்.42, தென்றல், பாரதிதாசன் கவிதைகள்II
2. பக்.48, நாவலரும் நங்கையும், அமுதும் தேனும்
3. பக். 231. பாரதிதாசன், தேன்மழை
4. பக்.64, சமணன் சாதித்தான், தேன்மழை
5. பக். 64 சமணன் சாதித்தான், தேன்மழை
6. பக். 78 காதல் மேகம், தேன்மழை.
7. பக்.93,கலப்பை, தேன்மழை
8. பக்.77. காதல் மேகம், தேன்மழை
9. பக்.11.அமுதும் தேனும்
10. பக்.23 '' ''
11. பக் 39. விதவையும் வேதாந்தியும், அமுதும் தேனும்
12. பக் 41 '' '' ''
13. பக் 112. அகலிகை, தேன்மழை
14. பக்1. சுரதா 1.5.6 8 கவிதை இதழ்

கவிஞர்

வழங்கும்...



வெட்டவெளிச்சம்

சுரதாவின் புலமை நுட்பம்

வடமொழியில் இதைச் 'சமத்காரம்' என்பர். ஆங்கிலத்தில் wit என்று கூறுவர். கவிதையில் ஒரு கருத்தை வெளியிடும்போது, மிகவும் நுட்பமாகச் சிந்தித்துப் படிப்போர் வியக்கும்படி நயம்படக் கூறுவது சமத்காரம். இக்கலை கவிஞரின் கல்விப் பரப்பாலும், நுட்மான சிந்தனை ஆற்றலாலும் வெளிப்படும். கவிஞர் டி.எஸ்.எலியட் இதைப் பற்றிக் குறிப்பிடும்போது,

''பல்வேறு பட்ட சிதறிய பொருள்களைக் கவிஞன் தன் சிந்தனை ஆற்றலால் ஒற்றுமைப் படுத்திக் காட்டுவதே புலமைநுட்பம்''

என்று ஓரிடத்தில் குறிப்பிடுகிறார்.

ஆங்கிலக் கவிஞன் பைரன் பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்தவன்; பெண்கள்மீது ஆதிக்கம் செலுத்தும் அழகு வாய்க்கப் பெற்றவன். படிக்கும் காலத்தில் கல்லூரியில் ஒரு கவிதைப் போட்டி நடைபெற்றது; பைரனும் அதில் கலந்துகொண்டான்.

போட்டியில் கலந்து கொண்டவர்களுள் எல்லாரையும் விட இளைஞனாக அவன் இருந்தான்.

கவிதைப் போட்டிக்குக் கருப்பொருளாக (theme) இயேசுநாதர் நிகழ்த்திய அற்புதம் ஒன்று வழங்கப் பட்டது. இயேசு, மேரி அன்னையோடு கானாவூர் என்னுமிடத்தில் நடைபெற்ற திருமணத்திற்குச் சென்றிருந்தார்.

திருமண வீட்டார் வந்திருந்த விருந்தினர்களுக்கு அப்பமும் திராட்சைச் சாறும் வழங்கினர். பாதி பேருக்கு வழங்கும்போது திராட்சைச் சாறு தீர்ந்து விட்டது. திருமண விருந்தில், ஒரு பொருளைப் பாதி பேருக்குப் பரிமாறி, மீதிப்பேருக்குப் பரிமாறாமல் விடுவது பெரிய குற்றமாகக் கருதப்படும். திருமண வீட்டார் செய்வதறியாது திகைத்தனர்.

இதையறிந்த மேரியன்னை தம் திருமகனை அழைத்து ஏதாவது வழிசெய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். உடனே இயேசு பெருமான் ஒரு பெரிய பாத்திரத்தில் நீரை நிரப்பும்படி சொன்னார். பிறகு அந்நீரைத் தம் கண்களால் உற்றுப் பார்த்தார். உடனே அத் தண்ணீர் செந்நிறத் திராட்சைச் சாறாக மாறிவிட்டது. இதுவே இயேசு பெருமான் நிகழ்த்திய 'கானாவூர்க் கல்யாண அற்புதம்.

இந்தக் கருவை மையமாக வைத்துப் பலரும் பக்கம் பக்கமாகக் கவிதைகளை எழுதிக் குவித்தனர்.

பைரன் கடைசிவரையில் ஏதும் எழுதாமல் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். போட்டி முடியும் நேரம் வந்தது. மேற்பார்வையாளர் பைரனைப் பார்த்து, ''என்ன தம்பி! ஏன் சும்மா உட்கார்ந் திருக்கிறாய்? ஏதாவது எழுதிக் கொடுத்து விட்டுப் போ!'' என்றார். உடனே பைரன் ஒரே ஒரு வரிமட்டும் எழுதிக் கொடுத்துவிட்டு வெளியேறினான். பரிசு அறிவிக்கப்பட்டபோது, அது பைரனுக்குக் கிடைத் திருந்தது. அவன் எழுதியது இதுதான்:

காதலன் பார்க்கக்
கன்னி முகஞ்சிவந்தாள்.[1]

Lord என்ற ஆங்கிலச் சொல்லுக்குக் கர்த்தர் என்றோ, கனவான் என்றோ, காதலன் என்றோ எப்படி வேண்டுமானாலும் பொருள் கொள்ளலாம். நிறமற்ற நீர், திராட்சைச் சாறாகச் சிவந்த செயலைக், காதலன் பார்த்ததும் ஒருபெண் நாணி முகம் சிவக்கும் செயலாகச் சித்திரிக்கிறான். இங்குக் காதலன் இயேசு; காதலி நீர். பதினைந்து வயதில் பைரன் வெளிப் படுத்திய புலமை நுட்பமிது.

தமிழ் இலக்கியத்தில் இதுபோன்ற நுட்பங்கள் தொட்ட இடமெல்லாம் தட்டுப்படுகின்றன. பாலை பாடிய பெருங் கடுங்கோவின் கற்பனை யொன்றை நான் அடிக்கடி எண்ணி வியப்பதுண்டு.

தலைவன் பொருள்வயிற் பிரிய மனத்தால்

நினைக்கிறான் என்பதைக் குறிப்பால் உணர்ந்த தலைவி, அப்பிரிவுத் துன்பத்தை உள்ளத்தில் நினைத்துக் கண்கள் பனிக்க ஒரு பெருமூச்சு விடுகிறாள். அப்போது அவள் இடுப்பில் கைக்குழந்தை இருந்தது. அக் குழந்தையின் தலையில் பூக்களால் தொடுத்த செங்கழுநீர் மாலை. அவளுடைய வெப்பமான பெருமூச்சு பட்டதும், அச் செங்கழுநீர் மாலை நிறம் மாறி வாடிவிட்டது. இதைக் கண்ட தலைவன், தலைவியின் உள்ளத்து ஆற்றாமையை உய்த்துணர்ந்து பயணத்தைத் தவிர்த்தான்.[2]

கடுங்கோ எவ்வளவு நுட்பமாகச் சிந்தித்திருக் கிறார் என்பதை எண்ணிப் பாருங்கள். இவ்வளவு நுட்பமான ஒரு கற்பனையைச் சங்க இலக்கியத்தில் வேறு எங்கும் காணமுடியாது.

இதே போன்ற நுட்பமான கற்பனையொன்றை நளவெண்பாவில் காணலாம். தமயந்தியின் சுயம் வரத்தின்போது, தோழியொருத்தி மண்டபத்தில் வீற்றிருந்த மன்னர்களைத் தமயந்திக்கு அறிமுகப் படுத்திக் கொண்டிருக்கிறாள். அப்போது அங்க நாட்டிளவரசனை அறிமுகப் படுத்தும்போது, அவன் நாட்டின் சிறப்பை வருணிக்கிறாள்.

கடலில் இருக்கும் சங்குப் பூச்சிகளை அலைகள் அடித்துக் கொண்டுவருவது இயல்பான நிகழ்ச்சி. அலைகள் மிகுதியாக இருக்கும்போது, அவை

கடற்கரையில் உள்ள உப்பங்கழிவரை செல்வதுண்டு. அப்போது சிறிய சங்குப் பூச்சிகளும் அலைகளால் அடித்துச் செல்லப்பட்டு உப்பங்கழிகளில் வீழ்ந்து விடுவதுண்டு. அதைக் கண்டு வருந்திய கடல், தன் திரைக் கைகளால் உப்பங்கழியில் வீழ்ந்து கிடக்கும் சங்குப் பூச்சிகளை வாரி எடுத்துக்கொண்டு திரும்புவதாகக் கவிஞர் கூறுகிறார்.

இங்கு கடல் தாயாகவும், சங்குப் பூச்சிகள் கடலின் குழந்தைகளாகவும் கற்பனை செய்யப்படும் நுட்பம் சுவைத்து மகிழ்தற்குரியது. நளவெண்பாவின் மிகச் சிறந்த கற்பனை இதுதான்:

கூன்சங்கின் பிள்ளை கொடிப்பவளக் கோடிடறித்
தேன்கழியில் வீழத் திரைக்கரத்தால்-வான்கடல் வந்(து)
அந்தோ எனவெடுக்கும் அங்கநாட் டாளுடையான்
செந்தேன் மலராய்இச் சேய்.

ஆங்கிலக் கவிஞர்களுள் ஜான்டன் இக்கலையில் ஒப்பற்றவன் என்று கருதப்படுகிறான். தாமஸ் கேரூ என்ற மெய்விளக்கக் கவிஞன், டன்னைச் 'சமத்காரச் சக்கரவர்த்தி'[3] என்று தன் இரங்கற்பாவில் குறிப்பிடு கிறான். ஜான் டன்னின் புலமை நுட்பம் மிகவும் வியப்பிற்குரியதாகவும், ஆழமானதாகவும் இருக்கும்.

தன் காதலியைப் பிரிந்து ஜான் டன் ஒருமுறை அயல்நாடு செல்லவேண்டி நேரிட்டது. பிரிவுத் துன்பத்தால் வாடும் காதலிக்கு அவன் கூறும் ஆறுதல்

மிகச் சுவையும் நுட்பமும் பொருந்தியது.

அன்பே!
நமக்கு-
உயிர் ஒன்றே!

என் பிரிவைத்
தவறாக எண்ணாதே.

நம் காதல்-
ஒரு தங்கக்கட்டி.
அதை-
ஒரு மெல்லிய தகடாக
நம் பிரிவு விரித்திருக்கிறது.
காற்றைப் போல்-
இப்போது நம் காதலும்
வியாபித் திருக்கிறது என்று நினைத்துக்கொள்.

நமக்கு-
ஈருயிர் என்றால்
அவை-
கவராயத்தின் இரண்டு முட்கள். (Compass.)

உனது உயிர்
நிலை குலையாமல்
ஊன்றி நிற்கும் முள்.
அடுத்தமுள் அசைந்தால்தான்
அது அசையும்.
நடுவில் அது

அமர்ந்திருந்தாலும்
அடுத்தமுள் சுற்றுவதற்கேற்பக்
குனிந்து நிமிர்வ தோடு
இல்லம் வந்ததும்
நேராகி விடுகிறது.

நான்-
எங்கு திரிந்தாலும்
சரியாக வட்டமிட்டுப்
புறப்பட்ட இடத்திற்கே
திரும்பிவரக் காரணமாக
ஊன்றி நிற்பவள் நீதானே! [4]

ஜான் டன்னிடத்தில் காணப்படும் நுண்ணிய கவிதை வேலைப்பாடுகள் எல்லாம் சுரதாவிடமும் உண்டு. அவர் எழுதியுள்ள 'அமுதும் தேனும்' கதைக் கவிதையின் தலைவனாக வரும் ஜகந்நாதக்கவி நிறைய எழுதாதவன்; குறைவாக எழுதினாலும் நிறைவாகச் செய்யும் ஆற்றல் மிக்கவன். அவனைக் கச்சிதமாகக் கவிதை எழுதிய சங்கப் புலவர்களோடு ஒப்பிடுகிறார் சுரதா. அதைச் சொல்லும் முறை மிகச் சுவையானது.

நாட்டில் கூடை முறம் கட்ட முடியாதபடி பனையோலைப் பஞ்சம் வந்துவிட்டதாம். ஏன்? இடைக்காலப் புலவர்கள் தாங்கள் எழுதும் சுவடிகளுக்காகப் பனை மரங்களையே மொட்டையடித்து விட்டார்களாம்.

குடைசெய்ய, கூடைமுறம் கட்ட, ஏழை
குடியிருக்கும் குடிசைக்குக் கூரை போட,
படுக்கும்பாய் பின்னமுடி யாத வாறு
பனைஓலைப் பஞ்சம்உண் டாக்கி வந்த
இடைக்காலத் தமிழ்ப்புலவர் போன்று, நூற்கள்
ஏராள மாய்எழுதிக் குவித்தி டாமல்
கடைச்சங்க காலத்துப் புலவர் போன்று
கச்சிதமாய் ஓரிரண்டு சுவடி தந்தோன்[5]

என்று பாடுகிறார் சுரதா. மிகவும் நுட்பமான கற்பனை; அதே சமயத்தில் அழகான அங்கதமும்கூட.

அதே கவிதையில் அக்பர் மகள் லவங்கியின் அழகை வருணிக்க வந்த கவிஞர், அவளுடைய மார்புக் கச்சைப் பற்றி மிக நுட்பமாகக் கற்பனை செய்கிறார்.

காயம் இருக்குமிடத்தில்தானே கட்டு இருக்க வேண்டும்? ஆனால் கட்டு இடம் மாறியிருக்கிறதாம்.

ஆயிரந்தேன் கூடும்பூக் காடும் சேர்ந்த
அடையாளப் படையல் அவள்! நல்லோர் நூலின்
பாயிரம்போல் புன்னகையை முதலில் காட்டும்
பருவப்பெண்; அவள்மார்பில் வளர்ந்த வில்வக்
கா ரின்மேல் காயமில்லா திருந்தும், ஆங்கோர்
கட்டுண்டு! மொட்டுமொழிக் கிளிகள் செய்த
காயங்கள் கனியிதழில் இருந்தும், அந்தக்
காயங்கள் மீதுதுணிக் கட்டே இல்லை.[6]

ஜகந்நாதக் கவியின் புலமையை மெச்சி அவனுக்குப் பரிசளிக்க விரும்பிய அக்பர், 'உனக்கு என்ன வேண்டும்?' என்று கேட்டார். தனக்கு அவர் பெற்றெடுத்த அழகுமயில் லவங்கியே வேண்டும் என்பதைக் கவிஞன் கேட்கும் முறை மிகச் சாதுரியமானது.

குதித்தோடும் குதிரைகளோ, மதிக்கும் முத்துக்
குவியல்களோ, யானைகளோ வேண்டாம் வேந்தே!
எதைத் தின்றால் பிறகிந்தப் புவிமீ துள்ள
எல்லாமே கசந்திடுமோ அதனை, இந்த
அதிமதுரச் செங்கரும்பைக் கனியின் கொத்தை
ஆணிப்பொன் மேனிஅன்னத் தோணி தன்னை
மதுமதியை, அழகான ஆசை வாசல்
வைத்திருக்கும் ஆரணங்கை அளித்தால்போதும்[7]

இப்படிக் கேட்டால் எதிரிகூடத் தன் பெண்ணைக் கொடுத்து விடுவான். அம்பிகாபதிக்கும், ரோமியோவிற்கும் இந்தப் பேச்சுச் சாதுரியம் இருந்திருந்தால் வீணாகச் செத்திருக்க மாட்டார்கள்.

காளமேகம் வைணவர்; அவருடைய காதற் கிழத்தி மோகனாங்கி சைவ சமயத்தைச் சார்ந்தவள்; திருவானைக்கா வாசி. ஒருநாள் அவளைக் காளமேகம் தேடிச் சென்றபோது, அவள் கதவைத் திறக்க மறுத்துவிட்டாள். காரணம் கேட்டார் காளமேகம்.

'நான் சிவன்கோவில் தாசி; நீரோ நாமதாரி. இவ்வூர் மக்கள் என்னை இகழாதிருக்க வேண்டுமானால் நீரும் சைவராக வேண்டும்!' என்று நிபந்தனை விதித்தாள் மோகனாங்கி. காதலுக்கு முன்னால் மதம் கரைந்து போயிற்று. தீந்தமிழ்ப் புலவர் திருநீற்றுச் சைவரானார். திருமண்ணை அழித்துவிட்டுத் திருநீறு பூசினார். மோகனாங்கியோடு காளமேகத்துக்கு ஏற்பட்ட இப்புதிய உறவை நயம்பட உரைக்கவந்த சுரதா,

இருநெஞ்சங் கொண்டவளின் மகளே! தெங்கின்
இளநீரே! இனிநமக்குள் ஆண்பால் பெண்பால்
பிரிவின்றி வேறெந்தப் பிரிவு மில்லை
பேதமில்லை; இருசமய வீளக்க மில்லை.
திருமங்கை ஆழ்வாரின் நெற்றிக் கோடு
தேவையில்லை, நீதேவை என்ப தாலே.
சரிஎன்னைப் பார்பெண்ணே! எனக்குன் னோடு
சம்பந்தம் உண்டதனால் நான்சம் பந்தன்![9]

என்று பாடுகிறார். அதோடு விட்டாரா? மீண்டும் தொடர்கிறார் காளமேகம்.

இரட்டையர் நாம்; இணையெதுகை இனிநாம்; நீயோர்
ஈரவயல்; நானோர்ஏர் உழவன்; கட்டில்
சரித்திரத்தின் சாசனமே! அன்-அம் என்னும்
சாரியையே! தொடுபதம்என் றழைக்கும் சோறே![9]

அவளை 'அன்னமே!' என்றழைக்காமல் 'அன்-அம்' என்னும் சாரியையே என்றழைப்பதும், அவளைத்

'தொடு பதம்' என்று குறிப்பிடுவதும் சிந்தித்து மகிழத்தக்க சிறந்த சொற்சித்திரங்கள். கவிஞர்களைத் தலைவன் தலைவியாகப் படைக்கும்போது அவர்கள் புலமையையும் வெளிப்படுத்தச் சுரதா தவறுவ தில்லை!

கோவலன், மாதவியின் கூந்தலையும் அவள் குறும்பற்களையும், பாராட்டிக் கூறும்போது,

நிறைந்தநாள் நிலவே! கேளாய்
நின்னங்கம் கட்டித் தங்கம்;
குறுந் தொகைப் பற்கள் முத்தின்
குடும்பமே! நெருங்கி நீண்டு
நிறந்தரும் நினது கூந்தல்
நெடுந் தொகைச் செல்வம் அன்றோ? [10]

என்று குறிப்பிடுகிறார். குறுந் தொகைப் பற்களும், நெடுந்தொகைச் செல்வமும் சிறந்த சொல்லாட்சிகள்.

குறிப்பு விளக்கம்

1. The Lady blushed at the sight of the Lord- The Life of Byron, Andrew Moraise

2. பாடல் 5. களிற்றியானை நிரை, அகநானூறு.

3. A King who ruled as he thought fit The universal Monarchy of Wit.
-An Elegie upon the death of Dr. John Donne by Thomas Carew.

4. A validiction: Forbidding Mourning by John Donne.

5. 9. அமுதும் தேனும்

6. பக்.12 " "

7. பக்.20." "

8. பக்.76. காதல் மேகம், தேன்மழை

9. பக் " "

10. பக். 68, மாடத்திலும் கூடத்திலும், தேன்மழை.

சுரதாவின் கதைக் கவிதைகள்

எனக்குக் கதைக் கவிதைகள் மிகவும் பிடிக்கும். நான் பத்தாம் வகுப்பு படிக்கும்போது என் ஆங்கில ஆசிரியர் இராஜரத்தினம், லாக்கின்வர் (Lockinwar) கவிதை நடத்துவார்.

'லாக்கின்வார்' என்பவன் காதல்வீரன்; 'ஸ்காட்லாந்துப் பிருதிவிராஜன்.' தன்னைக் காதலிக்கும் எதிரியின் மகளை, அவள் கோட்டைக்குள்ளேயே நுழைந்து, குதிரையின் மீது தூக்கிவைத்துக்கொண்டு செல்லும் அவன் வீர சாகசத்தை உணர்ச்சிகரமாக எங்களுக்கு விளக்கிவிட்டு,

'there comes Lord Lockinwar'

என்று பலகணிப் பக்கம் கை நீட்டுவார் எங்கள் ஆசிரியர். எல்லா மாணவர்களும் எங்களை மறந்து பலகணிப் பக்கம் திரும்பிப் பார்ப்போம்.

கீட்ஸ் எழுதிய **இசபெல்லா** (Isabella)வும், லார்கா எழுதிய **மோசக்கார மனைவி** (The faithless wife)யும் நான் பலமுறை படித்துச் சுவைத்த கதைக் கவிதைகள்.

ஆங்கிலத்தில் கதைப் பாடல்களை Ballad என்று கூறுவர். மேலை நாடுகளில் அவை இசையரங்கு (ballad concert)களில் பாடப்படும்; இசை நாடகங் (ballad opera)களில் நடிக்கப்படும். அதே போல் நம் நாட்டிலும் கதைப்பாடல்கள் நாட்டுப்புறங்களில் லாவணி,உடுக்கடிப்பாட்டு, வில்லுப்பாட்டு என்னும் பெயரில் பாடப்பட்டு வந்தன. நாம் அவற்றை நாட்டுப் பாடல் (folk songs)என்றும் கூறுவதுண்டு. இவை பெரும்பாலும் எழுத்தில் இல்லாமல் வழிவழியாகவே, வாய் மொழிப் பாடல்களாகவே இருந்தன. 'அண்ணன்மார் கதை' இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு நாட்டில் நடைபெற்ற முக்கியமான கொலைகளைக்கூட, 'கொலைச் சிந்து' என்னும் பெயரில் சந்தைகளிலும், திருவிழாக்களிலும் 'டேப்' அடித்து உருக்கமாகப் பாடுவதுண்டு. அந்தப் பழக்கமெல்லாம் திரைப்படம் வந்தபிறகு அடியோடு அற்றுப் போய்விட்டன.

பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுச் சிறு பிரபந்தங்களான தூது, உலா, கோவை, மடல், விலாசம் என்பனவும் ஒருவகைக் கதைப் பாடல்களே. அவற்றில் தலைவன்-தலைவி பெயர்கள்தாம் மாறி யிருக்குமே தவிர, கதைப் பொருள் (theme)ஒன்றுதான். ஆனால் இந்த நூற்றாண்டுத் தமிழ்க் கதைக் கவிதைகள் சிறு பிரபந்தங்களிலிருந்து, முற்றும் மாறுபட்டவை.

இந்த நூற்றாண்டுச் சிறுகதைத்துறை மேலை நாட்டுத் தாக்கத்தால் மிகவும் புதுமையாக வளர்ச்சி பெற்றிருக்கிறது. இந்தச் சிறுகதை உத்தியைக் கவிதை யில் பயன்படுத்தும்போது, அது கதைக் கவிதையாக உருப்பெறுகின்றது. தரமான கதையம்சமும், சுருக்கமும், அதிர்ச்சிமுடிவும் சிறுகதையைப் போலவே இதிலும் கையாளப்பட வேண்டும்.

இந்த உத்தியைப் புரிந்துகொண்டு முதன் முதலாகக் கதைக் கவிதைகளைத் தமிழில் செய்தவர் பாரதிதாசன். சஞ்சீவி பர்வதத்தின் சாரல், மாந் தோப்பில் மணம், காதற் குற்றவாளிகள், காதற் பெருமை, காதலைத் தீய்த்த கட்டுப்பாடு, மூடத் திருமணம், குழந்தை மணத்தின் கொடுமை, தவிப்பதற்கோ பிள்ளை?, பெண்குரங்குத் திருமணம் என்பவை மிக அருமையான கதைக் கவிதைகள்.

சுரதா, தமது குருநாதரைப் பின்பற்றிக் கதைக் கவிதை எழுதத் தொடங்கினார்.

பாரதிதாசன் கதைக் கவிதைக்கும் சுரதாவின் கதைக் கவிதைக்கும் அடிப்படையில் ஒரு வேறு பாடுண்டு.

பாரதிதாசன் கதைக்கவிதைகள் மடமை, கைம்மைக் கொடுமை, சாதிக் கொடுமை, குழந்தை மணம் ஆகியவற்றை எதிர்த்துப் பிரச்சார நோக்கில் எழுதப்பெற்றவை. ஆனால் சுரதாவோ கலை

யம்சத்துக்காகவே (Art for art sake)கதைக் கவிதைகள் எழுதினார்.

கதைக் கவிதை வெற்றி பெற வேண்டும் என்பதற்காகக் கதைச் சிறப்பு மிக்க வரலாற்றுச் செய்திகளைத் தேர்ந்தெடுத்தார்.

சுரதா எழுதியவற்றுள் அமுதும்தேனும், விதவையும் வேதாந்தியும், முத்தமிட்ட ஞானி, கண்ணீர்க் கதை ஆகியவை மிகச் சிறப்பான கதைக் கவிதைகள். பட்டத்தரசியும், வன்னிய வீரனும்கூடப் பெரிய கதைக்கவிதைகளே.

மெய்விளக்கக் கவிஞர்கள் யாரும், காவியங்கள் எழுதும் மரபில்லை.

சுரதா கதைக் கவிதைக்காக, மிகச் சிறந்த கதைகளைத் தேடிப்பிடிப்பது வழக்கம். பாரசீகப் பஞ்ச காவியங்களுள் ஒன்றான ஷிரீன் குஸ்ரூ காதலை அழகிய உணர்ச்சிமிக்க துன்பியல் காதற்கவிதையாகச் சுரதா எழுதியிருக்கிறார். அது, ஷிரீன் என்ற அழகி, ஃபர்ஹாத் என்ற சிற்பி, குஸ்ரூ என்ற மன்னன் ஆகிய மூவரைப் பற்றிய முக்கோணக் காதல் கதை; துன்பியல் முடிவைக் கொண்டது.

மற்றொன்று, ஔரங்கசீப்பின் மகளும் கவிஞருமான ஜைபுன்னிஸ்ஸாவின் காதல் கதை. இதுவும் துன்பியல் முடிவைக் கொண்டது.

கண்ணீர்க் கதை - 1

அவள் அழகி ஆட்டனத்தி மனைவி போல!
அவன் அழகன் ஆதிமந்தி கணவன் போல!
அவன்கவிஞன்; அவன்பெயரோ அகில்கான். சொல்லை
அமுதாக்கும் அவள்பெயரோ ஜைபுஉன் னிஸ்ஸா.
அவனுக்கும் அவள்மீது காதல், அந்த
அரசாங்கக் கவிஞனுக்கும் அவள்மேல் காதல்.
அவள்வருவாள் அன்றாடம் தோட்டத் திற்கு!
ஆணழக னும்வருவான் தொடுவ தற்கு!

அன்றோர்நாள் அவன்வந்தான்; அவளும் வந்தாள்.
'அன்னமெங்கே? குயில் எங்கே? அன்பே!' என்றான்;
'அன்னம்என் நடைகண்டு ஒளிந்த' தென்றாள்
'அக்குயிலோ, குரலில்குடி யிருக்கு' தென்றாள்.
'தென்னையிலே செவ்விளநீர் இரண்டைக் காணோம்;
திருட்டுத்தான் போயிருக்க வேண்டும்' என்றான்.
'நன்றாகப் பாருங்கள் தெரியும்' என்று
நங்கையவள் ஆடைதனை நழுவ விட்டாள்.

கோடிமலர் அழகுதனை முகத்தின் மூலம்
கொடுத்துதவும் என்கண்ணே! வண்ணப் பெண்ணே!
கூடல்உண்டு, ஊடல்உண்டு நமக்குள்; காதல்
கூட்டலுண்டு, பெருக்கலுண்டு, கழித்தல் இல்லை.
மூடலுண்டு, திறத்தலுண்டு, முத்தம் உண்டு.
முத்தத்தில் பலபறவைச் சத்தம் உண்டு.
பாடலுண்டு, ஆடலுண்டு; தாகம் தீர்க்கும்
பகுதியுண்டு, விகுதியுண்டு, விகார மில்லை.

'பத்தரைமாற் றுத்தங்கப் பழமே! நீயோர்
பதுமை' யென்றான். 'பேசிடுமோ பதுமை?' என்றாள்.
'சித்திரம்நீ' என்றிட்டான் சிரித்துக் கொண்டே.
'சித்திரத்திற் கழகுண்டு, சதையே' தென்றாள்.
'முத்தத்தில் இருக்கின்ற இனிமை, நம்தாய்
மொழியிலில்லை; உமர்கையாம் பாட்டில் இல்லை;
அத்தாணி மண்டபத்தின் மணியே!' என்றான்
'அடக்குங்கள் சத்தத்தை!' என்றாள் அன்னம்.

நிருவாண மலர்மீது நீல வண்டு
நிருவாண மாயிருக்க அதனைக் கண்டு
'திரைமறைவே தேவையில்லை போலும்' என்றாள்.
'தேவையில்லை வண்டுக்கு வெட்கம்' என்றான்.
இருட்டுக்குள் சென்றார்கள் இரண்டு பேரும்;
இடைநடுவில் பேச்சில்லை! வியர்வை யோடு,
சிரித்தபடி அவன்வந்தான் வெளியில்! கண்கள்
சிவந்தபடி அவள்வந்தாள் இருட்டை விட்டு.

''அருள்வேண்டும் என்றிடுவர், அதுவா வேண்டும்?
அறம் வேண்டும், அவ்வறத்தைப் போற்றிக் காக்கப்
பொருள்வேண்டும், புகழ்வேண்டும், போகம் வேண்டும்;
பொய்யுலகில் பொய்கூடப் பேச வேண்டும்.
இருள்கூட அன்றாடம் நமக்கு வேண்டும்;
இருட்டுக்குள் காதலர்க்கு உடையேன் வேண்டும்?
சரசாங்கி'' என்றிட்டான்; சிரித்தாள்; இந்தச்
சந்திப்பை ஆள்மூலம் அறிந்தான் மன்னன்.

ஆத்திரத்தை நேத்திரத்தில் நிறுத்தி, மன்னன்
அவரங்க சீப்ஆங்கே விரைந்து வந்தான்.
பூத்தமலர் போன்றவளும் அவனும், அந்தப்
போர்வேந்தன் வரக்கண்டு மனம் வெடித்தார்;
சேர்த்தவுடல் பிரித்திட்டார்; செயலி ழந்தார்!
சிற்றிடை யாள், பக்கத்தில் இருந்த வெந்நீர்ப்
பாத்திரத்தில் காதலனை மறைக்க லுற்றாள்;
பாராளும் வேந்தனதைப் பார்த்து விட்டான்.

''ஏனிங்கே நிற்கின்றாய் தனியே? இந்த
ஏனத்தில் இருப்பதென்ன?'' என்று கேட்டான்.
''ஏனத்தில் தண்ணீர்தான் இருக்கு' தென்றாள்.
''இருக்கட்டும், தண்ணீரை வெந்நீ ராக்கு!
நானிங்கே குளித்தாக வேண்டும்; எங்கே
நடக்கட்டும் விரைவாக வேலை'' என்றான்.
சேனைமன்னன் இவ்விதமாய் உரைக்க, அந்தச்
சிங்காரி, அம்புபட்ட மான்போல் ஆனாள்.

பாத்திரத்தைப் பார்த்தபடி அழுது கொண்டே
பச்சைமயில் மெதுவாக நடந்தாள்; மிக்க
ஆத்திரத்தோ டவ்விடத்தில் நின்ற வேந்தன்,
'அன்னநடை நடக்காதே!' என்றான்.உப்பு
நீர்த்திவலை விழிவழியே நிலத்தில் ஓட,
நீரற்ற கொப்பரையின் அருகில் வந்து,
''பூத்தமலர் மீதுமொய்க்கும் வண்டே!'' என்றாள்.
புதுக்கவிஞன் பெருமூச்சு மட்டும் தந்தான்.

''என்னருமைக் காதலரே! நீரும் நானும்,
இணைபிரியா அன்றிலென இருந்து வந்தோம்.
என்செய்வேன் இப்போது? 'தீயை மூட்டி
எரித்திடுக' என்கின்றார் என்றன் தந்தை!
பொன்மலையே! நானும்மை எரிப்ப தற்கோ
புவிமீது பிறந்திட்டேன்? அந்தோ! பெண்ணில்
என்னைவிட மாபாவி யாரு மில்லை!
இதற்குத்தா னோஉம்மைக் காத லித்தேன்?

''கத்திமன்னர் கனைக்கின்றார்; புள்ளிக் கொள்ளிக்
கண்ணாலே சுடுகின்றார்; கருவண் டைப்போல்
முத்தமிட்ட காதலரே! புதிய பூக்கள்
மூச்சுவிடும் தோட்டத்தில், தங்கள் ஆவி
அத்தமிக்கக் காரணம்நான் ஆனேன்! அந்தோ
அனல்வெப்பம் தாங்காமல் துடிக்கும் போது,
சத்தமிட்டால் நம்முறவு தெரிந்து போகும்;
சரித்திரத்தை மௌனத்தால் மறைப்பீர்!'' என்றாள்.

காதலனைக் கொப்பரையில் நிறுத்திக் கெண்டைக்
கண்மீது கருநீலக் கடல்நி றுத்தி,
வேதனையால் வெந்தபடி, அடுப்பில் வைத்த
விறகுக்குத் தீயிட்டாள், மயங்கி வீழ்ந்தாள்.
சாதத்தைப் போற்கவிஞன் வெந்தான்! காதற்
சரித்திரத்தின் ஓர்பகுதி கரியா யிற்று!
காதலிலே தோல்வியுற்ற கன்னி அன்னம்,
கண்ணீரை வழித்தபடி எழுந்தி ருந்தாள்.

''மதியில்லா வீண்ணானேன்! வலைமீன் ஆனேன்!
மருந்தில்லாப் புண்ஆனேன்! மணல்வீ டானேன்!
நிதியில்லா வெறும்பெட்டி ஆனேன்! நானோ
நீரில்லாக் குளமானேன்! நான்கு நண்டு
மிதித்ததொரு சிறுஅத்திப் பழம்போல் ஆனேன்!
வீதியிலே விட்டெறிந்த வீணை யானேன்!
கதவில்லா வீடானேன்; கானல் ஆனேன்!
கரித்துணியில் முடிந்த தொரு வைர மானேன்.

கலைவளர்க்க ஓர்காலம்! என்றன் வாழ்வில்
காதலிக்க ஓர்காலம்! கண்ணீர் விட்டுப்
புலம்புவதற் கோர்காலம்! இனிமேல் ஏது
பொற்காலம்? புதுஇன்பம் பொங்கும் காலம்!
இலையெனக்கு இனிமேலே நல்ல காலம்!
எதிர்காலம் உதிர்காலம்'' என்று கூறிக்
குலைவாழை, காற்றடித்துச் சாய்தல் போலே
கொதித்திட்ட கொப்பரையின் மீது சாய்ந்தாள்.

குறிப்பு விளக்கம்

1. பக்.56, நூல்: அமுதும் தேனும் (ஆண்டு 1960)


விளாக்கனும்
சரதாவின்
விடைகளும்

சுரதாவின் புதுமை விருப்பம்

தாம் கூறும் எதையும், தமக்குமுன் எந்தக் கவிஞரும் கூறாத முறையில் புதுமையாகக் கூற வேண்டும் என்பதில் சுரதாவுக்கு விருப்பமதிகம்.

தாம் சொல்லும் கருத்துக்களைப் புதுமையாகச் சொல்வதோடு, வடிவங்களையும் புதுமையாகப் படைத்தார். கதைக்கவிதை, சொல்விளக்கம், நெய்த செய்திகள், வசனகவிதை, காவியக் கடிதங்கள், கவிதை முன்னுரைகள் இப்படிப்பல.

முன்னுரைப் புரட்சி

1920ஆம் ஆண்டு பிப்ரவரி 5ஆம் நாள் டாடா இயக்கத்தினர் ஸ்விட்சர்லாந்தின் தலைநகரான சூரிச் நகரில் ஓர் ஓவியக் கண்காட்சி நடத்தினர். இவர்கள் கடைப்பிடித்த கொள்கை டாடாயியம்(Dadaism)என்று அழைக்கப்பட்டது. கவிதை, நாடகம், இசை, ஓவியம் என்று ஒவ்வொரு துறையிலும் மரபு, சம்பிரதாயம், நாகரிகம் போன்ற மதிப்புகள் மீது தொடர்தாக்குதல் நடத்துவது டாடா இயக்கத்தினர் வேலை.

இவர்கள் நடத்திய ஓவியக் கண்காட்சியைக் காண வருபவர்கள், ஒரு பொதுக் கழிப்றை வாயிலாக இட்டுச் செல்லப்பட்டனர். உள்ளே சென்றவுடன் பார்வையாளர்களுக்குக் குறுகிய கைப்பிடி வைத்த ஒரு கோடரி தரப்பட்டது. அவர்கள் விரும்பினால் காட்சிக்கு வைக்கப்பட்ட படங்களைக் கோடரியால் தாக்கிக் கிழிக்கலாம். காட்சிமுடிவில் ஓர் இளம்பெண் வெண்ணிறஆடை அணிந்து (First communion dress) ஆபாசக் கவிதைகள் பாடினாள்.[1]

ஆந்திர நாட்டில் திகம்பரக் கவிஞர்கள் என்னும் ஒரு கூட்டம் இருக்கிறது. இவர்கள் நடுஇரவில் தங்கள் நூல்களை வெளியிட்டுப் பிச்சைக்காரர்களுக்குப் படித்துக் காட்டுவர்.

ஏன் இவர்கள் இப்படிச் செய்கிறார்கள்? போலித் தனமான பழைய மரபுகள், கலாச்சாரங்கள், நாகரிகம் ஆகியவற்றின் மீது கொண்ட வெறுப்பே இக்கோபக் காரர்களை இவ்வாறு நடந்துகொள்ளச் செய்கிறது.

சுரதாவும் இளமையில் ஒரு கோபக்கார இளைஞராக (Angry young man)த்தான் இருந்தார். அதனால்தான் தாம் எழுதி வெளியிட்ட 'அமுதும் தேனும்' கவிதைகளைக் கடற்கரையில் ஒரு தொழுநோயாளியிடம் படித்துக்காட்டி முன்னுரை பெறுகிறார்.

முன்னுரை

குட்டரோகி கூறுகிறார்:

நீங்க இப்பப் படிச்சுக் காட்டின பாட்டெல்லாம் பச்சையாப் புரியுதுங்க! கேக்கறதுக்கு ரோம்ப நல்லாருக்குங்க! எனக்கு இப்ப வயது அறுபது ஆவுது. இதைக் கேட்டதும் பழைய ஞாபக மெல்லாம் வருதுங்க!

சென்னையில் வாழும்
ஒரு குட்டரோகி
27.8.60.

கவிதை முன்னுரை

பண்டைக்காலத்தில் கவிதை நூலுக்கு முன்னுரையாக யாரேனும் ஓர் அறிஞரிடம் சாற்றுக் கவி பெறும் வழக்கமிருந்தது; இந்நூற்றாண்டில் அவ்வழக்கம் மாறி, ஆசிரியரோ பிறரோ உரைநடையில் முன்னுரை எழுதும் வழக்கம் ஏற்பட்டது. இப்போது கவிதையிலேயே கவிதை நூலுக்கு முன்னுரை எழுதும் வழக்கம் மீண்டும் ஏற்பட்டிருக்கிறது. கவிதை நூல்களுக்கு மட்டு மன்றி, சிறுகதை, புதினங்களுக்கும் கவிதையில் முன்னுரை வழங்கும் வழக்கத்தைச் சுரதா மேற்கொண்டிருக்கிறார்.

அவர் எழுதிய முன்னுரைகளில், தம்முடைய நூலான 'பட்டத்தரசிக்கு' அவர் எழுதிய முன்னுரை

குறிப்பிடத் தக்கது. உண்மையாகச் சொன்னால், பட்டத்தரசியைவிட அதன் முன்னுரையே அழகும், செறிவும், நயமும் மிக்கது.

திராவிட இயக்கம் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்த காலகட்டத்தில் 'கொங்குதேர் வாழ்க்கை' என்ற குறுந்தொகைப் பாடலை மையமாக வைத்துப் படைக்கப்பட்ட நெடுங்கவிதை பட்டத் தரசி. அதன்பாட்டுடைத் தலைவன் நக்கீரன். கலைஞர் மு.கருணாநிதி நடத்திய முரசொலி இதழில், இக்கவிதை முதன்முதலாக வெளியிடப்பட்டது.

பட்டத்தரசி வெற்றிப் படைப்பு அன்று என்றாலும், அகவற்பாவில் எழுதப்பட்ட அதன் முன்னுரையில் சுரதா ஒரு வான வேடிக்கையே நடத்தியிருக்கிறார். அகவல் எழுதவிரும்புவோர் தம் உள்ளத்தில் அகப்படுத்த வேண்டிய பாடல் அது!

வாசல்...

கொடுத்துச் சிவந்த குமணன் கைபோல்
மேற்குவான் சிவந்து வீளங்கு கின்றது.
பொன்செய் கொல்லர் பொழுதுநிலை அறிந்து
அடிக்கும் கருவியை ஒடுக்கு கின்றனர்
ஓலைக் கணக்கரின் வேலைநிற் கின்றது.
சந்தனப் பொதிகை தனைவிட் டெழுந்து
தென்றல் சோலையைத் தேடிவரு கின்றது.
எதிர்பார்த் திருந்த மதுமலர்க் கூட்டம்
வந்த காற்றுக்கு மணந்தரு கின்றது.

குருத்து நிலவே! கொல்லிப் பாவையே!
கண்ணே! மணியே! கனியே! சுவையே!
பூவிற் சிறந்த தாமரைப் பூவே!
பாவிற் சிறந்தநே ரிசைவெண் பாவே!

என்று ஒருவரை ஒருவர் புகழ்ந்தும்
கட்டித் தழுவியும், கனியிதழ் ஊன்றியும்,
தொட்டும் சுவைத்தும் தோளில் சாய்ந்தும்,
ஒருவர் நிழலில் ஒருவர் ஒதுங்கி,
இருவரெனும் தோற்றம் இன்றி இருந்து,
இனிமைத் தனிமையில் தினந்தினம் மகிழும்
காதலர் இருவர் கனிமொழி பேசி,
வரிநிழல் வழங்கும் சோலைவரு கின்றனர்.
காமச் சங்கீதம் பாடத்
தலைவி சுவைத்துத் தருகிறாள் முத்தம்!

அதற்குப் பின்னர், அந்த அணங்கு
பார்வையால் தூய பளிங்கு காட்டியும்,
காம்பு மூங் கிலைத் தோள்தனில் காட்டியும்
சின்ன இடைதனில் மின்னல் காட்டியும்
ஆங்கொரு புறத்தில், காற்றினால் ஆடும்
அ:றிணை மலர்க்கொடி அருகினில் நின்று,
எதிரே நிற்கும் இளமை அழகனை
மாவடுப் பார்வையால் 'வாருங்கள்' என்கிறாள்.
அந்தச் சமயம் அங்கொரு வண்டு
பருவ மடைந்த நிருவாண மலரின்
வாயைச் சுவைத்தும், மதுவுண்டு மயங்கியும்
பாட்டுப் பாடிப் பறந்துதிரி கின்றது.

வாலிபன் அந்த வண்டினை நோக்கி
"அந்தி மலர்களைச் சந்திக்கும் வண்டே!
பறக்கும் நாவற் பழமே! நாங்கள்
மலரைத் தொடுக்கும் மானிடர்; நீயோ
மலரில் படுத்து மன்மதச் சுவைபெறும்
மரகதச் சோலையின் மருமகப் பிள்ளை!

பூவின் பொடியையும், பொங்குசெந் தேனையும்
அன்றாடம் நன்குநீ ஆராய்ச்சி செய்கிறாய்;
அதனால் மலர்களின் ஆராய்ச்சி தன்னில்
உனக்குமேல் அனுபவம் ஒருவர்க்கு மிராது!
ஆதலால்! பறக்கும் ஆறுகால் வண்டே!
உன்னிடம் ஒன்று கேட்க நினைக்கிறேன்
எனது தலைவியின் இளங் கூந்தல் போல
மணத்தை வழங்கும் மதுமலர் உண்டா?
பாட்டை நிறுத்திப் பதில்சொல் வண்டே!"

குறுந்தொகைப் பாடல் திருவிளை யாடலாய்
ஆகும் போது அந்தச் செய்யுள்
பட்டத் தரசி ஆனால் என்ன?[2]

காவியக் கடிதங்கள்

1960 வாக்கில் 'முன்னணி' என்ற இலக்கிய ஏடு ஒன்று சென்னையிலிருந்து வெளிவந்தது. குமுதம் அளவில் சிறப்பாக வெளிவந்தது. அதில் சுரதாவின் கவிதைகள் · தொடர்ந்து வெளியிடப்பெற்றன.

சுரதாவின் கவிதைக்காகவே பலர் அதை விரும்பி வாங்கினர்.

அதில் சுரதா கடிதங்களைக் கவிதையாக்கி யிருந்தார். அவற்றுள் மாவீரன் நெப்போலியன் தனது மூத்த மனைவியான ஜோசஃபைனுக்கு எழுதிய கடிதமும், இராஜாராம் மோகன்ராய் இந்தியப் பெண்கள் உடன்கட்டையேறும் கொடுமை பற்றி வைஸ்ராய் பெண்டிங் துரைக்கு எழுதிய கடிதமும் குறிப்பிடத்தக்கவை. அக்காவியக் கடிதங்கள், கவிதை விரும்பிகளிடையே ஒரு பரபரப்பை ஏற்படுத்தின என்றே சொல்லலாம்.

அந்தக் காலத்தில் விளம் பரமான பெரிய பத்திரிகைகளே கவிஞர்களுக்குப் பத்து ரூபாய் அன்பளிப்பு வழங்கிய நேரத்தில், 'முன்னணி' சுரதாவுக்குச் சுளையாக நூறு ரூபாய் அன்பளிப்பு வழங்கியது பாராட்டத் தக்க செய்தியாகும்.

நெப்போலியன் நினைக்கிறான்

பொன்முடிபோற் சிறந்தவளே! பிரான்சு நாட்டின்
பூந்தோட்டம் போன்றவளே! பளிங்குப் பெண்ணே!
என்னைவிட மூத்தவள்நீ; எனினும் நல்ல
இளந்தளிரைப் போன்றவள்நீ; இன்பக் கேணி.
நின்றுநின்று மயக்கிவரும் மயில்நீ; ஈர
நிலவும் நீ, நித்திரைச்சத் திரமும் நீயே.
தின்பனவும் உண்பனவும் இரவில் தொட்டுத்
திறக்கின்ற புத்தகத்தின் தொகுப்பும் நீயே.

முதல்மனைவி நீயெனக்கு; நானு னக்கு
முதலிரவுக் காதலனாய் வாய்க்க வில்லை
புதுமதுவும் நீயன்று; வண்டு கிண்டாப்
புதுமலரும் நீயன்று.மாதே உன்றன்
சதையிதழ்கள் கண்ணாடிக் கன்னம் ஆசை
தருகின்ற மதிவதனம் இவற்றுள் இங்கே
எதுபுதிது? நாடோறும் நீயும் நானும்
இட்டுவந்த முத்தமன்றோ புதிது பெண்ணே!

முன்னழகும் பின்னழகும் முகத்தின் வாசல்
முத்தழகும் மூக்குமல ரழகும், வெள்ளை
அன்னமிடும் நடையழகும் காட்டிக் காட்டி
அன்றாடம் கொடியிடையை ஆட்டி ஆட்டிக்
கன்னமென்னும் கனிகளிலே கனிவு காட்டிக்
கண்களினால் காதலுக்குப் பாதை காட்டிப்
பொன்னுருவை நின்னுருவில் காட்டி என்னைப்
பூரிக்க வைத்தவளே! இதனைக் கேளாய்.

இடியரசன் யானென்றே வீரம் பேசி
எனையெதிர்த்தான் ஆஸ்திரியன்; பின்னர் அந்த
முடியரசன் சந்தித்தான்; ஒருநாள் பேசி
முடிவெடுத்தோம், ஒப்பந்தம் செய்து கொண்டோம்.
மடிமலரே! ஆஸ்திரிய நாட்டு மன்னன்
மகளான மேரியைநான் மணந்து கொண்டால்
நெடுங்கடலைத் தரையெனவே நினைக்கும் இந்த
நெப்போலி யன் திட்டம் புகழை யெட்டும்!

உருவத்தாற் சிறந்தவளே! என்றன் நெஞ்சில்
உலாவிவரும் எண்ணமெனும் பெண்ணே! கண்ணே!
பருவத்தாற் பழுத்தவள்நீ! ஆனால் அந்தப்
பட்டாடைக் கட்டழகி நெஞ்சில் ஏறும்
கருவத்தாற் பழுத்தவளே ஆவாள்; அந்தக்
காரிகையை நான்மணக்க மறுத்தே னாயின்
இருபத்து நான்காம்நாள் நின்ற சண்டை
இனித்தொடரும் என்பதனால் ஏற்றுக் கொண்டேன்[3].

இப்படிக்கு
நெப்போலியன்.

வாழைப்பூ வேதாந்தம்

பெருங்கீர்த்தி பெற்றஷெல்லி பிறந்த நாட்டில்
பிறந்தவரே, லார்டுபெண்டிங் துரையே! நாட்டின்
வருங்காலம் அறிந்தவரே, வணக்கம்; சொல்லில்
வல்லவரே நல்லவரே வணக்கம்; உள்ளம்
திருந்தாத முழுமூடர் இந்த நாட்டில்
தீமைபல புரிகின்றார்; எனவே, அன்பே
உருவான பெண்டிரெலாம் அடிமை யாகி
உறைக்கிணறு செய்கின்றார் கண்ணீ ராலே!

அல்லிப்பூ முல்லைப்பூ தாம ரைப்பூ
அத்தனையும் வானத்தை நோக்கிப் பூக்கும்
மெல்லியதல் வாழைமட்டும் தலைகு னிந்து
வீதிமண்ணைப் பார்த்தபடி பூக்கும்; நாட்டின்

நல்லவர்கள் என்கருத்தை ஆத ரிக்க
நாலைந்து வைதீக வெறியர் மட்டும்
வல்லமையே இல்லாமல் கூவு கின்றார்
வாழைப்பூ வேதாந்தம் பேசு கின்றார்.

கன்பூஷ்யஸ் என்பானோ சீன ஞானி;
கற்றறிந்த மாமேதை, உலகம் போற்றும்
அன்பாளன்; அவன்தந்தை ஹூலி யாங்கை.
அவனுயரம் பத்தடியாம்; சென்ற திங்கள்
முன்கோபத் தோடென்னை வெட்ட வந்த
முட்டாளும் அவனுயரம் இருப்பான்; கல்வி
முன்னேற்ற மில்லாதார் வைத்தி ருக்கும்
மூலதனம் வேறென்ன, கோபம் தானே!

குழந்தைகளை ஈன்றிடவோ இந்துப் பெண்கள்
குலவிமகிழ்ந் திருப்பதற்கோ பார்சிப் பெண்கள்
அழகொடுதம் இல்லத்தை வைத்துக் கொள்வோர்
ஆப்கானி தேசத்துப் பெண்கள் என்பர்.
பழையகதை இவையனைத்தும்; இன்றோ இந்துப்
பத்தினிகள் உடன்கட்டை ஏற வேண்டும்!
வீழியிலொன்று கெட்டுவிடின் முகத்தில் மற்றோர்
வீழிவாழக் கூடாதா? கூடா தாமே!

கால் கழிந்த கட்டிலெனும் பாடை மீது
கதைமுடிந்த சதைப்பிணத்தைப் படுக்க வைத்தே
நால்வரதைச் சுடுகாடு சுமந்து செல்லல்
நடைமுறைதான்; நாமிதனை அறிவோம்; ஆனால்

பால்நிலவுப் பத்தினியும் பாடை மீது
படுப்பானேன், உடன்கட்டை ஏறு வானேன்?
வேல்தொடரும் விழியுடையாள் கணவ னோடு
வெந்துவிட வேண்டுமென்ப தென்ன நியாயம்?

தசரதன்தான் தடுத்தானா? கேடு கெட்ட
தத்துவத்தை இராமன்தான் தடுத்திட் டானா?
அசைவறியா வீரத்தால் விவேகத் தாலே
அரசாண்ட மூவேந்தர் தடுத்த துண்டா?
பசையறியாக் கற்களினால் சிலைகள் செய்த
பல்லவர்க்கோ கன்னடர்க்கோ, தெலுங்கு பேசும்
விசயநகர் வேந்தர்க்கோ, கீதை தந்த
விட்டுணுக்கோ தீமையென்று பட்ட துண்டோ?

வித்தைபல கற்றவரே, தீராத் தீமை
விளைத்து வந்த பிண்டாரிக் கூட்டந் தன்னை
அத்திமரத் தின்பழத்தை நண்டின் கூட்டம்
அடிவைத்து மிதிப்பதுபோல் மிதித்தீர்; இன்னும்
எத்தனையோ அரியசெயல் புரிந்தீர்; தங்கள்
இதயத்தில் நல்லெண்ணம் இருப்ப தாலே
சித்திரத்தேர் தீப்பற்றி எரிதல் போன்ற
தீச் செயலைத் தடுப்பீரென் றெண்ணு கின்றேன்.[4]

இப்படிக்கு
இராசாராம் மோகன்ராய்.

சொல்விளக்கம்

'சொல்விளக்கம்' என்னும் சுவையான கவிதைப் பகுதியைச் சுரதா தம் கவிதை ஏட்டில் தொடங்கி யிருந்தார். சொல்விளக்கம் சுவையான சொல் விளையாட்டு; பத்திரிகைத்தனமான பகுதி. இதில் கவிஞரின் புலமையும், நுட்பமும், சிந்தனை யாற்றலும் பளிச்சிடக் காணலாம்.

கலப்பை

நிலத்திலுள்ள மேல்மண்ணைக் கீழ்மண் ணோடு
நீண்டுள்ள ஏர்முனையால் ஒன்று கூட்டிக்
கலப்புதனை உண்டாக்கும் கார ணத்தால்
கலப்பையென்று பெயரிட்டார், கலப்பை மூலம்
நிலத்தில் நாம் உண்டாக்கும் கலப்பை, மாந்தர்
நெஞ்சத்தில் உண்டாக்கி விடுவோ மாயின்
கலப்புமணம் உருவாக வழியுண் டாகும்;
கலப்புமணத் தால்சாதி செத்தே போகும்.[5]

பாம்பு

'பாம்பென்னும் பெயரிதற்கு வந்த தேனோ
பாம்பாட்டி' எனக்கேட்டாள். புற்றில் தூங்கும்
தாம்பென்னும் பாம்புதனை ஆட விட்டுத்
தன்பிழைப்பை நடத்திவந்தோன் அவளை நோக்கி,
'வேம்புக்கும் அரசுக்கும் வேர்கள் உண்டு;
வேங்கைக்கும் மானுக்கும் கால்கள் உண்டு;
பாம்புக்குக் காலில்லை; எனினும் நாகப்
பாம்புக்கெல் லாம்புவியே பாத மாகும்.

'பாம்பெல்லாம் பூமியையே பாத மாகப்
பயன்படுத்திக் கொள்ளுகின்ற கார ணத்தால்
பாம்புக்குப் 'பாதம்பூ' எனப்பே ரிட்டார்;
பாதம்பூ என்பதையே நாமெல் லோரும்
பாம்பென்று கூறுகின்றோம் தாயே!' என்றான்
பாராட்டி னான் சொக்கன்; அவனை நோக்கி,
'வேம்பத்தூர் நான்போக வேண்டும்; என்னை
வெறுங்கையோ டனுப்பாதீர் ஐயா!' என்றான்.[6]

அம்மி

முதற்கட்டம் முற்றியது; மெச்சும் எச்சில்
முத்திரைக்குப் பின்னேதும் நிகழ வில்லை;
புதுச்சங்கத் தமிழ்போன்றாள், வட்ட மிட்டுப்
பூத்ததொரு பூப்போன்றாள் அருகில் நின்று
கதைசொன்னான்; கட்டழகி கேட்டாள். பின்னர்க்
கருங்குழலி மிளகாயை அரைத்துக் கொண்டே,
''எதற்கத்தான் நாமிந்தக் கல்லை 'அம்மி'
என்கின்றோம் கூறுங்கள்'' என்று கேட்டாள்.

''செம்பவளம் போன்றவளே, மிளகாய் மஞ்சள்
சிறுபூண்டு போன்றவற்றைக் குழவிக் கல்லால்
அம்மியம்மி அரைத்திடவே உதவுங் கல்லை
அம்மிக்கல் என்கின்றோம் அன்பே'' என்றான்.
கொம்புமலர் போன்றவளோ அதனைக் கேட்டுக்
குளத்துமலர் போலாகி'' இனிமேல் நீங்கள்
அம்பலத்தில் கட்டுச்சோ றவிழ்த்தல் போலே
அனைவர்க்கும் தமிழ்விளக்கம் தாரீர்'' என்றாள்.

எச்சில் இரவுகள்

எச்சிலை நாம் அருவருப்போடு பார்க்கிறோம். சோரம் போனவளை 'எச்சிற்கனி' என்று இகழ் கிறோம். பிறப்பது முதல் சாகும்வரை வாழ்க்கையே சுரதாவுக்கு எச்சிலாகப் படுகிறது. 'அனைத்தும் எச்சில்' என்பது அவர் கொள்கை. எனவே அவர் வியர்க்கும் இரவுக்கு 'எச்சில் இரவு' என்று பெயர் கொடுத்தது மிகமிகப் பொருத்தமே.

குழந்தையோ பெற்றோர் எச்சில்
கூடையோ குறத்தி எச்சில்
பழங்களோ பறவை எச்சில்
பால்தயிர் இடைச்சி எச்சில்
மழையெலாம் முகிலின் எச்சில்
மதுவெலாம் வண்டின் எச்சில்
எழில்மிகு புடவை வேட்டி
எல்லாமே நெய்வோன் எச்சில்!

குளத்துநீர் மீனின் எச்சில்
குளிரிதழ்ச் சத்து முத்தம்
விளைத்திடும் போதில் எச்சில்;
விதையெலாம் நம்வாய் எச்சில்;
சுளைப்பலாப் பழமும் சோறும்
சுவைத்திடும் பொழுதில் எச்சில்;
அளந்துநூல் நினைவின் எச்சில்
அனைத்துமே எச்சில் எச்சில்![8]

'எச்சில் இரவில்' அவர் எடுத்துக் கொண்ட கருப்பொருள் (theme) முக்கியமன்று. செய்யுளில் வழக்கமாகச் சொல்லும் 'சமாச்சாரங்களையே' இதிலும் சொல்லியிருக்கிறார். ஆனால் கவிஞராகிய இவர், உரைநடையை ஏன் இங்கு வாகனமாக்கிக் கொண்டார் என்பதே சிந்தனைக்குரியது. செய்யுள் யாப்பில் ஏற்பட்ட சலிப்பா? இருக்கலாம். அல்லது உரைநடையிலேயே கவிதைச் சிற்பத்தைச் செதுக்கிப் பார்த்தாலென்ன?-என்ற ஆர்வமும் காரணமாக இருக்கலாம்.

இந்த ஆர்வம் இளங்கோவடிகளுக்கும் இருந்தது. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் எழுதினார். பாரதிக்கும் இருந்தது; வசன கவிதை எழுதினார். பாவேந்தருக்கும் இருந்தது; 'காதல் வாழ்வு' எழுதினார்.

'வசன கவிதையே புதுக்கவிதை' என்னும் தவறான எண்ணம் ஒன்று நம்மிடையே பரவியிருக்கிறது.

'வசனகவிதை' என்பதற்குப் பொருள் சொல்ல வேண்டுமானால், 'வசனத்தில் எழுதப்பட்ட கவிதை' என்றுதான் பொருள்கொள்ள வேண்டும். அவ்வாறு எழுதப்படும் வசன கவிதை மரபு (tradition) சார்ந்தும் இருக்கலாம்; புதுமை (Modernism) ர்ந்தும் இருக்கலாம்.

சுரதாவின் எச்சில் இரவு, மரபுசார்ந்த வசன கவிதை. வேண்டுமானால் இப்படிச் சொல்லலாம். சுரதா, மரபுச் செய்யுளில் சொல்லியிருப்பதை வசனத்தில் சொல்லியிருக்கிறார் என்று.

இருபதாம் நூற்றாண்டுப் புதுக்கவிதை என்ப தற்குப் பிரெஞ்சு, ஜெர்மன், ஆங்கிலக் கவிஞர்களும் திறனாய்வாளர்களும் நிறையச் செய்திகளைப் பண்புகளாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். புதுக் கவிதையை வசனத்திலும் எழுதலாம்; எழுதப் படுகிறது.

வசனத்தைக் கவிதைக்கு எதிர்ச் சொல்லாகக் கருதக் கூடாது. சிந்தனை, கற்பனை, உணர்ச்சி, நயம், அழகு யாவும், வசனம் கவிதை ஆகிய இரண்டுக்கும் பொதுப் பண்புகள். வசனத்துக்கு எதிர்ச்சொல் செய்யுள்தான்.

செய்யுளில் கவிதை எழுதுவது மேடையில் ஆடுவது போன்றது; வசனத்தில் கவிதை எழுதுவது கயிற்றின் மேல் ஆடுவது போன்றது.

செய்யுளில் கவிதை எழுதும்போது எதுகை, மோனை, சந்தம், அடி, தொடை என்ற பக்க வாத்தியங்கள் உண்டு; வசன கவிதைக்கு அந்த வசதிகள் இல்லை. கயிற்றின் மேல் ஆடுபவன் கொஞ்சம் நிலைகுலைந்தாலும் கீழே விழுந்து விடுவது போல,

வசனகவிதை கொஞ்சம் தவறினாலும் வெறும் சொல்லடுக்காகிவிடும்.

செய்யுட் கவிதை எழுதுவதைவிட வசனகவிதை எழுதுவதற்குச் செறிந்த அறிவும், நுட்பமான ஆற்றலும் வேண்டும்.

இப்போது சுரதாவின் வசனகவிதைகளைப் படியுங்கள்:

அவள்-
பல் முளைக்காமலும்
நாவில்
சொல் முளைக்காமலும்
பிறந்தவள்.

முதல் பருவத்தில்
அவள் ஒரு பேதை;
மூன்றாம் பருவத்தில்
அவள் ஒரு மங்கை;
மாமன் மகன் அவளை
மாலையிட்ட போது
அவளொரு மங்கல மடந்தை.

அவள் வதனவட்டம்
ஒரு நிலாநிலம்.
அவள் வாயிதழ்கள்
சேர்ந்து பிறந்த
செம்பவளங்கள்..
அவள் அழகு நெற்றி

ஓர் அகத்திப்பூ!
அவள் அடிவயிறு
ஆலந்தளிர்.

மேலே கனிந்த கனிகள்!
கீழே-
மலர்ந்தமலர்கள்.
நடுவில்-
கட்டுண்ட காய்கள்.
அதற்கும் கீழே
உப்புநீரால்
அடிக்கடி நனையும் ஓரிலை.
அவள்-
ஆடும்போது மயில்
பாடும்போது குயில்
ஓடும்போது மான்
கூடும்போது ஒரு குளிர்நதி.[9]

அவனோடு அவள்
பலாப்பழத்தின்
நெருப்புநிறச் சுளைகளைப் போன்று
நெருங்கியிருக்கவும்,
வரகின்
சின்னஞ்சிறு கதிர்களைப் போன்று
சேர்ந்திருக்கவும் தெரிந்தவள்.[10]

அவன்-
அவளுடைய
தோள்களைத் தொட்டான்.

அப்போது அவள்,
நெல்லின் முனையளவு தூரம்
ஒருகாலைத் தூக்கி
நிலத்தில் வைத்தாள்.
அப்போது அவன் ஆசையோ
வில்லின் முனையளவு தூரம்
விரிந்து சென்றது.[11]

அவளுடைய நீள்விழிகள்
நீலவானத்தின் இறக்குமதி.
சேல் கெண்டைகள் போட்டுவைத்த
சிறுசேமிப்பு.
அவள் கூந்தலோ
அவசரத்தில் அவிழ்ந்து தொங்கும்
இருண்ட மேகம்.
வெளிச்சத்தைக் கண்டு
விலகிச் செல்லாத
விநோத இருட்டு.[12]

கடல்-
இந்த உலக உருண்டையின்
முகத்தில் தோன்றிய
முதற்பள்ளத்தில் தவறிவிழுந்து-
விழுந்த நாளன்று முதல்
இன்றுவரை
ஓயாமல் அழுதுகொண்டே இருக்கும்
ஓர் ஆதிவாசி.

மரியாதைக்குரிய
மகரமீன்களும்

திமிர்பிடித்த
திமிங்கலங்களும்
வாடகை கொடுக்காமலே
வாழ்ந்து வரும் ஒரு வீடு!
கன்னியின் அழுகை இருக்கிறதே
அது,
ஒரு கண்ணீர் விளம்பரம்.
இந்தக் கடல் இருக்கிறதே
இது-
மிகப்பெரிய தண்ணீர் விளம்பரம்.

மண்ணால் அமைந்த தீவுகளே
இதன்மீதுள்ள மச்சங்கள்.
உப்பும் பவளமும்
முத்தும் சங்கும்
ஈரக்கடலின் எச்சங்கள். [13]

சுவரும் சுண்ணாம்பும்

இத்தலைப்பில் சுரதா, தாம் நடத்திய ஏடுகளில் திரைப்படச் செய்திகளைக் கவிதையாக்கியிருந்தார். நடிகைகளைப் பற்றிச் சிற்றின்பச் சுவைபடச் 'சூளை சுப்ரதீபக்கவிராயர்', 'மன்மதமணி' என்ற புனை பெயர்களில் ஒளிந்துகொண்டு அவர் எழுதுவது வழக்கம். இப்பகுதிக்குச் 'சுவரும் சுண்ணாம்பும்' என்று பெயர் சூட்டக் காரணம் என்னவென்று நான் ஒருமுறை சுரதாவைக் கேட்டபோது, 'சும்மாதான்' என்று பதிலிறுத்தார்.

'உங்கள் தகுதிக்குச் சுவரும் சுண்ணாம்பும் தேவைதானா?' என்று கடற்கரைப் பேட்டியில் அவரைக் கேட்டபோது, ''அதை ஒரு காரணத்துக்காக எழுதினேன். காதல், வீரம், பக்தி - இம்மூன்று பொருளைப் பற்றி எழுதுவதுதான் கவிதை மரபாகத் தொன்று தொட்டு இருந்து வந்திருக்கிறது. அம்மரபை மட்டந்தட்ட எழுதப்பட்டதுதான் இந்தச் சுவரும் சுண்ணாம்பும்'' என்று கூறினார்.

இப்பகுதியில் எடுத்துக்கொண்ட 'விஷயம்' 'ஒருமாதிரியாக' இருந்தாலும் கவிதை தரமானது.

அலேக்' நிர்மலா அழகுமுயல் வளர்க்கிறார்!

காளி தாசனின் காவிய நாயகி
மங்கை சகுந்தலை மான்வளர்த் தாளாம்!
வரதுங்க ராம பாண்டியன் மனைவி
மரகதப் பச்சை மயில்வளர்த் தாளாம்!

காலஞ் சென்ற நடிகைகண் ணாம்பா
நாக்கு நீண்ட நாயொன்று வளர்த் ததை
ஏடும் செந்தமிழ் நாடும் அறியும்!

கச்சித மான கட்டுடல் அமைந்த
அச்சார நடிகை 'அலேக்' நிர்மலா
முன்றெழுத் துடைய முயல்வளர்க் கின்றார்.

நீண்ட செவிகளும் நெல்லிக்காய் விழிகளும்
வெடித்த பருத்திபோல் வெள்ளை நிறமும்
கொண்ட சிறுமுயல் குதித்துக் குதித்து
விளையாடும் காட்சியை வேடிக்கை பார்ப்பதே
பூச்சர நடிகையின் பொழுது போக்காம்.

விநோத நடிகையின் வீட்டிலே வளரும்
சலவை முயலுக்குத் தழைகளே சாதமாம்!

அந்தி நிலாவெனும் அந்த நடிகையின்
மெல்லிய மடியே முயலுக்கு மெத்தையாம்!
சேரிடம் அறிந்து சேர்ந்தபின், அம்முயல்
வேறிடம் செல்ல விரும்புமோ தோழரே! [14]

நெய்த செய்திகள்

சுரதா பட்டு நெய்யும் நெசவுக் குடும்பத்தைச் சேர்ந்தவர். பழக்கமான குலத்தொழில் பாவலரை விட்டுப் போகுமா? இங்கே செய்திகளையும் பட்டுப்போல் நெசவு செய்கிறார். சின்ன சின்ன வண்ண மத்தாப்புகள்!

கன்னியும்
தென்னையும்

பத்து வயதோ பாவாடைப் பருவம்
பதினைந்து வயதோ பூவாடைப் பருவம்.

பூத்து மலர்ந்த பொன்னி என்பவள்
பத்தும் ஐந்தும் தொத்திய வயதினள்.

அந்த மங்கையோ அழகுச் சண்பகம்
அந்தி நிலவுக் கறிமுகம் அவள்முகம்;
சிறிது கற்றவள்; செந்நிறம் பெற்றவள்.

அன்னவள் ஒருநாள் அந்தி மாலையில்
வீட்டை விட்டு வெளிப்புறம் வருகையில்
கூந்தல் ஏந்திய குளிர்இளந் தென்னையின்
தனிக்காய் ஒன்றவள் தலையில் விழுந்தது.

தலையில் வீழ்ந்ததால் தரையிற் சாய்ந்தனள்
மிதக்கும் மேகமும் மின்னலும் சேர்ந்து

தரையில் வீழும் தன்மையைப் போல!
வீங்கிய தேங்காய் வீழ்ந்ததால் அந்தப்
பெண்ணழகி புதிய புண்ணழகி யாயினள்!

வாயி லிருந்தும் மலர்மூக்கி லிருந்தும்
வழிந்தது செந்நீர்; எழுந்தது கண்ணீர்!

கண்ணைவிட் டெழுந்த கண்ணீர் ஊர்வலம்
கட்டாந் தரையைத் தொட்டு நின்றது
தெங்கம் பழத்தினால் பொன்னியின்
அங்கத்தி லோர்தழும் பமைந்து விட்டதே!

- செய்தி: தினத்தந்தி 11.5.63.

சிலம்புச் செல்வர் இலங்கை செல்கிறார்

மேடை மேகம் மீசை ம.பொ.சி.
இங்கிலீஷ் ஏப்ரல் இரண்டாம் தேதி
இலங்கைக்குப் போய்வரத் திட்டமிட் டிருக்கிறார்.

சேறாகும் குளத்துச் சிறுமீன் தின்பவர்
சேறாகாத தென்கடல் இலங்கையில்
பத்துநாள் சுற்றுப் பயணம் செய்தபின்,
விண்ணைக் கிழிக்கும் விமானத்தில் ஏறிச்
சென்னை வந்து சேருவார் விரைவிலே.[16]

- சுரதா இதழ், 1.4.69.

எதையும்
எழுத முடியும்

தொடர்பே இல்லாத இரண்டு பொருள்களைத் தொடர்புப் படுத்தி, அதுவும் சிலேடையில் பாட வல்லவன் காளமேகம். எப்படிப் பாடச் சொல்லிக் கேட்டாலும், பாடமுடியும் என்பது பேராற்றல் தான்? சுரதாவுக்கும் அந்த ஆற்றலுண்டு.

பரமசிவனுக்கும் பாரதிதாசனுக்கும் என்ன சம்பந்தம்? ஆனால் 'பரமசிவனும் பாரதிதாசனும்' என்னும் தலைப்பில் ஒரு பாடலைக் கைத்தறிக் கண்காட்சி மலரில் எழுதினார் சுரதா.

பரமசிவனும்
பாரதிதாசனும்

அடியலங் காரம், செய்யுள்
அணியலங் காரம், பாட்டுப்
படையலங் காரம் கண்ட
பாரதி தாச னுக்கு
நடையலங் கார முண்டு.
நாலுபேர் மெச்சத் தக்க
உடையலங் கார மெல்லாம்
உண்டே! அச்சிவனுக் குண்டோ?

முன்னேறு முன்னே றென்று
முழங்கிய பாவேந் தர்க்குப்
பொன்னாடை போர்த்திச் சான்றோர்
பொற்கிழி அளித்த துண்டு.
தென்னாடு துதிக்கும் அந்தச்
சிவனுக்குச் சான்றோர் யாரும்
பொன்னாடை போர்த்த துண்டோ?
பொற்கிழி அளித்த துண்டோ?

ஏடுடைப் புரட்சிப் பாடல்
எழுதிய பாவின் வேந்தர்
ஓடையில் குளித்த துண்டே!
உடைகளைத் துவைத்த துண்டே!
காடுடைப் புழுதி பூசும்
கபாலியர் குளித்த துண்டோ?
தோடுடை செவியன் வேங்கைத்
தோலுடை துவைத்த துண்டோ?

வடியாத செந்தேன் இல்லை.
வற்றாத தடாக மில்லை.
அடையாளம் புலித்தோ லாடை
ஆயினும் கிழியக் கூடும்.
உடையது கிழிந்தால் வேறோர்
உடையுண்டோ சிவனி டத்தில்?
கிடையாதே! பாவேந் தர்க்குக்
கிடையாதே வேட்டிப் பஞ்சம்!

கைத்தறித் துணிகள் அந்தக்
காலத்தில் இருந்தும், வண்ணச்
சித்திரப் புலியின் தோலைச்
சிவபிரான் உடுத்து வானேன்?
பத்தரை மாற்றுத் தங்கப்
பாவேந்தர் தம்மைப் போலக்
கைத்தறி வேட்டி வாங்கிக்
கட்டிக்கொண் டிருக்க லாமே![7]

குறிப்பு விளக்கம்

1. பக்.32, சர்ரியலிசம், பாலா
2. பக்.5, பட்டத்தரசி
3. பக்.183, தேன்மழை
4. பக். 192, ''
5. பக். 93, சொல் விளக்கம், தேன்மழை
6. பக்.98 '' ''
7. பக்.101 '' ''
8. பக்.267, எச்சில் ''
9. பக்.1, மரகதச் சோலையே மஞ்சம், எச்சில் இரவுகள்
10. பக்.2, ''
11. பக்.15. ''
12. பக்.92, பகுத்தறிவு மனைவி, எச்சில் இரவுகள்
13. பக்.65, அவனுக்கு மன்மத மயக்கம், ''
14. பக்.16, சுரதா இதழ் 1.6.68
15. பக். 179, நெய்த செய்திகள், தேன்மழை
16. பக்.14, சுரதா இதழ் 1.4.69
17. பக்.41, உடையலங்காரம், துறைமுகம்.

சுவரும் சுண்ணாம்பும்



சுரதா

மனிதர் சுரதா

ஒரு கவிஞனுக்குள் எப்போதும் இரண்டுபேர் இருக்கிறார்கள். ஒருவன் மனிதன்; மற்றொருவன் கவிஞன். இந்த இரண்டு பேருக்கும் சில சமயங்களில் எந்த உறவும் இருப்பதில்லை. மனிதன் மனிதனாகவே நடந்துகொள்கிறான்; கவிஞன் கவிஞனாகவே நடந்து கொள்கிறான். சில நேரங்களில் இந்த இரண்டு பேரும் முரண்படுவதுகூட உண்டு.

ஏதன்சு நகரப் பேரவையில், தம்மீது சுமத்தப் பட்ட குற்றச்சாட்டுகளை மறுத்துப் பேசிய சாக்ரட்டீஸ் கவிஞர்களைப் பற்றிய தம் சொந்தக் கருத்தையும் சொல்கிறார்:

> "கவிஞர்களுடைய சிந்தனை ஆற்றலையும், தம் படைப்புக்களில் அவர்கள் வெளிப்படுத்தியுள்ள கருத்துக்களையும் கண்டு, நான் மிகவும் வியப் படைந்தேன். அவர்களைக் கண்டு அவர்களோடு உரையாடியபோது, அவர்களுட் பலர் ஒன்று மறியாத வர்களாகவும், முட்டாள்களாகவும் இருந்ததை அறிந்துகொண்டேன்.

''அப்படிப்பட்டவர்களால், மிகவும் உன்னத மான கவிதைகளை எப்படி எழுதமுடிந்தது என்பதைப் பற்றிச் சிந்தித்துக் கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தேன்.

''கவிஞர்கள் சாமியாடி போன்றவர்கள். சாமியாடி எப்படிச் சில நேரங்களில் 'அருள்வாக்குச்' சொல்லுகின்றானோ, அது போல் இவர்களும் சில நேரங்களில் மிக உயர்ந்த கருத்துகளைத் தம்மையும் மீறி வெளிப்படுத்துகிறார்கள்.'' [1]

சாக்ரட்டீஸ் மேலே கூறிய கருத்தில் ஓரளவு உண்மையும் இருக்கலாம். சில கவிஞர்களின் நடவடிக்கை இயல்பாக இருப்பதில்லை.

பைசா நகரக் காவலர்கள் தனது வேலைக் காரனை அடித்துவிட்டார்கள் என்பதற்காக அந்நகரக் காவல்துறைத் தலைவனைத் தன்னோடு வாட் போருக்கு வரும்படி அறைகூவல் விடுத்தான் கவிஞன் பைரன்.

'ஏரியல்' என்ற தனது படகில் நிர்வாணமாகப் படுத்து வெயில் காய்ந்துகொண்டிருந்த ஷெல்லிக்குத் திடீரென்று கவிதை ஆவேசம் வந்துவிட்டது. அப்படியே எழுந்து கடற்கரையில் நடந்து வந்ததோடு, ஆடவரும், பெண்டிரும் கூடியிருந்த தன்வீட்டு வரவேற்பறையிலும் நுழைந்துவிட்டான்.

மெய்விளக்கக் கவிஞன் ஜான் டன்னைப் பற்றி அவனது வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடும்போது, அவனை ஒரு 'Cynic' என்று குறிப்பிடுகின்றனர். cynic-என்ற சொல்லுக்குச் சிடுசிடுப்புக்காரன், எப்போதும் பிறர்மீது குற்றங் காண்பவன் என்னும் பொருள் உண்டு. சுரதா ஒரு சுவையான மனிதர்.

சுரதாவிடம் மிகவும் எச்சரிக்கையாகப் பழக வேண்டும். எந்த நேரத்தில் என்ன சொல்லை எடுத்து வீசுவார் என்று சொல்ல முடியாது. பிறர் அறியாமையைச் சகித்துக்கொள்ள மாட்டார். சரக்கில்லாதவனை மதிக்க மாட்டார்; தூக்கி எறிந்துவிடுவார்.

1974ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் சுரதா சேலம் வந்திருந்தார். அப்போது அவருடைய 'சுரதா இதழ்' புத்தக வடிவில் 'ஆஃப்செட்' வண்ணப்படத்தோடு வெளியாகியிருந்தது. புதுப்பெண்ணைத் தேனிலவுக்கு அழைத்து வருவதுபோல், மெருகு குலையாத 'சுரதா' இதழோடு வந்திருந்தார் சுரதா.

''சுரதா பொங்கல் மலர் சிறப்பாக வெளியிடப் போகிறேன். எனக்குச் சேலத்தில் விளம்பரங்கள் திரட்டித் தர வேண்டும்'' என்று கேட்டார். சேலம் சுரதா அன்பர்களுள் குறிப்பிடத்தக்கவரான புலவர் அருச்சுனனும் நானும் இரண்டு மூன்று நாட்கள் அலைந்து திரிந்து ரூ 2,000/-க்கு விளம்பரம் திரட்டித் தந்தோம்.

சேலத்தில் பெரிய செல்வரும், பேருந்து உரிமை யாளரும், ஆலை அதிபரும், காங்கிரஸ் தலைவரு மான ஒரு பிரமுகரிடம் விளம்பரம் பெறுவதற்காகச் சுரதாவை அழைத்துச் சென்றோம். அவர் அப்போது வெளியில் சென்றிருந்தார்.

அங்கே அப்போது இரண்டு பெரும்புலவர்கள் அமர்ந்திருந்தனர். இருவரும் பழுத்த ஆத்திகர்கள்; வைராக்கிய வைணவர்கள். கம்பராமாயணத்திலும், காந்தியத்திலும் அளவுகடந்த பற்றும் ஈடுபாடும் கொண்டவர்கள். விவேகானந்தரின் பக்தர்கள். சுரதா விடம் அன்பும் மரியாதையும் கொண்டவர்கள். சுரதாவைக் கண்டவுடன், 'கவிஞரே! வருக!' என்று ஆவலோடு வரவேற்று அன்புடன் அளவளாவினர்.

சுரதாவின் பேச்சு இலக்கியத்தைக் குடைந்து கொண்டு சென்று இறுதியில் விவேகானந்தரிடம் வந்து நின்றது. பேசிக் கொண்டிருந்த சுரதா திடீரென்று 'நிவேதிதா விவேகானந்தரின் காதலி' என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்.

உடனே அவ்விடத்தில் ஒரு நிசப்தம்! புலவர்களின் முகம் பேயறைந்தாற் போல் ஆயிற்று.

சற்றுநேர மௌனத்துக்குப் பின், 'இக்கருத்தை நீங்கள் ஆதாரத்தோடு நிரூபிக்க முடியுமா?' என்று கேட்டார் ஒரு புலவர். மிகவும் புண்பட்ட உணர் வோடு அக் கேள்வி அவர் உள்ளத்திலிருந்து புறப்

பட்டு வந்தது. கோபத்தால் அவர் உடல் நடுங்கியது. நானும் புலவர் அருச்சுனனும் செய்வதறியாது திகைத்தோம்.

சுரதா போருக்குத் தயாராகிவிட்டார். ''நான் இங்கே விளம்பரம் வாங்கிப் போக வந்தேன். சரி! அது கிடக்கட்டும். இப்போது இதை (விவேகானந்தர், நிவேதிதா விவகாரத்தை) இரண்டிலொன்று பார்த்து விடுவோம்'' என்று தோள்தட்டிக் கோதாவில் குதிக்கத் தயாரானார். கவிஞரைச் சமாதானம் செய்து எப்படியோ வெளியில் அழைத்து வந்துவிட்டோம்.

அடுத்த நாள் நான் மட்டும் தனியாகப் போய் அச் செல்வரைக் கண்டு முதல் நாள் நிகழ்ச்சிக்குச் சமாதானம் சொல்லிவிட்டு, ஒரு பக்க விளம்பரம் வாங்கிக்கொண்டு வந்தேன்.

சுரதாவுக்கு எப்போதும் போலித்தனம் பிடிக்காது. திறமையில்லாத எவரையும் மதிக்கமாட்டார். கொஞ்சம்கூடக் கூச்ச நாச்சமில்லாமல்-வேண்டியவர், நீண்டநாள் பழகியவர் என்ற தாட்சண்யம் பார்க்காமல் உள்ளத்தில் நினைப்பதை அப்படியே அம்மணமாகக் கொட்டிவிடுவார். சிலசமயம் கேட்பவர் நடுங்கி ஒடுங்கிப் போகுமளவுக்கு உண்மைகளைப் பச்சையாக உதறிவிடுவார்.

கவிஞர் நன்னியூர் நாவரசன் சுரதாவின் அணுக்கச் சீடர்களில் ஒருவர்; காவிரிக் கரைப் பண்ணையார்.

கவிதை, பேசும்பாணி, நடை உடை பாவனை யாவற்றிலும் சுரதாவை நூற்றுக்கு நூறு பின் பற்றுபவர். பொதுவாகச் சொன்னால் நாவரசன் ஒரு 'சுரதாயிஸ்ட் (Suradhaist). சில சமயங்களில் சுரதா நன்னியூர் போய், நாவரசன் வீட்டில் அரசமரியாதை யோடு தங்குவது வழக்கம்.

1982இல் பொங்கல் விழாக் கவியரங்கிற்குத் தலைமை தாங்குவதற்குக் கரூர் வந்திருந்தார் சுரதா. நன்னியூர் நாவரசனும், சுரதாவின் கவிதையன் பர்களும், கல்லூரிப் பேராசிரியர் சிலரும், சுரதா தங்கியிருந்த அறையில் கூடியிருந்தனர். சுரதா தமக்கே யுரிய பாணியில் சுவையாகவும் சுறுசுறுப்பாகவும் பேசிக்கொண்டிருந்தார்.

டில்லியில் மிகப் பெரிய பதவியில் இருப்பவரும், கவிஞருமான ஒரு பிரமுகரின் தம்பி ஒருவரும், அக் கூட்டத்தில் இருந்தார். அவர் ஓயாமல் தமது தமையனாரைப் பற்றியும், அவருடைய கவிதையைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தார். கேட்டுக் கேட்டுச் சுரதாவுக்கு அலுத்துப் போய் விட்டது. கடைசியில் எரிச்சலும் வந்துவிட்டது.

''என்னய்யா சுத்த முட்டாளா இருக்கிற. ஓயாம உங்கண்ணன் புகழையே பேசிக் கிட்டிருக்கிறயே! நீ என்ன சாதிச்சிருக்கிறே?'' என்று வெடுக்கெனக் கேட்டார் சுரதா. அந்த நண்பர் முகம் தொங்கிப் போயிற்று.

எம்.ஜி. இராமச்சந்திரன் திரைப்பட உலகில் புகழேணியின் உச்சியில் இருந்த நேரம். அவருடைய சொந்தப் படமான நாடோடி மன்னன் தமிழ் நாடெங்கும் பெருத்த வசூலுடன் ஓடிக் கொண் டிருந்தது. அப்படத்தில் பாடல் எழுத சுரதாவுக்கும் வாய்ப்புக் கொடுத்திருந்தார். 'வருக வருக வேந்தே' என்று தொடங்கும் பாடல் அது. அப்படத்தைத் தொடர்ந்து அடுத்து வெளிவர விருந்த தமது படங்களிலும் எம்.ஜி.ஆர். சுரதாவுக்கு வாய்ப்புக் கொடுத்திருந்தார்.

'தமிழ் சினிமா' என்ற பத்திரிகையை நடத்தி வந்த கரீம் என்பவர், நடிக நடிகையர்களைப் பற்றிக் கேவலமாக எழுதியிருந்தார் என்பதைக் காரணமாக வைத்து அவரைக் கண்டனம் செய்ய, சென்னை விஜயா தோட்டத்தில் எம்.ஜி.ஆரால் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. திரையுலகப் பிரமுகர் களும் பிரபல எழுத்தாளர்களும் அக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர். சுரதாவும் அழைக்கப் பட்டிருந்தார். ஆனால் எம்.ஜி.ஆர். அக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

அக் கூட்டத்தில் தமிழ் சினிமா இதழையும் அதன் ஆசிரியரையும் கண்டித்துப் பலர் பேசினர். எல்லாரும் எம்.ஜி.ஆரைப் பாராட்டிப் பேசத் தவறவில்லை. கூட்டத்திற்கு வந்திருந்த எழுத்தாளர் சாண்டில்யன், ''எம்.ஜி.ஆர். 'வரலாற்றுப் படக் கதாநாயகனாக நடிப்பதற்கென்றே பிறப்பெடுத்தவர்;

அதற்கேற்ற முகவெட்டு அவருக்கு இயல்பாக அமைந்திருக்கிறது'' என்று புகழ்ந்து பேசினார்.

அதற்குப் பின் பேச எழுந்த சுரதா, ''நண்பர் சாண்டில்யன் எம்.ஜி.ஆரின் முகத்தைப் பற்றிக் கூறிய கருத்தை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. எம்.ஜி.ஆருக்குச் சதுரமுகம். அதுவே வட்டமுகமாக இருந்திருந்தால் வரலாற்றுக் கதாநாயகனுக்கு மிகவும் பொருத்தமாக இருக்கும்'' என்று பேசிவிட்டு அமர்ந்துகொண்டார். அதன் விளைவு'' எம்.ஜி.ஆர். படத்தில் அவருக்கு அளிக்கப்பட்டிருந்த பத்தாயிரம் ரூபாய் வாய்ப்பு பறிபோயிற்று.

சுரதா கதராடை அணிந்துகொண்டு கொஞ்சநாள் காங்கிரஸ் மேடைகளில் பேசிக்கொண்டிருந்தார். சென்னையில் காங்கிரஸ் கூட்டம். மேடையில் காலஞ்சென்ற முன்னாள் அமைச்சர் பக்தவத்சலம் வீற்றிருந்தார். சுரதாவைப் பேசச் சொன்னார்கள்.

சுரதா எழுந்ததும், ''நான் காந்தியைவிட ஒழுக்கமானவன்'' என்று பேச்சைத் தொடங்கினார்.

காங்கிரஸ் மேடை சுரதாவைத் தாங்குமா? அன்றிலிருந்து காங்கிரஸ் கூட்டத்துக்கு அவரை யாரும் அழைப்பதில்லை.

இவர்தான் மனிதர் சுரதா!

குறிப்பு விளக்கம் ★

1. Apology of socretes - by plato.

கவிஞர் சுரதா

1973ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17,18 தேதிகளில் பூம்புகார் விழா. சிற்பச் சிறப்பு மிக்க சிலப்பதிகாரக் கலைக்கூடம் மாண்புமிகு கலைஞர் கருணாநிதி அவர்களால் அன்று திறந்து வைக்கப்பட்டது. இரண்டு நாட்களும் அடர்த்தியான முத்தமிழ் நிகழ்ச்சிகள்.

தமிழகத்தின் இயல் இசை நாடக வித்தகர்கள் அத்துணைப் பேரும் கடற்கரைக் கூடாரங்களையும், சுற்றுப்புறத் தங்கல் மனைகளையும் மொய்த்துக் கொண்டிருந்தனர்.

கவிஞர்களாகிய எங்களுக்கு வைத்தீஸ்வரன் கோயிலில், ஒரு தங்கல் மனையில் அறைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. கவிஞர் சுரதாவும் கொத்த மங்கலம் சுப்புவும் எனக்கு முன்பாகவே அங்கு வந்து தங்கியிருந்தனர். கவிஞர்களின் உபயோகத்துக்காக ஒரு தனிக் காரும் வழங்கப்பட்டிருந்தது.

கவிஞர் சுரதா ஓர் உரையாடல் மன்னர் (Conversationist). ஓயாமல் விடிய விடியப் பேசுவார். 'சுரதா இரவுக்கும்', 'முதலிரவுக்கும்' சுவையில் அதிக வேறுபாடில்லை. சங்க இலக்கியம் முதல் சண்முகம்

பட்டணம் பொடி வரை அன்று சரளமாகப் பேசினார் சுரதா. நேரம் போனது தெரியவில்லை.

பூம்புகார் விழாவில் கவியரங்கத் தலைமை கண்ணதாசனுக்கா சுரதாவுக்கா என்பதில் நிகழ்ச்சி அமைப்பாளர்களிடையே பெரிய குழப்பம். கடைசியில் கவியரங்கத் தலைமை கண்ணதாசனுக்குக் கொடுக்கப்பட்டது.

தமிழறிஞர் கி.வா.ஜ. தலைமையில் நடை பெற்ற வரலாற்றுக் கருத்தரங்கில் பலருள் ஒரு பேச்சாளராக முதல்நாள் நிகழ்ச்சியில் சுரதா இடம் பெற்றார். தம்மை ஒதுக்கிவிட்டார்கள் என்று சுரதா கருதிவிடக் கூடாதே என்பதற்காகக் கொடுக்கப்பட்ட ஆறுதல் பதவி அது. சுரதாவுக்கு அதில் வருத்தந்தான். உறுமிக்கொண்டே இருந்தார்.

இரண்டாம் நாள் விழா நிகழ்ச்சிகளைக் காண நானும் சுரதாவும் புறப்பட்டோம். டாக்டர் மு. வரதராசனார் தலைமையில் சிலப்பதிகாரப் பட்டி மண்டபம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. நானும் சுரதாவும் பார்வையாளர்களிடையே சென்று அமர்ந்தோம். எங்கள் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தவர் போலக் கவிஞர் கருணானந்தம் அவசரமாக மேடையைவிட்டு இறங்கி வந்தார்; என் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு பந்தலுக்கு வெளியே ஓடினார்.

''முருகு ஒரு பெரிய சிக்கல்! கண்ணதாசன் இன்று வரமுடியவில்லை என்று சொல்லிவிட்டார். பிற்பகல் சுரதாதான் கவியரங்கத் தலைமை ஏற்க வேண்டும். சுரதாவைச் சமாளிப்பது உங்கள் பொறுப்பு!'' என்று அழாக்குறையாகச் சொன்னார் கருணானந்தம்.

எனக்கு மிகவும் சங்கடமான நிலை. சுரதா மானப் பிரச்சனையில் எப்போதும் விட்டுக் கொடுக்காதவர். நான் சுரதா அருகில் சென்று நின்றேன்.

'என்ன?'-சுருக்கென்று சுரதாவின் கேள்வி தைத்தது. 'என்னோடு வாருங்கள், சொல்கிறேன்' என்று சொல்லி அவரை அழைத்துக்கொண்டு கார் அருகில் சென்றேன். 'காரில் ஏறுங்கள்' என்றேன். அவர் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டுக் காரில் ஏறிக்கொண்டார். 'நேராக வைத்தீஸ்வரன் கோயில் லாட்ஜுக்கு ஓட்டு' என்று காரோட்டியிடம் சொன்னேன். சுரதா புரிந்துகொண்டார்.

கவிஞர் கண்ணதாசனின் சாதிப் பெயரைச் சொல்லி,....வரலியா?' என்று கேட்டார்.

'நீங்கள்தான் இன்று கவியரங்கத் தலைவர்!' என்று சொன்னேன். ஆத்திரமும் கோபமும் கலந்த சொற்களால் சுரதா என்னை அருச்சிக்கத் தொடங்கி

விட்டார். அவரே ஓயட்டும் என்று பேசாமல் இருந்தேன். கார் விடுதியை அடைந்தது.

காஃபியும் பொடியும் கேட்டார்; தருவித்துக் கொடுத்தேன். எழுதுகோலையும், தாளையும் கையில் கொடுத்துத் 'தலைமைக் கவிதை எழுதுங்கள்' என்று சொல்லிவிட்டு, அவருடைய அறையை வெளியில் பூட்டிவிட்டேன், மற்றவர்கள் உள்ளே சென்று அவர் வேலையைக் கெடுத்துவிடக்கூடாது என்பதற்காக.

கவியரங்கம் பிற்பகல் 4 மணிக்குத் தொடக்கம். 3 மணிக்கு அறைக் கதவைத் திறந்துவிட்டேன். ''இதோ ஆச்சு! கடைசிப் பாட்டு எழுதிக்கிட்டிருக் கிறேன். சே! கவிதை எவன் எழுதுவான்! விறகு பொளக்கற மாதிரி அலுப்பா இருக்குது'' என்னும் முணகிக்கொண்டே எழுதினார். சரியாக 4 மணிக்கு நானும் சுரதாவும் கவியரங்க மேடையில் ஏறினோம்.

''அப்பா! இப்பத்தான் எனக்கு உசிரே வந்தது!'' என்று சொல்லிப் பெருமூச்சுவிட்டார் கவிஞர் கருணானந்தம். அன்று சுரதா பாடியவற்றுள் 'கொசுக் கடித்து யானை யொன்றும் சாவதில்லை' என்னும் உவமை என் உள்ளத்தில் உடனே அப்பிக்கொண்டது.

கவியரங்கம் மாலை 6 மணிக்கு முடிவுற்றது. நானும் சுரதாவும் வேறு பல நண்பர்களும் வைத்தீஸ் வரன் கோயிலுக்குக் காரில் திரும்பிக் கொண்டி ருந்தோம். அந்தியிருள் கவியத் தொடங்கியிருந்தது.

''டிரைவர்! காரை கழாஅர்த் துறைக்கு ஓட்டு'' என்றார் சுரதா. வண்டி சற்று நேரத்தில் காவிரிக் கரையை அடைந்தது. முசிறிக்கருகில் மைல் கணக்கில் பரந்திருந்த அகண்ட காவேரி, இளைத்துப் போய் அவ்விடத்தில் ஒரு வாய்க்காலாக ஓடிக் கொண்டிருந்தது. ஆற்றின் கரையில் 'கழாஅர்த்துறை' என்று பெயர்ப் பலகை காணப்பட்டது.

சுரதா காரில் இருந்து இறங்கி அவசர அவசரமாக ஆற்றுச் சரிவில் ஓடினார். நானும் அவருடன் ஓடினேன். ஆற்று நீரை உள்ளங்கையால் எடுத்து முத்தமிட்டார் சுரதா. 'என்ன இது?' என்றேன் நான்.

'நீயும் முத்தமிடு! இது எவ்வளவு வரலாற்றுப் புகழ்மிக்க இடம்! ஆட்டன் அத்தி இங்குதானே நீரில் குடைந்து விளையாடினான்! ஆதிமந்தி இந்தக் கரையில்தானே கண்ணீர் மாலை தொடுத்தாள்!'' என்று சொல்லி மெய்மறந்து நின்றார். ஓ... உண்மையான ஒரு கவிஞனைக் கண்டேன்!

1975ஆம் ஆண்டு இந்திய நாடெங்கும் நெருக்கடி நிலை பிரகடனப்பட்டிருந்த நேரம். சென்னையில் தேசிய இலக்கியவாதிகளின் முக்கியமான இலக்கியக் கூட்டம். மேடையில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும், திராவிட இயக்கத்தைக் கட்டோடு பிடிக்காத இலக்கியவாதிகளும் வீற்றிருந்தனர்.

அவர்களுள் தமிழறிஞர் கி.வா.ஜ., நா.பார்த்தசாரதி ஆகிய இருவரும் குறிப்பிடத் தக்கவர்கள்.

மேடையிலிருந்த ஒருசிலர், திராவிட இயக்கத்தைப் பிரிவினை சக்தி என்று குறிப்பிட்டதோடு, திராவிட இயக்கத் தலைவர்களையும் நையாண்டி செய்து பேசத் தொடங்கினர். அமர்ந்திருந்த கூட்டத்தில் குமுறல்! ஆனால் வாய்திறக்க யாருக்கும் துணிச்சல் இல்லை, அவசர நிலை அடக்குமுறை அப்படி!

திராவிட இயக்கத் தலைவர்களெல்லாரும் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். சிலருக்கு நல்ல அடி! சிறைக் காவலர்களின் பூட்ஸ் காலால் மார்பில் உதைபட்டு ஒரு தலைவர் இறந்தே போனார். இந்த நேரத்தில் யாரால் வாய் திறக்க முடியும்!

ஆனால் கூட்டத்திலிருந்து ஒருவர் சிங்கம்போல் சிலிர்த்து எழுந்தார். ''டேய்! உங்களால் என்ன செய்ய முடியும்?'' என்று கர்ஜித்தார்.

மேடை வியப்பால் வாயடைத்து நின்றது. அவரை அடித்து நொறுக்கிப் போலீஸ் ஜீப்பில் ஏற்றப் போகிறார்கள் என்ற எதிர்பார்ப்போடு கூட்டம் அஞ்சி நடுங்கிக்கொண்டிருந்தது. நல்லவேளை! அப்படி ஏதும் நடக்கவில்லை!

அவர்தான் கவிஞர் சுரதா!

அவரைப்பற்றி அவர்

பாரதி இறந்த ஆண்டிலே பிறந்தநான்
பாரதி தாசனின் பாடலைப் பயின்றதால்
ஒருவா றென்னை உயர்த்திக் கொண்டேன்.

செய்யுள் இலக்கணம் தெரிந்து கொண்டபின்
தடுமாற்றம் இல்லாத் தகுதிபெற லானேன்.
தகுதி இருப்பின் தனித்தி யங்கலாம்.
அத்தகுதி என்னிடம் அதிக மிருப்பதால்
தமிழ்க்கவிதை உலகில் தனித்தியங்கு கின்றேன்.

பெரும்பாலும் கவிஞர்கள் பிறரைப்பின் பற்றி
எழுதும் வழக்கம் இங்குண்டே! அந்த
நிழல்வழி வாசலை விட்டு நீங்கி
எழுதும் கவிஞன்நான். இவரையோ அவரையோ
பின்பற்றி எழுதப் பிரியப் படாதவன்.

கணக்கைப் போன்றதே கவிதை என்பதால்,
கவிதை புனைந்திடக் கற்பனை வேண்டும்
என்னும் கருத்தைநான் ஏற்பதே இல்லை!

புகழ்வெறி எனக்குப் புள்ளி யளவும்
இல்லை! சராசரிப் பொறாமையும் இல்லை!
மடையனாய் இருப்பதில் உள்ள மகிழ்ச்சி
அறிஞனாய் இருப்பதில் இல்லை; ஆதலால்
முட்டாளாய் இருக்கவே முயன்று வருகிறேன்.
நானொரு கவிஞன்! அதைவிட
நானொரு நல்லவன் இந்த நாட்டிலே! [1]

என் முதல் சந்திப்பு

முப்பத்தைந் தாண்டுகட்கு முன்னர் யான்
பாவேந்தர், புதுவைப் பாரதி தாசனை
நேரில் சென்று சந்திக்க நினைத்தேன்.

பயணச் செலவுக்குப் பணமில்லை ஆதலால்,
நண்பர்கள் பலரை நாடினேன். ஒருசிலர்
கையையும், ஒருசிலர் பொய்யையும் விரித்தனர்.
புறப்பட்டுப் புதுவைக்குப் போக வேண்டுமே!
என்செய்வ தென்றுநான்
எண்ணிக்கொண் டிருக்கையில்,
மூவர் பாடிய கீவளூர் கோவிலில்
வெள்ளை யடிக்கும் வேலை கிடைத்தது.

மலைப்பிளவு வழியாய் வந்த பகைவர்கள்
கொள்ளை யடித்தனர் கோவிலை; நானோ
வெள்ளை யடித்தேன். வெள்ளை யடிக்கையில்
கலந்தசுண் ணாம்புநீர் கரத்தில் வழிந்ததால்
வழிந்த கரத்தில் எழுந்தது கொப்புளம்.

ஆறுநாட் கள்நான் சுண்ணாம் படித்தேன்.
ஆறாம்நாள் மாலை அதற்குரிய கூலியாம்
ஒன்றரை ரூபாய் உடனே கிடைத்தது.

புதுவையை நோக்கிப் புறப்பட்ட ரயிலில்
அன்றே ஏறினேன்; அடுத்தநாள் காலையில்
பாண்டியில் இறங்கிப் பாவேந்தர் அவர்களைக்
கண்டேன்! கண்டதும் களிப்படைந் தேனே.[2]

பாரதிதாசன்
என் ஆசான்

பகுதியெல்லாம் சொற்களுக்குத் தலைமை தாங்கும்;
பழங்களெலாம் விதைகளுக்குத் தலைமை தாங்கும்;
தகுதியெலாம் திறமைக்குத் தலைமை தாங்கும்
தந்தங்கள் பற்களுக்குத் தலைமை தாங்கும்
மிகுதியெலாம் நீரானால் கடலாய்த் தோன்றும்
மிச்சமெலாம் அறிவானால் புகழாய்த் தோன்றும்
விகுதியென நிற்காமல் பகுதி போன்று
விளங்கியவர் பாவேந்தர்; அவரென் ஆசான்.

கற்பிப்போன் ஆசானாம்; அவனி டத்தில்
கற்போனே மாணவனாம்; பண்டை நாளில்
கற்பித்தோன் பெரும்புலமை பெற்றி ருந்தான்
கற்றோனும் கசடறவே கல்வி கற்றான்
பற்பலநாள் பாவேந்த ரோடி ருந்தும்
பாடம்நான் கேட்கவில்லை; என்ற போதும்
சிற்றருவி போன்றவன்யான் அவரி டத்தில்
தினந்தோறும் பாட்டெழுதிக் காட்டி வந்தேன்.

நீட்டுயர்ந்த திண்ணையின்மீ தமர்ந்தி ருப்பார்;
நின்றபடி நானிருப்பேன்; 'உள்ளே நீபோய்ப்
பாட்டுயர்ந்த சுவடிகளை நீண்ட நேரம்
படி' யென்பார்'; 'நன்றாகப் புரிந்து கொண்டு
தீட்டுகநீ பாட்' டென்பார்; 'பிழையி ருந்தால்
திருத்துகின்றேன் நா' னென்பார்; எழுதி வந்து
காட்டிடுவேன், அதைத்திருத்திக் கொடுப்பார்; அந்தக்
கவிதைகளென் கைவசத்தில் இப்போ தில்லை.

நீரைப்போல் அண்ணாவும், திண்மை கொண்ட
நிலத்தைப்போல் பெரியாரும், கரிகாற் சோழன்
தேரைப்போல் அழகிரியும் இருந்த நாளில்
தீயைப்போல் பாவேந்தர் இருந்து வந்தார்.
நேருக்கு நேராகப் பகைவர் தம்மை
நின்றெதிர்த்த பெருங்கவிஞர், தம்வாழ் நாளில்
ஆருக்கும் அஞ்சாமல் வாழ்ந்து வந்தார்;
அவரேஎன் கவியாசான்; அதங்கோட் டாசான்

குறிப்பு விளக்கம்

1. *பக்.154, துறைமுகம்*
2. *பக்.155, துறைமுகம்*

அவரைப்பற்றிப் பிறர்

இரண்டு காரணங்களால் சுரதாவின் எழுத்துக்குச் சுரதா எழுத்தே நிகர். முதற்காரணம், அவர் பிறர் எழுதியதிலிருந்து திருடுவதில்லை, கருத்தையோ! தொடரையோ! தானே தோன்றிய சொற்றொடர் ஒவ்வொன்றும் இனிக்கும் கவிதைத் துணிக்கை.

-புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

சுரதாவின் எழுத்துக்களால் பயன்பெற்ற பலரில் நானும் ஒருவன். **-பேரறிஞர் அண்ணா**

கவிஞர் சுரதாவின் கவிதைகளில் எனக்கு அளவு கடந்த காதலே உண்டு. ஒவ்வோர் எழுத்தையும் எண்ணிப் பார்த்து எண்ணம் சேர்ப்பவர் அவர்.

-டாக்டர் மு.வரதராசனார்

என்னரும் நண்பர் சுரதா, நான் பிறந்த நெற் களஞ்சியமாம் தஞ்சை மாவட்டத்தின் சொற் களஞ்சியமாய்த் திகழ்ந்தவர். சுரதாவை எப்படி எப்படியோ எழுத வைத்துப் பார்த்து ரசித்து வருபவன் நான். ஆழமும் அழுத்தமும் வேகமும் விறுவிறுப்பும்

வாய்ந்த அவரது சொற்கள் அச்சம் தயை தாட்சண்ய மின்றி அம்புபோல் குறிவைத்த இடத்துப் பாய்ந்து தைக்கும் வலிவுடையன.

அவரது எழுத்துக்கள் எந்த நிலையிலும் தனித்தமிழ் உணர்வை, மொழிப் பற்றை, நாட்டுப் பற்றை ஊட்டிடத் தவறுவதேயில்லை.

-கலைஞர் மு. கருணாநிதி

பழம் பாடல்களை அறியாதவர்கள், இருபதாம் நூற்றாண்டு வடிவில் அவற்றைக் காணலாம். புதிய கருத்துக்களின் புதிய செய்யுள் வடிவத்தையும் காணலாம்! செய்யுளாக இனிக்கப் பாடும் நயம் சுரதாவிடம் எளிமையில் கைவந்திருப்பதைப் பாட்டில் எங்கும் காணலாம்.

-பல்கலைச் செல்வர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்

அரசுக் கவிஞராக இருந்த கண்ணதாசன் அவர்கள், ''கவிதைத்துறையில் சுரதா எனக்கு ஆசிரியர்'' என்றே ஒரு முறை குறிப்பிட்டது என் நினைவுக்கு வருகிறது. ஆகவே புகழ் பெற்ற கவிஞர்களால் போற்றப்பட்டவர் சுரதா.

-எஸ்.டி.சோமசுந்தரம் பி.இ.

முன்னாள் தமிழக வருவாய்த்துறை அமைச்சர்

அவரைப்பற்றி நான்

ஆங்கிலக் கவிஞர்களுள் மிகவும் சுவையானவன் பைரன்; ஃபிரஞ்சுக் கவிஞர்களுள் மிகவும் சுவையானவர் போதலேர். தமிழ்க் கவிஞர்களுள் மிகவும் சுவையானவர் சுரதா. சுரதாவோடு நெருங்கிப் பழகியவர்களுக்கு இந்த உண்மை விளங்கும்.

சுரதாவே ஒரு சுவையான கவிதை. அரை நூற்றாண்டுக் காலம் அவர் சுவையில் ஊறிப் போனவன் நான்.

தமது குருநாதர் சுப்புரத்தினத்தைப் போலவே சுரதாவும், புரிந்துகொள்ள முடியாத விசித்திரப் போக்குகளும், முரண்பாடுகளும் மிக்கவர்; கவிஞன் என்ற முனைப்பான செருக்கும் முரட்டுத்தனமும் உள்ளவர். ஆனால் இப் பண்புகள் யாவும் அவரை அணி செய்கின்றனவே தவிர, இழிவு படுத்தவில்லை. இன்னும் குறிப்பிட்டுச் சொன்னால், அவருடைய உள்ளத்தின் நுட்பமான பரிமாணங்களை, இக் குணங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

பொதுவாக இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்கள் ஏதாவது, ஓர் அரசியல் அல்லது சமூக இயக்கத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வது வழக்கம். சுரதாவுக்குத் தொடக்க காலத்திலிருந்தே அப்படியோர் ஈடுபாடு கிடையாது. தம்மையோர் நாத்திகர் என்று கூறிக்கொள்வார்; வாழ்க்கையிலும் ஒரு நாத்திக ராகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார். எந்த அரசியல் கட்சியிலும் அவர் உறுப்பினர் அல்லர்; கட்சிக் கட்டுப்பாட்டில் அடங்கியிருப்பது அவரால் முடியாத செயல். ஆனால் எல்லாக் கட்சியிலும் அவருக்கு நெருங்கிய நண்பர்கள் உள்ளனர்.

> **''மெய் விளக்கக் கவிஞர்கள் மக்கள் இயல்பை ஊன்றி நோக்கும் திறனாய்வாளர்களாக இருந்தார்களே அன்றி, அவ்வியல்போடு ஒன்றிவிடுபவர்களாக இல்லை.**
>
> **சமுதாயத்தில் உள்ள நன்மை தீமைகளைக் கண்டு உணர்ச்சி வசப்படாமல், ஒய்வு நேரப் பார்வையாளர்களாக இவர்கள் விளங்கினர். சமுதாயத்தின் நடைமுறைகள், மக்கள் வாழ்வின் ஏற்றத் தாழ்வுகள் ஆகியவற்றைப்பற்றி ஆர்வமோ, அக்கறையோ காட்டாமல் அவற்றைப் பற்றி மேற்போக்கான தம் கருத்துக்களைக் கூறும் இன்பத் தேவதைகள் இவர்கள்.**
>
> **இவர்கள் சமுதாயத்தின்பால் காட்டுகின்ற அன்பும் வருத்தமும் ஆழமற்ற நிலையில் இருக்கும். இவர்கள் விருப்ப மெல்லாம், மற்றவர் சொல்லாதவற்றைத் தாம் சொல்ல வேண்டும் என்பதுதான்.[11]**

என்று ஆங்கிலப் பேரறிஞர் சாமுவேல் ஜான்சன் குறிப்பிடுகிறார்.[1]

சுரதாவைப் பொறுத்தவரையில் இந்த விளக்கம் ஏறத்தாழ அவருக்குப் பொருந்துவதாக உள்ளது. சுரதாவுக்கென்று தனிப்பட்ட முறையில் எந்தக் கொள்கையும் கிடையாது. எந்த ஓர் 'இயக்கத்திலும்' (I'sm)அவருக்குப் பிடிப்புக் கிடையாது. கவிதைதான் இவர் கொள்கை; இயக்கம்.

> **''கவிஞனுக்கென்று தனிப்பட்ட இலட்சியம் இருக்க வேண்டும் என்பதில் எனக்கு நம்பிக்கை கிடையாது. அது ஒரு பித்தலாட்டம்!''**

என்று சுரதா வெளிப்படையாகவே பேசுவார்.

சுரதா உலக இயல்பையும் சமுதாய இயல்பை யும் கூர்ந்து பார்க்கிறார். அவற்றை இயல்பாகவும் சுவையாகவும் வெளிப்படுத்துகிறார். ஆனால் எந்த ஒரு குறிக்கோளுக்காகவும் வாதாடுவதில்லை; போர்க்குரல் கொடுப்பதில்லை.

சில கவிஞர்கள் வாழ்நாள் முழுவதும் எழுதிக் கொண்டிருப்பார்கள். ஜெர்மன் மகாகவி **கெதே** தமது எண்பதாவது வயதில் தமது பெருங்காப்பியமான 'பாஸ்து'வை எழுதி முடித்தார். பாரதிதாசனும் இறக்கும்போதுகூடத் தமது 73ஆம் வயதில் கவிதை எழுதிக்கொண்டிருந்தார். சுரதா தமது 40ஆம் வயதி லேயே கவிதை எழுதுவதை நிறுத்திக் கொண்டார். மற்றவர்கள் வற்புறுத்திப் பாடச் சொன்னால்

கவியரங்குகளுக்காகவும், பத்திரிகைகளுக்காகவும் எழுதுகிறார். தாமே விரும்பி எழுதுவதில்லை.

''அறிவு முதிர்ச்சி பெற்றிருக்கும் இந்த வயதில், நீங்கள் தமிழுக்கு ஒரு நல்ல காப்பியம் படைத்துத் தந்தால் என்ன?'' என்று நண்பர்கள் கேட்டால்,

''நான் இதுவரை எழுதியதற்கே நோபெல் பரிசு கிடைக்க வேண்டும்; சங்கப் புலவர்கள் குறைவாகத் தானே எழுதினார்கள்?''

என்று சொல்லிவிட்டுச் சிரிப்பார்.

கவிதை எழுதுவதை எளிய ஒரு பொழுது போக்காகச் சுரதா கருதுவதில்லை. கவிதை எழுதுவது என்பது அவருக்குக் கடுமையான உழைப்பு. கவிதை என்ற பெயரில், எதையாவது எழுதுவது என்பது அவருக்குப் பிடிக்காது. ஒரு வரி எழுதினாலும் அதில் அவர் உழைப்புத் தெரியும்!

பேரறிஞர் அண்ணாவுக்குச் சுரதாவின் பாட்டில் ஒரு வெறியே இருந்தது. **திராவிட நாடு, காஞ்சி** இதழ்களை அவர் நடத்தியபோது, ஏதேனும் மலர்கள் வெளியிட்டால் சுரதாவின் பாட்டை விரும்பிக் கேட்டு வாங்கி அழகாக வெளியிடுவார். ஆனால் அண்ணாவுக்கே அவ்வளவு எளிதில் பாடலைச் சுரதா எழுதிக் கொடுக்கமாட்டார்.

தில்லை வில்லாளனும், அரங்கண்ணலும், மறைந்த மதியழகனும் சுரதா வீட்டுக்கு நடையாய் நடந்து கவிதையை வாங்கிச் செல்வது வழக்கம். சிலசமயங்களில் சுரதாவைக் காஞ்சிக்குக் கடத்திக் கொண்டுபோய், ஓர் அறையில் தங்கவைத்துப் பாடலை எழுதி வாங்கிக்கொண்டு அனுப்புவார் அண்ணா. அப்படி எழுதப்பட்டதுதான் 'அவன் மகன் தான் ஆள்கின்றான்'[2] என்னும் பாடல்.

பாரசீகக் கவிஞர் உமர்கய்யாம் எழுதிய **ருபாயியாத்தை** ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த **ஃபிட்ஜரால்டு,** மூன்று முறை திருத்தம் செய்து அதை வெளியிட்டான். சுரதாவும் ஒரு திருத்தப் பிரியர். அவருடைய பாடல்கள் அவராலேயே திருத்தம் செய்யப்பெற்று வெவ்வேறு பத்திரிகைகளில் வரும். ஏன் என்று கேட்டால், 'திருத்தம் என் அறிவு முதிர்ச்சிக்கு அத்தாட்சி' என்று கூறுவார்.

சில திருத்தங்கள் சிறப்பாக இருக்கும்; சில திருத்தங்கள், 'ஐயோ! இப்படிச் செய்துவிட்டாரே!' என்று நாம் வருந்தும்படி இருக்கும்.

சுரதாவின் கவிதைப் பாணி சற்றுக் கடினமான ஒன்று. எல்லாராலும் எளிதில் பின்பற்ற முடியாத ஒன்று. ஆழ்ந்து அகன்ற கல்வியறிவும், நுட்பமான கற்பனை யாற்றலும், சிந்திக்கும் திறனும் உள்ளவர்களே சுர்தாவின் கவிதைப் பாணியில் வெற்றி

பெற முடியும். எனவே சுரதாவைப் பின்பற்றி எழுதிய வர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். ஆங்கிலக் கவிஞருலகில்கூட, மெய்விளக்கக் கவிஞர்கள் ஒரு நூற்றாண்டுக்காலம்தான் ஆதிக்கம் செலுத்தினர். அவர்களுள் ஐந்தாறு கவிஞர்களே குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவர்கள்.

தமிழகத்தில் சுரதாவைப் பின்பற்றி எழுதிய கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் நான், நீலமணி, பொன்னிவளவன், பனப்பாக்கம் சீத்தா, நன்னியூர் நாவரசன், எழில் முதல்வன், புதுமைவாணன் ஆகியோர்.

டாக்டர் எழில் முதல்வனின் தொடக்கக்கால வளர்ச்சி விறுவிறுப்பானது. ஆனால் அவர் கவிதைத் துறையை விட்டுவிட்டுத் திறனாய்வுத்துறைக்குச் சென்றுவிட்டார். பொன்னிவளவன் நல்ல விளம்பரத் தோடு வளர்ந்தார். அவர் படைப்புக்களும் நூல்களாக வெளிவந்தன. ஆனால் கவியரங்க மேடைகளில் அவர் கவனம் திரும்பிவிட்டது.

நீலமணியைப் பற்றி முக்கியமான ஒரு செய்தியைக் குறிப்பிட்டாக வேண்டும். சுரதா பாணியில், இவர் சுரதாவையும் விஞ்சியவர். கவிதைத் துறையின் தற்காலப் போக்கையொட்டி நானும் நீலமணியும் புதுக் கவிதைப் பக்கம் திரும்பி விட்டோம்.

நன்னியூர் நாவரசன், பனப்பாக்கம் சீத்தா ஆகியோரின் கவிதைகள் விட்டுவிட்டுச் சிறுதூறல் களாகப் பெய்துகொண்டிருக்கின்றன.

சுரதாவின் கவிதைப் பாணி (The School of Suradha Poetry)அவரோடு முடிந்துவிடும். ஆனால் அவரது பாணி, கவிதைத் துறையில் பல புதிய வாயில்களைத் திறந்துவிட்டிருக்கிறது. சொல்வதைப் புதுமையாகச் சொல்ல வேண்டும் என்னும் எண்ணத்தை இளைஞர் உள்ளத்தில் தோற்றுவித்தவர் சுரதா. படிமங்களை அடுக்கிப்பாடும் உத்தியும் (Imagism) உருவகங்களைச் செறிவாகப் பயன்படுத்தும் உத்தியும் இன்றைய புதுக்கவிதையில் விரும்பி வரவேற்கப்படுகின்றன. சுரதா மரபுக் கவிதையிலேயே இவ்வுத்திகளை வெற்றிகரமாகக் கையாண்டிருக்கிறார்.

நெடுந்தூரம் நடந்துவந்த மரபுக்கவிதை, சுரதா என்னும் குளிர்சோலையில் தங்கி இளைப்பாறிப், புத்துணர்ச்சி பெற்றுத் தன் புதிய பயணத்தைத் தொடர்ந்தது என்று சொல்லலாம்.

சுரதாவுக்குப் பிற மொழி இலக்கியப் பயிற்சி இல்லை. மேலைநாடுகளின் கவிதை வளர்ச்சியைப் பற்றி அறிந்திருந்தால்,அவருடைய வளர்ச்சி இன்னும் வியக்கத்தக்கதாக இருந்திருக்கும். இடைக்காலத் தமிழ்ப் பிரபந்தங்களிலேயே அவர் எண்ணங்கள் சுற்றிச் சுற்றி வருகின்றன.

இருபதாம் நூற்றாண்டுச் சிந்தனைகள் இவர் படைப்பில் குறைவு. என்றாலும் தமிழ்க் கவிதை வரலாற்றில் சுரதாவுக்கு நிலையான ஓர் அத்தியாயம் கட்டாயம் உண்டு.

குறிப்பு விளக்கம்

1. Samuel Johnson, Life of Cowley.

★★★

நூலாசிரியர்
கவிஞர் முருகு சுந்தரம்

கவிஞர் முருகு, கால் நூற்றாண்டுக்கும் மேலாகக் கவிஞர் சுரதாவோடு நெருங்கிப் பழகியவர்; நண்பர்; சுவைஞர். சுரதாவின் இகவாழ்க்கையையும், இலக்கிய வாழ்க்கையையும் நன்கு அறிந்து அணு அணுவாகச் சுவைத்தவர்; சுரதாவைத் தொட்டுப் பார்த்து, அடிக்கடி அவர் நாடித் துடிப்பைக் கற்று அறிந்தவர்.

பனித்துளிகள், கடைத்திறப்பு, தீர்த்தக் கரையினிலே, எரி நட்சத்திரம், சந்தனப் பேழை, வெள்ளை யானை, புகழ்பெற்ற புதுக் கவிஞர்கள், பாவேந்தர் ஒரு பல்கலைக் கழகம், குயில்களும் இளவேனில்களும் என்னும் இலக்கியச் செல்வங்களைத் தமிழுக்கு ஈந்தவர்.

தமிழக அரசு பாவேந்தர் விருதையும், நல்லாசிரியர் விருதையும் இவருக்கு வழங்கியது. தமிழ் வளர்ச்சிக் கழகம் இவரது **பனித்துளிகளுக்கு**க் கவிதைக் குரிய முதல் பரிசை 1981 ஆம் ஆண்டு வழங்கிச் சிறப்பித்தது.

-சேலத்துக் கவிஞர் முருகு சுந்தரம்

அரசியல் தலைவர்கள் அத்தனைபேரும்
அறிஞர்கள் ஆவதில்லை - கவி
வரிசையில் நிற்பவர் அத்தனை பேரும்
வான்புகழ் பெறுவ தில்லை.
முத்தமிழ்ச் சிந்தனை முருகு சுந்தரம்
முத்தாரக் கவிஞர் - அவர்
பத்துப் பாட்டைப் போலப் பாடல்
படைக்கும் நற் கவிஞர். -சுரதா

திரைமுகம்
கவிஞர் கண்ணதாசன்

இராகம்: வாசஸ்பதி **தாளம்: ஆதி**

முதல்

சேரன் செங்குட்டுவன் - சிலப்பதிகாரம்
செய்த இளங்கோ அடிகளின் அண்ணன், மன்னன்!

இடை

வீரன், வடநாட்டை வென்ற தீரன் - இமயத்தில்
வில்எழுதி, வெற்றிச் சொல்எழுதி வந்தவன் (சேரன்)

அடி

சங்க இலக்கியம்போல் மிகவும் சிறந்தவன்;
சூரியன் போலே யாருக்கும் தெரிந்தவன்,
சங்கீதம் ஓவியம் யாவும் அறிந்தவன்
சோழன் காவிரிபோலே நன்மை புரிந்தவன் (சேரன்)

பாரி(னி)ல் தமிழன் பெருமையைப் பறைசாற்றி
பெரியாரை, கவிஞரை, அறிஞரைப் போற்றி
பேரும் புகழும், எட்டுத் திசையிலும் தாண்ட
பாண்டியன்போல் பொன்முடி சூடி ஆண்ட (சேரன்)

இப்பாடல் திரைப்பட நகைச்சுவை நடிகர் திரு.டி.எஸ். துரைராஜ். அவர்களின் புதுமனைப் புகுவிழாவின் போது(10.9.1953) கலைமாமணி திரு. தில்ரூபா சண்முகம்-- அவர்கள் கேட்டுக்கொண்டதற் கிணங்க அவ்விழாவிலேயே உவமைக்கவிஞர் சுரதா அவர்களால் எழுதிக் கொடுக்கப் பெற்றது.

இப்பாடலுக்குக் கலைமாமணி திரு.தில்ரூபா சண்முகம் அவர்கள் இசையமைத்துப் பல மேடைகளில் பாடியுள்ளார். இப்பாடல் சுரதா அவர்களின் கையெழுத்திலேயே கலைமாமணி தில்ரூபா சண்முகம் அவர்களிடமிருந்து பெறப்பட்டது.

விலைப்பட்டியல்

நினைவின் நிழல்கள் என். ராஜசேகர் ஐ. ஏ. எஸ்.	–	ரூ. 40 . –
சங்க நூலாய்வும் சாமியும் வில்லியனூர் ந. வேங்கடேசன்	–	75 . –
கவிஞர் வாணிதாசன் கதை முனைவர் தி. தேவிதாசன்	–	28 . –
அறிஞர் பார்வையில் கவிஞர் (வாணிதாசன்) கோப்பெருந்தேவி கல்லாடன்	–	28 . –
மேடைக்கனிகள் கவிமாமணி கல்லாடன்	–	40 . –
கவித்தென்றல் கல்லாடன் முனைவர் அ. கனகராசு	–	22 . –
கவிஞர் தமிழ்ஒளியின் புரட்சிக் குரல் பாவலர் இலக்கியன்	–	35 . –
திருமுடிப் பெருமகனார் வி. மணிமாறன், எம். ஏ.,	–	30 . –
வரலாற்றுச் சுடர் வி. இராமலிங்கம், எம். ஏ.,	–	25 . –
'ஜீவா' நாரண துரைக்கண்ணன் 'முகம்' மாமணி	–	40 . –
50 சாதனையாளர்கள் 'முகம்' மாமணி	–	40 . –
பன்மொழிப் புலவர் புலவர் த. கோவேந்தன்	–	37 . –
பண்பாளர் பன்னீர் செல்வம் பேராசிரியர் மது. ச. விமலானந்தம்	–	40 . –

சர். பிட்டி. தியாகராயர் புலவர் ம. அய்யாசாமி, எம். ஏ.,	–	ரூ. 28 . –
சுயமரியாதை எழுச்சிப் பேருரைகள் தொகுப்பு : வெள்ளைபாம்பட்டு சுந்தரம்	–	24 . –
கம்பர் ஒளிமணிகள் பேராசிரியர் இரா. சேது	–	36 . –
தமிழ்விடு தூது – திறனாய்வு ஸ்டெல்லா மேரி ஜோஸ்பின்	–	26 . –
ஒட்டக்கூத்தர் – நாடகம் கவிஞர் கு. ம. கிருஷ்ணன்	–	20 . –
காளி வழிபாடு அனந்தபுரம் கோ. கிருட்டிணமூர்த்தி	–	28 . –
திருக்குறளில் நகைச்சுவை திருக்குறளார் வீ. முனிசாமி	–	32 . –
திருக்குறள் கதைகள் திருக்குறளார் வீ. முனிசாமி	–	16 . –
பாவேந்தரின் காளமேகம் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்	–	6 . –
பாவேந்தர் தோட்டத்துப் பூங்குயில்கள்	–	30 . –
பாவேந்தர் குயில்கள்	–	40 . –
பாவேந்தர் பூங்கா தொகுப்பு : கவிஞர் இளமாறன்	–	45 . –
மங்கையின் மாண்புக் கதைகள் பாகம் – 1	–	28 . –
மங்கையின் மாண்புக் கதைகள் பாகம் – 2	–	27 . –
நகைச்சுவைக் கொத்து உமா ராசன்	–	25 . –
பேரறிஞர்களின் உவமைகள் கே. எஸ். லெட்சுமணன்	–	17 . 50
கட்டடக்கலை (மாணவர்க்கு) கே. எஸ். லெட்சுமணன்	–	17 . 50

உயிரியலில் சில உண்மைகள் – ரூ. 23 . –
இரா. இலக்குமி நாராயணன், எம்.எஸ்.

கடல் காட்டும் விந்தைகள் – 26 . –
கெ. ஆறுமுகம் பி. எஸ். பி.டி..

அறிவியல் மனப்பான்மை – 16 . –
ப. செங்குட்டுவன் பி. எஸி., பி. டி..

இயற்கை பேசுகிறது – 20 . –
புலவர் கு. வை. இளங்கோவன் எம்.ஏ..

மலை விருந்து (இயேசுவின் சொற்பொழிவு) – 18 . –
அமல் ராஜ்

நீதிக்கட்சி நினைவுகள் – 28 . –
தொகுப்பு : செந்தாமரை

நீரிழிவு மருத்துவம் – 16 . –
டாக்டர் எச். செல்வராஜ்

கல்விக் கனிகள் – 28 . –

கல்விக் கதைகள் – 32 . –

தாயுமானார் கதை – 22 . –

வண்ணக்களஞ்சியம் (சிறுவர் சந்தப்பாடல்) – 44 . –
வெள்ளையாம்பட்டு சுந்தரம்

குடந்தை சேதுராமன் ஆய்வுக் கட்டுரைகள்
முதல் பாகம் – 60 . –
இரண்டாம் பாகம் – 60 . –
குடந்தை என். சேதுராமன்

சுரதா ஓர் ஒப்பாய்வு – 45 . –
கவிஞர் முருகு. சுந்தரம்

மண்வாசனையும் திரைக்கலையும் – 45 . –
க. ஜெயபாலன் M A , D F Tech ,

உடுமலை நாராயணகவி பாடல்கள் – 75 . –
தொகுப்பு : சங்கை வேலவன்

கை கொடுத்த கலையுலகம் – 55 . –
இயக்குநர் திலகம் கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

பாரதிதாசன்
பரம்பரை
இலக்கிய வரிசை

பாரதிதாசன்
பரம்பரை

அமுதும் தேனும்
வினாக்களும்
விடைகளும்

முருகு சுந்தரம் சுரதா

சேலத்துக் கவிஞர் முருகு சுந்தரம்
பாலத்துச் சோதிடம் பார்க்க மறுப்பவர்
ஈரோட்டை முதலிலும் காஞ்சியைப் பிறகும்
தேரோட்டத் தோடு திருவிழா நடத்தும்
திருவா ரூரையும் திரும்பிப் பார்ப்பவர்
பாவேந்தர் பாடலை நெஞ்சில் பதிப்பவர்
இரும்பு தூங்கும் சேலத்தில் பிறந்தும்
கரும்பு தூங்கும் கவிதைகள் வடிப்பவர்.

உவமைக் கவிஞர் சுரதா